அன்பளிப்பு.

உ

திருவள்ளுவர் நூல் நய

ஸ்ரீமான் ஆர். பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.

இயற்றியது.

ஸ்ரீமான் கா. சுப்பிரமணிய பிள்ளை, யம்.ஏ., யம்.எல்.

முன்னுரை எழுதியது.

MARA MALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

யம். இ. வீரபாகு பிள்ளை, பி.ஏ.
21, தர்மராஜா கோயில் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை.

விலை ரூ. 1.

முன்னுரை.

உலகெலாம் உய்வான் பொதுமறை வகுத்த ஆசிரியர் திருவள்ளுவனாரது அளப்பரிய மாண்பினைப் பாவலரும் நாவலரும் கற்றோரும் மற்றோரும் இந் நாள்வரை பொதுவகையாற் பலபடச் சீராட்டிப் பாராட்டிப் போந்தனர். ஆசிரியரது நூலின் பிண்டப் பொருளை நுணுகி ஆய்ந்து அதன் சொற்பொருள் நயங்களை யாவருக்கும் எளிதில் விளங்கும வண்ணம் தெள்ளென வகுத்தோதி ஊக்கமூட்டும் செவ்விய உரை நடைநூல் ஒன்று இலலாத குறையை நிறைவு செய்த பெரும் புலவா இததிருவள்ளுவர் நூல் நயம எழுதிய திருவாளர் சேதுப்பிள்ளையே யாவர்.

இக்கலைவாணர் தமது அரிய ஆராய்ச்சிப்பொருளை எண்வகையாகப் பகுததுககொண்டு கறபோருககு மனவெழுசசி உண்டாதல் பொருட்டு முதறகண் ஆசிரியரது பெருமையை எடுத்துரைத்தனா. ஆசிரியரது திருப்பெயர், தொல்காப்பியர், சேககிழாா முதலிய பேராசிரியரது திருநாமம போலவே குடிப்பிறப்பின் பெயராக தமது மரபின் வந்தது என்பதனை நயம்பெறத் திறமிக விளககினமை யாவரும வியககக கூடியது. ஆசிரியர் பொருள் மொழியைப் பொன்னே போல் போறறும புலவர் வழக்கை எடுததுக்காட்டு

முறையால் இவ்வுரை நூலார் நன்கு புலப்படுத்தியது எமது உள்ளத்திற்குப் பெருமகிழ்வு தருகின்றது. திருக்குறளின் மாசிலா மாண்பினைச சாத்தனார் கதையால தெளிவுபெற வைத்தனர். இவ்வாறு நூல் மாண்பிற்கு முதல் வியாசத்தே தோற்றுவாய் செய்யப்பட்டது.

திருவள்ளுவர் பெருநூலானது எல்லாச் சமயங்களுக்கும் எல்லாக் காலத்திற்கும் எல்லாச சாதியாருக்கும பொது வாயதோர் அரிய சீரிய விழுமிய நூல என்பதனை இவ்வுரை நூலார் திட்ப நுட்பமிக மேற்கோளகளால் தொகுத்துக்காட்டிய செம்மை கற்போர உள்ளததைக கொள்ளை கொள்ளும சிறத்தது.

முப்பா லுள்ளும முதற்பாலாய் உறுதிப் பொருள் நான்கிறகும மூலமாயுள்ள அறததின் சிறப்பினை ஆசிரியா விளககிய முறைமையை ஆய்ந்து தெளிவின், மனமொழி மெய்களால் உடன்பாட்டானும் எதிர்மறையானும் குற்றமற ஒழுகுதலே அறத்தின் நயமாமென்று உள்ளங்கை நெல்லிபோல் முதற்கண் இனிது விளககப்பட்டது. அததகைய அறச்சால்பு இல் வாழ்க்கைககும துறவற நிலைக்கும அடிப்படை யென்பது இனிது எடுத்துக காட்டப்பெறறது. இருநெறி ஒப்பினையும் இவ்வியாச முடிவில இந்நூலார் அறுதியிட்டுரைததனர்.

பின்னர் பண்டைத் தமிழரசியன் முறைமையைத் திருவள்ளுவனார் வகுத்தோதும் செம்மை ஆய்வான்

றொடங்கி பண்டைத்தமிழர்களது அறிவுசான்ற அரசி யற் கொள்கைச் சிறப்பையும், தற்காலத்து அரசங்கள் போன்ற பேரவைகள் 'ஐம்பெருங்குழு,' 'எண் பேராயம்' என்னும் இருபெரும் பிரிவுள் அமைந்து தோன்றிய நயத்தினையும் அக்காலத்து வணிகம் இற்றை நாட்போலவே யாண்டும் பரவிப்பெருவள னோடு திகழ்ந்த சீர்மையையும் நாட்டு மாந்தர் மானம், கல்வி, சான்றாண்மை, முயற்சியுடைமை முதலியவற் றால் தழைத்தோங்கிய தகைசான்ற சிறப்பையும் அவ ருள் வேளாளர் தலை நின்ற செய்தியையும் கூறி 'நாட் டின் பெருமை நற்குடி களாலாவது,' என்பதனை இவ் வுரை நூலார் இவ்வியாசத்தில் வற்புறுத்தி யுள்ளார்.

இனி, இந்நூலார், இன்ப இயலில் அதன் மெய்ப் பண்பினைப் பண்டை நூன்முறையால் முதற்கண் இனிது விளக்கினர். பின் களவியல் கற்பியல் என்னும் துறைகளைத் தெளிவுபெறக கோவை செய்தமைத்து சிற்றின்ப நெறிநின்று பேரின்பவழிச் செல்லும பெற் றியினை ஆசிரியர் தொல்காப்பியர் கட்டளைக் கிணங்க இறுதியிற் கூறி வியாசத்தை முடித்துக் காட்டியது யாவருக்கும் இன்பம் பயப்பதாகும.

இதுகாறும் திருவள்ளுவர் நூலின் பொருள் நயங்களைத் தொகுத்து வகுத்தோதிய இவ்வுரை நூலார் ஆசிரியரது சொற்பண்பினைத் திட்பமுற விளக்குவான் திருக்குறளின் உவமைத்திறத்தை ஆராய்ச்சி செய் துள்ளார். உவமை இயலபினை முதற்கண் தெளிவு

படுத்திய பின்னர் ஆசிரியர் சாதாரணப் பொருள் யாவற்றையும் மிக்க நயந்தோன்றும் வண்ணம் உவமையாக எவ்வாறு வழங்குகின்றார் என்பதையும், ஆசிரியர் இயற்கைப் பொருள் ஆராய்ச்சி நுணுக்கத்தில் எவ்வாறு இணையில்லாதவர் என்பதையும செவ்விய உதாரணங்களால் யாவருடைய உள்ளத்திலும் பசுமரத்தாணிபோல் விளக்கும இவ்வியாச நூலாரது வன்மை ஒப்பின்றி விளங்குகின்றது.

இந்நூலானது 'திருவள்ளுவரும் பரிமேலழகரும்' என்ற தலைப்பு வியாசத்துடன் முற்றுப் பெறுகின்றது. அவ்வியாசத்தே திருக்குறளுக்குள்ள உரைகள் பத்தனுள்ளும் பரிமேலழகரது உரை மிக்க சிறப்புடைய தென்பதை முதற் கண் குறிப்பித்து அதன் ஆசுகளையும் உண்மை ஆராயும் அளவையால நயமாக தெளிவுபடுத்திக் காட்டிய இந்நூலாசிரியரது நுண்ணறிவின் பெற்றி கற்றோருள்ளம் கனிவித்துப் பெரும்பயன் நல்குவதாகும். ஒரு சார்புபற்றி 'மக்கட்பேறு' என்பதனை 'புதல்வரைப் பெறுதல்' என்னும் சொற்றொடரால் மறைத்தும், அறிவறிந்த மக்கள் என்பதற்கு ஆரியர் கொள்கைக்கிணங்க 'ஆடவா' என்று வலிந்து பொருள் கொண்டும வடநூல் மதம் பற்றியே திருக்குறளுக்கு உரை இயற்றி பண்டைத் தமிழ் நூல் முறையை உலகறியாவண்ணம மறைவு செய்தும் தம் கொள்கைக்கு இயையுமாறு பொதுப்பொருள் கொள்ள வேண்டுமிடத்து சிறப்புப்பொருள்

கொண்டும் இலக்கண அமைதியின் பொருட்டு ஆசிரியர் உட்கிடைக்குமாறுய பொருள் கொண்டும் இவ்வாறு பல்வகையாக நூலாசிரியரது திருவுள்ளக் கருத்திற்கும் பண்டைத் தமிழ் வழக்கிற்கும் முரணுன பொருள் விளக்கினமையால பரிமேலழகர் உரைமுற்றிலு நன்றென்று கூறவொண்ணுது என்பதனை இவ்வுரை நூலார் நடுநிலையாகச் சுட்டிப்போந்தனர்.

இங்ஙனம் திருக்குறட் பெருநூலை நன்கு கற்றுய்ந் துணர விரும்பும் மாணவர் யாவருக்கும் அந்நூற் சொற்பொருள் வளப்பண்ட சாலைக்கு நயமிக்கதோர் திறவுகோலாக இவ்வுரை நடைச செந்தமிழ்ச் சீரிய நூலை இயற்றிய தமிழ் வாணர்க்கு தமிழ் உலகம் என்றும் கடப்பாடுடையது.

எழும்பூர்,
7—11—23.

K. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L.

பொருளடக்கம்.

திருவள்ளுவர் பெருமை.

ஆசிரியர் பிறப்பு முதலிய வரலாறு—வள்ளுவர் என்பது குலப் பெயரே—காப்பியக்குடி தொல்காப்பியர்—சேக்கிழார் குடி சேக்கிழார்—வள்ளுவர் வண்மை யுடையார்—புலவரது புகழ்—திருவள்ளுவர் காலத்திருந்த புலவர்கள்—திருக்குறளைப் புலவர் போற்றும் முறை—மணிமேகலை—சமயநூல் போற்றும் முறை—நெஞ்சு விடுதூது—திருக்களிற்றுப் படியார்—திருவாய்மொழி — சிந்தாமணி — கம்பர் — தமிழ்நாட்டில் நிகழ்ந்த சமயப்போர்—சைவமும் சமணமும்—திருக்குறளும் சங்கப்பலகையும்—திருமாலும் வள்ளுவரும்—வடமொழி மறையும் தமிழ்மறையும்—சாத்தனாரைப் பற்றிய கதை—சாத்தனார் தலைக்குத்து—முப்பால் தலைக்குத்துத தீர்த்தகதை—திருக்குறள் நூல் நயம். ... ... 1—18

திருக்குறள்—பொது நூல்.

திருக்குறள் உலகோர் போற்றும் உயரிய நூல்—திருக்குறள் பொது நூல்—சமயப் பொது நூல்—அறுவகைச் சமயங்கள்—கல்லாடர் மதிப்புரை—திருக்குறளில் விளங்கும் சைவசமய உண்மைகள்—திருககுறளும் வைணவ சமயமும்—திருக்குறளும் பௌதத சமயக கொள்கையும்—காலத்தாற் பொது நூல்—சாதிப பொது நூல்—பொது. நீதி பொதிந்த பெரு நூல்—திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளமை. ... ... 18—32

அறத்தின் திறம்.

திருக்குறள் முப்பால் நூல் என்று பெயர் பெற்ற காரணம்—வள்ளுவர் வீட்டு நெறியையும் கூறியுள்ளார்—அறம்,

இல்லறம் துறவறம் என இருவகைப்படும்—நன்னெறியும் தீநெறியும்—வினையின் பயன்—தீவினையைத் திரிகரணங்களாலும் நீக்குதல்—மனத்தில் மாசு இன்மையே அறம்—மனதில் நிகழும் மூன்று தீய எழுச்சிகள்: 1. அழுக்காறு, 2. அவா, 3. வெகுளி—தீய சொற்கள் நால்வகைப்படும்: (1) பயனில்லாச் சொல், (2) புறங்கூறல், (3) இன்னாச்சொல்-பொய்ச்சொல், (4) வாய்மையின் கட்டுரை—பொய்மையும் வாய்மையும்—நன்மை பயக்கும் பொய்ச்சொல்லும் வாய்மையாம்—ஓர் உதாரணம்—தீயசெயல்கள்—இன்னா செய்தல் (1) கொலை செய்தல், (2) கொல்லாமையே உயரிய அறமாகும்—ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல்—இன்னா செய்யாமையே தவம்—அன்பின் தன்மை—அன்பும் அறமும்—தீமைசெய்தார்க்கு நன்மைசெய்தல்—துறவற நெறி—உண்மைத் துறவும் போலித்துறவும்—பசுத்தோல் போர்த்த புலிகள்—மறைமொழி—இல்லறம் நன்றே? துறவறம் நன்றே? ... 32—57

அரசியல் முறை.

தமிழ் அரசின் தன்மை—நல் அரசின் குணங்கள்—அரசனைச் சுற்றியுள்ளோர்—ஊக்கமுடைமை—இடம் தேர்தல்—காலம் தேர்தல்—செங்கோன்மை—பொருள் உடைமை—பொருள் ஈட்டும் முறை—புதையற் பொருள்—சுங்கப் பொருள்—வெற்றிப் பொருள்—வரி வாங்கும் முறை—அறப் போர் செய்தல்—ஆண்மையும், அருளும்—நால்வகைப்படை—வீரமக்களும் வீரத்தாயரும்—வீரக்கல்—வீரக்கல்லின தன்மை—கண்ணகியின வீரக்கல்—நீதிபோற்றும் அரசனே இறைவன்—குற்றம் கடிதல்—வேந்தன் ஒளி—சபைகளும் ஆயங்களும்—சொல்வன்மை—ஐம்பெருஞ் சபைகள்—அமைச்சர் (1), காலக் கணிதர் (2), சேனாபதியர் (3), தூதவர் (4), ஒற்றர் (5)—ஒற்றரால் விளையும் நன்மை—ஒற்றரை ஆளும்

தன்மை—எண் பேராயம்—மாந்தர் ஆயம்—நாட்டின் நால் வளமும் நல் இயல்பும்—குடிகளின் தன்மை—பண்புடைமை—மானமுடைமை—சான்றாண்மை—இனியவை செய்தல்—ஈகை யின்பம்—முயற்சி யுடைமை—வேளாண்மை—வறுமை. ... ... 58—92

இன்ப இயல்.

இன்ப இயலின் உண்மை நோக்கம்—சிற்றின்பம் கூறிப் பின் பேரின்பம் கூறல் எளிது—சிற்றின்பத்தின் நிறைவை இன்ப இயல் கூறும்—சிற்றின்பம் பெறும் வழிகளைத் தேடி முயற்சித்தல்—பேரின்பத்திற் கொண்டு சேர்த்தல்—அருள் நூல்களில் அகத்துறையை அமைத்தல்—களவொழுக்கத்தின் தன்மை—தலைமகனும் தலைமகளும் எதிர்ப்படல்—பொழிலின் அழகிய காட்சி—தலைமகனது ஐயம்—பெண் என்று தெளிதல்—கண்ணால் கலத்தல்—தலைமகளது நலம் புனைந்து உரைத்தல்—அனிச்சமலரை நோக்கி யுரைத்தல்—வண்டை நோக்கி யுரைத்தல்—சந்திரனை நோக்கி யுரைத்தல்—குவளை மலரை நோக்கி யுரைத்தல்—தலைமகன் தலைவியைப் பிரிதல்—இடந்தலைப்படுதல்—தலைமகனிடம் தோழன் வேறுபாட்டிற்குக் காரணம் கேட்டல்—தலைமகன் காதல் உரைத்தல்—அவளது அழகும் இடமும் உரைத்தல்—தோழன் தலைமகளைக் கண்டு வியத்தல்—தோழனால் தலைவன் தலைமகளை எதிர்ப்படுதல்—தலைமகள் ஊரும் பெயரும் வினவுதல்—யானை சென்றதோ என்று கேட்டல்—மான் சென்றதோ என்று கேட்டல்—அணியும் தழையும் கொண்டு முன்னிற்றல்—தோழி குறிப்புணர்தல்—தலைவன தோழியிடம் தன்குறையிரத்தல்—மடலேறத் துணிதல்—தோழி தலைவன் கருத்தை முடிப்பதாகச் சொல்லித் தேற்றுதல்—தோழி தலைமகளிடம் மெலிதாகச் சொல்லுதல்—தலை மகள் உடம்

யடுதல்—தோழி தலைவியை மணம்புரியுமாறு தலைவனை வேண்டல்—ஊரில் அலர் எழும்புதல்—தலைமகள் வருந்துதல்—காரணம் கேட்ட தாய்க்குத் தோழியுரைத்தல்—மலர் கொடுத்தான் என்றல்—இடர் தீர்த்தான் என்றல்—காதலர் இருவரும் வெளியேறல்—தலைமகளைச் சார்ந்தோர் தடுத்தல்—பயனற்று மீண்டு போதல்—காதலர் இல்லறம் நடத்தல்—தலைமகன் தலைமகளைப்பிரிதல்—பிரிவு நேர்தற்கு காரணம்—தலைமகள் வருந்திப் புலம்பல்—இரவைநோக்கி வருந்தல்—கண்களைநோக்கி வருந்தல்—பசலையைக்கண்டு வருந்தல்—காதலனது அருளின்மையை நினைந்து வருந்தல்—தலைவனைக் கனவில் கண்டுமகிழ்தல்—தலைமகள் மேனி நலம் அழிதல்—தலைமகன் மீண்டுவருதல்—காதலுணர்த்தல்—தலைமகள் தன்னெஞ்சொடு பேசல்—ஊடல் இன்பம்—ஊடலின் காரணம் உரைத்தல்—உலகின் நிலையாமைகண்டு பேரின்பவழி நிற்றல். ... ... 92—124

திருக்குறள் உவமைத்திறம்.

உவமை அணியின் தன்மை—சங்க நூல்களும் பின் நூல்களும்—சாதாரணப் பொருளை உவமையாகக் கூறல்—தலைமயிரும் இழிந்த மக்களும்—உறங்கலும் விழித்தலும்—இறத்தலும் பிறத்தலும்—கை மானம் காத்தலும் நண்பன் துன்பங்களைதலும்—நிழலும் வினையும்—நாட்டுப் பொருள்கள் உவமையாதல்—ஊருணியும் செல்வரும்—பொன்னைச் சுடுதலும், துன்பம் வாட்டுதலும்—உயிர்களின் சிறப்பியல்கள்—யானையும் புலியும்—கவரிமான் தன்மை—ஆமையும் முதலையும்—காகமும் புள்ளும்—உவமையின் ஆழம்—புலித்தோல் போர்த்திய பசு—பொது மாதர் தன்மை—மணமற்ற மலர்—உவமானமும் உதாரணமும்—முடிவு. ... 124—144

திருவள்ளுவரும் பரிமேலழகரும்.

திருக்குறளுக்கு உரைகள் பத்து.—பரிமேலழகர் உரைக்கு முன் உரைகள்—பத்து உரையாசிரியர் பெயர்—நச்சர் நச்சினார்க்கினியரோ ?—பரிமேலழகர் உரை நயம்—உரையை ஆராய்தல் தவறாகாது—உரை நடையின் இலக்கணம்—'புதல்வரைப் பெறுதல்' என்னும் தலைப்பெயர்—தலைப்பெயரை அதிகாரத்தில் வழங்கும் முறை—அதிகாரப் பொருள் ஆராய்ச்சி—'மணக்குடவர் தலைபபெயர் மக்கட்பேறு.'—

அதிகார அமைப்பு—' தோற்றுவாய் முறை '—மக்கள் என்னும் சொல்லுக்கு வலிந்து பொருள் உரைத்தல்—அறிவுடைய மக்களைப் பெறுதல்—மாக்களும் மக்களும்—'அறிவறிந்த மக்கள்' என்பதற்கு வலிந்த உரை—காலவழுவமைதி—வழுவமைதியின் காரணம்—உரிமை அறிவதைப் பயத்தல்—பெண்களுக்கும் அறிவு அவசியம்—பண்டைத் தமிழ் மாதர்—பெண்களுக்கு அறிவில்லை யெனப் பரிமேலழகர் கூறும் உரை—பிள்ளையைப் பெற்றவுடன் தாய் அடையும் இன்பம்—பிறர் தன் மகனைப் புகழக்கேட்டதாய அடையும் இன்பம்.—

" தமிழ் நாட்டு வழக்கம்"—சிவப்பிரகாசர் பரிமேலழகர் கருத்தை மறுத்தல்---அறத்துப் பாலின் அமைப்பு—உரையாசிரியர் வடநூல் வழக்குகளை வலிந்து செறித்தல்—வடநூல் முறை வேறு தமிழ் நூல் முறை வேறு—முப்பாலாக வகுத்தது தமிழ்வழக்கே—தொல்காப்பிய விதி—அருள் நூற் கருத்து.

சிலதவறுய கருத்துக்கள்—சாதி வேற்றுமையும் தொழில் வேற்றுமையும்—மணக்குடவர் உரை ஆராய்ச்சி—இலக்கண அமைதிக்காக வலிந்து பொருள் கொள்ளுதல்—நூலாசிரியரும், மத யானைகளும்—குறளைச் சிதைத்துப் பொருளுரைத்தல்—இலக்கண அமைதி—ஒருமைப் பன்மை மயக்கம்—களவும் கற்பும் தமிழ் வழக்கே—முடிவு. ... 144—178

திருவள்ளுவர் திருத்தாள் போற்றி.

திருவள்ளுவர் பெருமை

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ?"

ஆசிரியர் பிறப்பு முதலிய வரலாறு.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் பிறந்து வளர்ந்த இடமும் விதமும், அவர் பெற்றோரது குலமும் நலமும், அவர் கற்ற கல்வியும் மற்றெல்லாம தெளிவாகத் தெரிய வொண்ணாத புதை பொருள்களாயிருக்கின்றன. உலகோர் செய்த உயர் தவப்பயனாய்த் தோன்றிய புலவர் பெருமானது உண்மை வரலாறு ஒன்றும் தெளிவாய்த் தெரிய இயலாமை பற்றித் தமிழ் மெய்யன்பர் உள்ளம் பெரிதும் கவல்கின்றது. சென்னையிலுள்ள திருமயிலையில் நாயனார் பிறந்து வளர்ந்தாரென்பதற்கு அங்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப் பெற்றுள்ள அவரது ஆலயத்தைத் தவிர வேறு சான்று கிடைப்பது அரிதாயிருக்கின்றது. ஆசிரியரது தாய் தந்தையர் பெயர் ஆதி பகவன் என்பது வழி முறையாக வந்த பழங் கதையாலும், ஆதி பகவன் என்னும் சொற்றொடர் ஆசிரியர் நூலின் ஆதிக்குறளில் அமைந்துள்ளதாலும்

அறியப் படுவ தல்லாமல் வேறு சான்றுகளால் ஆராய்வதற் கிடமில்லை.

இத்தகைய பெரும் புலவர் வரலா றெல்லாம் அவர் தாமே யெழுதிய நூல்களிற் காணப்படும் அகச் சான்றுகளாலும், அல்லது அப்பெரியார் காலத்திருந்த வேறு புலவர்கள் எழுதிவைத்த புறச்சான்றுகளாலுமே அறியக்கூடியன வாகும். ஆனால் நாயனார் எழுதிய நூலின் கண் அவரது அறிவின் பெருமையும் அருளின் திறமும் விளங்குவ தல்லால் சரித்திரக் குறிப்புகள் அதிகமாக அகப்பட வில்லை. அவர் காலத் திருந்து தமி ழாராய்ந்த புலவர் பெருமக்களும் அவர் நூலின் திறத்தினையும் நயத்தினையும் வியந்து பேசுகின்றனரே யன்றி ஆசிரியரது பிறப்பு முதலிய வரலாற்றைப் பற்றிப் பெரும்பாலும் எழுதி வைத்தாரல்லர்.

ஆயினும், திருவள்ளுவர் என்னும் பெயர் ஆசிரியர் பிறந்த அல்லது வளர்ந்த குலப் பெயரென்று கொள்ள இட மிருக்கின்றது. தமிழகத்திலுள்ள வள்ளுவ குலத்தில் பிறந்தாயினும் அன்றி வளர்ந்தாயினும் தெள்ளிய அறிவு பெற்ற இப் பெரியாரது இயற் பெயர் மங்கிக் குலப் பெயரே பிற் காலத்தில விளங்கி வழங்குவ தாயிற்று என்று கொள்வது பொருத்த மாகத் தோன்றுகின்றது. இவ் வுண்மையைக் கடைச் சங்கத்தி லிருந்து தமி ழாராய்ந்த மாமூலனார் என்னும் புலவர்

வள்ளுவர் என்பது குலப் பெயரே.

" அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கின்
திறந் தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பாேனார் பேதை யவன்வாய்ச் சொல்
கொள்ளார் அறிவுடையார் "

என்று கூறியுள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு என்னும உறுதிப் பொருள்களின் திறந் தெரிந்து தெளிவாக எடுத்து துரைதத திருந்திய தெய்வத்தன்மை வாய்ந்த புலவரை மறந்தேனும் வள்ளுவன் என்று அழைப்பவன் அறிவறறவன். அவ்வறி வற்றவன் சொலலும சொற்களை அறிவுடையார் ஒரு சிறிதும் கொள்ள மாட்டார்கள் என்று அப்புலவர் கூறுவதால நற்றமிழ வல்ல நம் புலவர் பெருமானைப் பிறந்த குலத்தால் அளவிட் டறிபவன் பேதை யென்றும்,

" களர் நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளை நிலதது நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடை நிலத்தோ ராயினும் கற்றுணர்ந்தோரைத்
தலை நிலத்து வைக்கப்படும் "

என்னும் உண்மை பற்றி இழிந்த 'குலத்திற் பிறந்தும் விழுமிய அறிவு பெற்று விளங்கிய புலவரை 'வள்ளுவன்' என்று கூறுதல் வழுவா மென்றும்' நிறுவுதற் பொருட்டு இச் செய்யுள் எழுந்திருக்கின்றது.

இனி இவ்வாறு ஒரு சாதியின் அல்லது ஒரு வகுப்பின் பெயரை அமைத்து ஒரு ஆசிரியரின் பெயர் வழங்குவதற்கு வேறு நூல் வழக்கிலேனும் உலக வழக்கிலேனும் சான்று உண்டோ என்று

காப்பியக்குடி
தொல் காப்பியர்.

ஆசங்கிக்கலாம். உலக வழக்கில் ஒரு சிறு மரபில் பெரும் புலமை பெற்ற ஆசிரியரை அம் மரபிற்குரிய சிறப்புப் பெயரால் நம் தமிழ் நாட்டில் வழங்கக் காண்கின்றோம். தமிழ் மொழியில் தலை சிறந்து விளங்கும் " தொல் காப்பியம் " என்னும் இலக்கண நூல் செய்த பெரியாரது இயற் பெயர் மங்கி அவர் பிறந்த " காப்பியக்குடி " யென்னும் மரபுப் பெயரால் எழுந்த தொல்காப்பியர் என்னும் பெயரே இப் பொழுது உலகில் வழங்கி வருகின்றது.

சேக்கிழார் குடி சேக்கிழார்.

இன்னும் அறுபான் மும்மை அடியார்கள் கதையை அழகிய தமிழில் " பெரிய புராணம் " என்னும் பெரு நூலில் அமைத்துத் தந்த சேக்கிழார் பெருமானது இயற்பெயர் "அருள்மொழித் தேவர்" என்பதே யாயினும் அப்பெரியார் வேளாண் மரபில் சேக்கிழார் குடியில் பிறந்து அழியாப் புகழ்பெற்ற தன்மையால் அவரது இயற்பெயர் மங்கிக் குலப் பெயரே இப்பொழுது வழங்கி வருகின்றது. ஆகவே தொல்காப்பியர், சேக்கிழார் என்னும் மரபின் வழி வந்த பெயர்கள் போல, வள்ளுவர் என்னும் பெயரும் குலப்பெயராய் ஆசிரியர்க்கு அமைந்தது என்று கருதுவதே அமைவுடைய தாகும். இவ்வா றன்றித் திருவள்ளுவர் என்னும் பெயர் காரணப் பெயராய்த் 'திரு' வென்பது நாயனாரது உயர்வையும் 'வள்ளுவர்' என்பது அவரது வண்மையையும் விளக்கி நிற்கு மென்

வள்ளுவர் வண்மை யுடையார்.

றும், விழுமிய உறுதிப் பொருள்களைத் தொகுத்து உலகத்தாருக்கு அருளிய காரணத்தால் அப்பெயர் பெற்ருர் என்றும் உரைப்பாரு முளர். திருவள்ளுவ நாயனரது பெருமை அவர் காலததில் சங்கப் புலவராய்த் திகழ்ந்த பலபெருமககள் அளித்த சிறப்புப் பாக்களாலேயே நன்கு விளங்குகின்றது. இவ்வுலகில் புலவராய் வாழ்ந்த பெரியார வரலாறறை உற்று நோக்குமிடத்துப் பெரும்பாலும் புலவர் தமபெருமை அவர் வாழ் நாள் முடிந்தபின்னர் நாடெங்கும பிறங்குமேயன்றி அவர் வாழுங்காலத்தில் அவர் பெருமையை அறிபவர் ஒரு சிலரே யாவர் என்பது தெளிவாக

புலவரது புகழ்.

விளங்கும். இப்பொழுதும் மேல் நாடென்று சொலலப்படுகிற ஆங்கில நாட்டில பல பெரும் புலவர்கள் பிறந்த இடமும, இறந்த இடமும் தெரியாது, அவ்வாராய்ச்சியில் அளவிறந்த பொருளைச செலவு செய்தலை நாம கண்கூடாகக் காண்கின்ருேம். ஆனல் நமது ஆசிரியர் தாம் வாழ்ந்த காலததிலேயே புலவர் பாடும் புகழுடையவராய் விளங்கினு ரென்பது அவருக்குப் பெருஞ சிறப்பே யாகும். இன்னும் அவர் காலத்திருந்த புலவர் எத்திறத் தவரென் றறிவோ மானல் நமது பெரு நாவலரின் பெருமை சொல்லாமலே விளங்கும். அறிவும் புலமையும் தமிழ் நாட்டில் அங்கி நலிந்திருந்த காலத்தே நம் புலவர் பெருமான் தோன்றினவ ரல்லர். தமிழ மொழிக்கு என்றும் அழியாப் பெரும் புகழ்

அளித்த பெருமக்கள் வாழ்ந் திருந்த சங்கக் காலத்தே நம் புலவரும் தோன்றினர். யாவர்க்கும் முன்னவனே முன்னின்று நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே எனக் கூறிய மனத் திண்மையும், கலை பயில் தெளிவும், கட்டுரை வன்மையும் அமைந்து இறையனார் அகப் பொரு ளென்னும் அரிய நூலுக்கு அழகிய உரை கண்ட நற்றமிழ்ப் புலவர் நக்கீரர் இருந்தனர். நயங்கள் பலவும் கெழுமித் திகழும் மணிமேகலை யென்னும் விழுமிய தனி நூல் செய்த தண்டமிழ்ச் சாத்தனாரும் இருந்தனர். குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தன்ன அழகிய தமிழால், செந்தமிழ்ச் செல்வர் போற்றி மகிழும் சிலப்பதிகாரம் செய்த சேரர் சிகாமணியும் இருந்தனர். இன்னும் பொய்யறியாக் கபிலரொடு பரணராதிப் புலவர்கள் நாற்பத் தொன்பதின்மர் நற்றமிழ் வல்லாராய்க் கழகத்தில் வீற்றிருந்தனர். சுருங்கச் சொல்லின் அக்காலத்தில் வாழ்ந்த புலவர்க ளெல்லாம் தமிழ் மொழியில் தலை சிறந்த அறிவு அமையப் பெற்றவரா யிருந்தனர் என்பது தமிழ் மொழியின் வரலாற்றைச் சிறிதுணர்ந்தோரும் அறிவர். உண்மையாக அக்காலம் தமிழ் மொழியானது மிகச் செம்மையும், சீர்மையும், வண்மையும் உற்றுக் கலை பயில் கழகத்தில் ஒப்புயர் வற்று வீற்றிருந்த காலமாம். ஆகவே செயற்கரிய பெரு நூல்கள் செய்த பெருமக்கள் வாழ்ந்திருந்த காலத்தில் அவர்களுள் தலை

திருவள்ளுவர் காலத் திருந்த புலவர்கள்.

சிறந்த புலவராய்த் திருவள்ளுவர் திகழ்ந்தன ரென்பது தெளிவாகும்.

திருக் குறளுக்குப் பின்னர் எழுந்த பெரு நூல்களில் எல்லாம், அதன் மணமும் நலமும் விளங்கக் காண்கின்றோம். திருவள்ளுவ நாயனார் உடனிருந்து தமி ழறிந்த அருங்கலைப் புலவரும் திருக் குறளின் சொல்லையும், பொருளையும் தமது நூலில் அமைத்து அழகு செய்வா ராயினர். இன்னும் இறைவனை நினைந்து நெஞ்சம் குழைந்து, பத்திமையாற் பாமாலை பாடிய பெருமக்களும், பெரும் பனுவல் செய்த அருந் தமிழ்ப் புலவரும், திருக்குறளில் கண்ட உண்மைகளை ஆசிரியர் சொற்களாலேயே அமைத்தும், அல்லது தமது நூற் போக்குக் கிணங்கப் பதங்களை மாற்றி யமைத்தும் போற்றி யிருக்கும் அழகினை ஆராய்ந் தறிவது தமிழ் நயம் தெரி புலவர்க்கு நல் விருந்தாகும். தம்முள் மாறுபட்டுக் கலாம் விளைக்கும் சமயத் தலைவர் பலரும் திருக்குறளைத் தம் நூல் நுதலிய உண்மைக்கு மேற்கோளாக எடுத் தமைத்த தன்மை, நாயனாரது பொது நிலைமைக்கும், பெரும் புலமைக்கும் என்று மழியாச் சான்று பகர்வ தாகும். மணிமேகலை யென்னும் சீரியநூல் செய்த சீத்தலைச் சாத்தனார் திருவள்ளுவர் உடனிருந்து தமிழறிந்த பெரும் புலவரே யாயினும், சமயத்தில் சமண சமயத்தைத் தழுவிய பெரியாரே யாயினும், தமது நூலில் பல விடங்களில்

திருக்குறளைப் புலவர் போற்றும் முறை.

ஆசிரியர் மொழி பொருளே யன்றி அவர் பதங்களை யும் பொன்னே போற் போற்றி அமைத்துள்ள அழகு பெரிதும் கண்டு மகிழ்தற் குரியதாகும். ஆசிரியர் திருவள்ளுவனார் "வாழ்க்கைத் துணை நலம்" என் னும் அதிகாரத்தால் அருளிய,

"தெய்வம் தொழாள் கொழுநற் றொழு தெழுவாள்,
பெய்யெனப் பெய்யு மழை"

மணிமேகலை.

என்னும் அருமைத் திருக்குறளை மணிமேகலை ஆசிரியர்,

"தெய்வம் தொழாள் கொழுநற் றொழுமவள்
பெய் யெனப் பெய்யும் பெருமழை யென்னப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய"

என்று நாயனாது பதங்களையே பொதிந்து அமைத்து அழகு செய்துள்ளார்.

சமய நூல் போற் றும் முறை.

சமய நூல் அருளிய சைவ நன்மக்களும், வைணவ நன்மக்களும நாயனார் குறளை நன்றாய் எடுத் தாளுகின்றார்கள்.

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்"

என்னும் திருக்குறளைச் சைவ சமய சந்தான குரவ ருள் ஒருவரான உமாபதி சிவம் 'நெஞ்சுவிடு தூதில்,'

—"தேறுங்கால்

நெஞ்சு விடு தூது.

உன்னை யொழிய உறவில்லை யென்னுமது
தன்னை யறிவைத் தனியறிவை—முன்னம்
தலைப்பட்டார் தீரத் துறநதார் மயஙகி
வலைப்பட்டார் மற்றையவ ரென்று—நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்"

என்று அருளிச் செய்துள்ளது. இன்னும்,

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"

என்னும் திருக்குறளை,

திருக்களிற்றுப் படியார்.
"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை யென்றமையால்
வேண்டுமஃதே அஃதொன்றும்—வேண்டினது
வேண்டாமை வேண்டவரு மென்றமையால்
வேண்டிடுக வேண்டாமை வேண்டுமவன்பால்"

என்று திருக் களிற்றுப் படியார் என்னும் சைவ சமய நூல் இனிது எடுத்துரைக்கின்றது. இன்னும்

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்னும் திருக்குறளைத் திருவாய் மொழி பாடிய நம்மாழ்வார் என்னும் வைணவப் பெரியார்,

திருவாய் மொழி.
"அற்றது பற்றெனில்
உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில்
அற்றிறை பற்றே"

என்று அமைத் தருளினார்.

இனிச் சிங்கார ரசம் கொழிக்கும் சிந்தாமணி யாசிரியரும் திருக்குறளைப் பொன்போற் போற்றித் தமது நூலை அழகு செய்கின்றார்.

" வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள் "

என்னும் குறளை,

சிந்தா மணி.

" வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய
வேய்மென்றோள்
பூட்டார் சிலை நுதலாள் புல்லா தொழியேனே "

என்று சிந்தாமணி போற்றுகின்றது. இன்னும்,

" பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல் வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது"

என்னும் குறளில் அமைந்த உவமையையும் பொருளையும் சிந்தாமணி யாசிரியர்

"இடத்தொடு பொழுதும் நாடி எவ்வினைக் கண்ணு மஞ்சார்
மடப்படலின்றிச் சூழும் மதிவலார்க் கரிய துண்டோ,
தடத்திடைக் காக்கை யொன்றே ஆயிரங்கோடி கூகை,
இடத்திடை யழுங்கச் சென்றாங் கின்னுயிர் செகுத்ததன்றே "

என்று போற்றி அழகு செய்கிறார்.

கம்பர்.

இனிக் கவிக் கரசாகிய கம்பர் பெருமானும பல விடங்களில் நாயனார் நூலில் அமைந்த அரிய கருத்துக்களை அவர் சொற்களாலேயே அமைத்தும், வேறு பல விடங்களில் மொழி பெயர்த்து அமைத்தும், பொருள் விளக்கும் பெருமை கம்பர் கவித்திற முணர்ந்தார் பலராலும் கண்டு களித்த உண்மைகளாம்.

" கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும் "

என்னும் திருக்குறளை,

"எடுத்து ஒருவருக் கொருவர் ஈவதனின் முன்னே
தடுப்பது நினக்கழ கிதோ தகைவில் வெள்ளி
கொப்பது விலக்கு கொடியோய் உனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி விடுகின்றாய்"

என்று கம்பர் பெருமான் எடுத்தாளும் தன்மை கண்டு மகிழ்வதற் குரியதாகும். இன்னும்

"நல்லா றெனினும் கொளல்தீது, மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"

என்னும் குறளையே மொழி பெயர்த்து

"வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ என்சில இன்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்"

என்று கம்பர் பெருமான் அமைத் தருளினர். சுருங்கச சொல்லுமிடத்து, திருவள்ளுவனார் காலத்திற்குப் பின்னர் எழுந்த பெரு நூல்களிலெல்லாம் திருக்குறளின் தெள்ளிய மணமும் திருந்திய பண்பும் விளங்கக் காண்கின்றோம். இத்தகைய உயரிய பெருமை நம் தமிழ் நாட்டில் ஆசிரியர் திருவள்ளுவனார்க்கு அமைந்ததே யன்றி வேறெவர்க்கும் அமைந்ததாகத் தோன்ற வில்லை.

தமிழ் நாட்டில் நிகழ்ந்த சமயப் போர்.

மிகப் பழைய கால முதலே நம் தமிழ் நாடு பல வகைப்பட்ட சமயப் போர்கள் நிகழ்வதற்கு நிலைக்களமாக நின்றதாகும். இப் பெற்றித்தாய சமயப் போரில் பல பெரும் புலவர்கள் தம் வாழ் நாளை

வறிதே கழித்தது மன்றி ஒரு சமயச சார்பாய் எழுந்த நூலை மற்றைய சமயத்தவர்கள் படிப்பதும் போற்றுவதும் இல்லை; ஒரோ வழி இகழ்ந்தும உரைப்பர். பெரும்பாலும் சமண சமயத்திற்கும் சைவ சமயத்திற்கும் தமிழ் நாட்டில் இடையறாக் கடும்போர் நிகழ்ந்துள்ள தென்பது சரித்திர உண்மையாகும. இதற்கு வேறு சான்று வேண்டுவதில்லை. தமிழ் நயம் கொழிக்கும சிந்தாமணியைச சைவ சமயப் பெரியாராகிய உமாபதி சிவம்

சைவமும் சமணமும்.

“கலகமிடும் அமண் முரட்டுக்கையர் பொய்யே கட்டி
நடத்திய சிநதாமணியை மெய்யென்று
உலகிலுளோர் சிலர் நெற்குததுண்ணாது
உமிக்குத்திக் கை வருந்திக் கறவை நிற்க
மலடு கறந்துளந்தளர்ந்து குளிர்பூஞ்சோலை வழியிருக்கக்
குழியில் விழுந்தளறு பாயந்து
விலை தருமென் கரும்பிருக்க இருப்பை மென்று
விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்து நொந்தார்”

என்று கூறுகின்ற செய்யுளே, அவ்விரு சமயத்தார்க்கும் அக் காலத்திலிருந்து மனப் பான்மைக்குப் போதிய சான்றாகும். இவ்வாறு தம்முள் பெரிதும் வேறு பட்டுச் சொற் போர் விளைத்த ஆசிரியர் அனைவரும் திருவள்ளுவனார் திருக்குறளைத் தலை சிறந்த நூல் என்று பாராட்டித் தம் நூலில் எடுத்தாளும் தன்மை ஒன்றே நாயனார் புகழை உலகம் உள்ளளவும் நிலை நிறுத்துவதாகும்.

திருக்குறளின்கண் அமைந்துள்ள சொல்லழகும் பொருள் ஆழமும், அந்நூலை ஐயந் திரிபற ஓதியுணர்ந்த பெரியார் நன்கு அறிவார்கள். இந்நூல் தமிழ்க் கழகத்தில் அரங்கேற்றப் பெற்ற காலத்து, சங்கப் பலகை ஏனைய நூல்களைப் புறத்தே தள்ளிவிட்டு, திருக்குறள் ஒன்றையே தன் மீது கொண்டு திகழ்ந்த ஓர் புதுமையைத் தமிழ் நாட்டுப் பழங்கதை பாராட்டிப் பேசுகின்றது. சங்கப் பலகை ஏனைய நூல்களுக்கு இடந் தரவில்லையென்று வழங்கும் இக்கதையில் ஓர் உண்மை யமைந்திருக்கக் காணலாம்.

திருக்குறளும் சங்கப் பலகையும்.

தனக் கொப்பாய நூல் வேறொன்றின்றி, தனிவளம் அமைந்ததாய், தன்னேரிலாத தனி நூலாய் இந்நூல் விளங்கிற் றென்பது அக்கதையால் நன்கு அறியப் படுகின்றது. அக்காலத்திய புலவரும் அதனை அவ்வாறே வியந்து பாடி யிருக்கின்றார்கள். சங்கப் புலவருள் ஒருவரான பரணர் என்பார், சிறப்புப் பாயிரம் கொடுத்த காலத்து ஒரு சிறு உவமையால் திருக்குறளின் பெருமையை எடுத்துரைத்தார். முன்னொருகாலத்தில் திருமால் குறுகிய வடிவமுடைய வாமனனாய்த் தோன்றி, பின் நெடுமாலாக ஓங்கி வளர்ந்து தன் இரண்டடியால் உலக முழுவதையும் ஒருங்கே யளந்த காட்சி போல, அறிவினால் மேம்பட்ட ஆசிரியர் வள்ளுவரும் தம குறுகிய குறளடி யிரண்டால் மக்கள் கருதும் கருத்தை யெல்லாம

திருமாலும் வள்ளுவரும்.

அளந்து விட்டாரென்று உண்மை கூறுகின்றார்.

“ மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தங் குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவ வெல்லா மளந்தார் ஓர்ந்து ”

என்பது பரணர் பாடிய பாட்டாகும். இன்னும் மதுரைத் தமிழ் நாயகனார் என்னும் மற்றொரு புலவர்

“ எல்லாப் பொருளும் இதன் பாலுள ; இதன் பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் ”

என்று உண்மையை உறுதியாகக் கூறுகின்றார்.

வடமொழியில் விழுமிய கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் வேதத்தைப் போல, உயரிய உண்மைகளை யெல்லாம் தன்னகத்தே கொண்டு தமிழ் மொழியில் விளங்குகின்ற தன்மையால், திருக்குறள் தமிழ் மறை யென்று பெயர் பெற்ற தென்பர். நிறை மொழி யாளராய் வினையின் நீங்கிய விளங்கிய அறிவுடையாராய்த் திகழ்ந்த திருவள்ளுவர் செய்த நூல் மறைமொழி யென்பதற்கு யாதும் ஐயமில்லை. ஆரியத் தோடு அருந்தமிழை ஒப்பிட்டு நோக்கிய வண்ணக்கஞ் சாத்தனார் என்னும் தமிழ்ப் புலவரும், வட மொழி வேதத்திற்கும் இதற்குமே நேர்மை கூறுகின்றார்.

வடமொழி மறையும், தமிழ் மறையும்.

“ ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து இதனின் இது
சீரிய தென வொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்து தமிழ் திருவள்ளுவனார்
ஓது குறள் பாவுடைத்து ”

என்று சாத்தனார் கூறுவதால் மேற்கூறிய உண்மை தெள்ளிதில் விளங்கும்.

இந்நூலைப் பற்றிய ஒரு கதை நம் தமிழ் நாட்டில் பல கால மாகப் பயின்று வருகின்றது. சங்கப் புலவர்களில் சீத்தலைச் சாத்தனார் என்னும் ஒரு பெரும் புலவர் இருந்தாரென்றும், அப்பெரியாரது இயற்பெயர் சாத்தனார் என்றும், சீத்தலை யென்னும் அடைமொழி பிற்காலத்தில் ஒரு காரணம் பற்றி அவர்க்கு அமைந்த தென்றும் கருதப்படுகின்றது. கூல வாணிகன் சாத்தனார் என்பது இவரது மற்றைய பெயராகும். எண்வகைப் பல சரக்குகளில் வியாபாரம் செய்த காரணத்தால் இப்பெரியார் கூலவாணிகன் சாத்தனார் என்று சிறப்புப் பெயர் பெற்றார்போலும். ஆயினும் சீத்தலைச் சாத்தனார் என்று அவர்க்குப் பெயரமைந்த காரணம் பெரிய தோர் வியப்பாக விளங்குகின்றது. தமிழ் மொழியின்பால் திருந்திய பற்றுடையாராய், அதன் நயம் உணர்ந்த நல்லாராய் வீற்றிருந்த இப்புலவர் பெருமான், கழகத்தின் கண் தமிழாராயுங்கால், சொற்பிழை பொருட்பிழை நிறைந்த நூல்களைக் காணுந்தோறும், மிக உளம் நொந்து, தமிழ் மொழிக்கு உற்ற இழுக்கைத் தனக்கு வந்ததாக எண்ணி, தம் கையில் தாங்கிய கூரிய எழுத்தாணியால் தலையில் குத்திக் கொள்வாரென்றும், அவர் தலையானது பெரிதும் புண்பட்டு எப்போதும் குருதியை வடித்துக் கொண்டே யிருந்த தென்

சாத்தனாரைப் பற்றிய கதை.

றும் அக்காரணத்தால் அவர் சீத்தலைச் சாத்தனா ரென்று பெயர் பெற்றா ரென்றும் பழங் கதை கூறு கின்றது. இத்தகைய சாத்தனார் தலைக்குத்தானது திருவள்ளுவனார் தம் நூலை அரங்கேற்றிய காலத்து, அறவே நீங்கிப் போயிற்று. சொல் நயமும், பொருள் நயமும் வாய்ந்த வள்ளுவனார் நூலைக் கண்ட காலத்து, கூரிய எழுத்தாணியும கூலவாணிகன் சாத் தனார் தலையை மறந்தது. சாத்தனார் புண்பட்ட தலை யும பண்பட்டது. இவ்வுண்மையை அக்காலத்துப் புலவரான மருத்துவன் தாமோதரனார்,

சாத்தனார் தலைக் குத்து.

"சீந்தி நீர்க்கண்டம் தெரிசுக்குத் தேன் அளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர் முப்பாலால்
தலைக்குததுத் தீரவு சாத்தறகு"

என்று இப்பழங்கதையைப் பொதிந்து அழகிய ஓர் உவமை யமைத்துப் போந்தார். நம் தமிழ நாட்டி லுள்ள சீந்திக்கொடியின் பாலும், சுக்கின் பாலும், தேன் பாலும் ஆகிய இமமுப்பாலை யும் கலந்து மோந்தால், தலைக் குத்து அல்லது மண்டையிடி விட் டுப்போம் என்பது பண்டை மருத் துவ நூலோர் கருத்தாகும். அதுபோல, அறத்துப் பால், பொருட்பால், இன்பப்பால் ஆகிய முப்பாலையும் கலந்த திருக்குறள் மணம் வீசியபொழுது, சாத்தனார் தலைக்குத்து உடனே ஒழிந்து போயிற்று என்று

முப்பால் தலைக் குத்துத் தீர்த்த கதை.

மருத்துவ நூலில் வல்ல தாமோதரனூர் என்னும் புலவர் கூறுகின்றூர். ஆகவே நாயனூர் செய்த முப்பால் நூல் சித்தலைச சாத்தனூர் தலைக்குத்துத தீர்தத தனி மருந்தாய் அமைந்தது.

•

திருக்குறள் ஓதற்கெளிதாய், சிந்தைக்கும் செவிக்கும இன்பம பயப்பதாய், நவில் தொறும் நயம் பெருகும் நூலாய் விளங்குகின்றது. ஏனைய பழந் தமிழ நூல்களிற காணப்படுகின்ற கடுந் தமிழ்ப் பதங்களும், பததுப்பாட்டு முதலிய நூல்களிலுள்ள இறுக்கமும் மயக்கமும திருக்குறளில் இல்லை. நூல் முழுமையும் திருந்திய செப்பமும, செமமையும் வாய்ந்து விளங்குகின்றது. நூலின்கண் அமைந்து விளங்கும இயல்களும அதிகாரங்களும, ஒன்றற்கொன்று இயைபுடையனவாய் பலதொடர்களால அமைந்த அருமணி வடம் போல விளங்குகின்றது. ஏடுகளில் பலகால் அடங்கியிருந்த காரணத்தாலும் பிற காரணங்களாலும் சில அதிகாரங்களும் தலையீடுகளும முறைபிறழ்ந் திருட்பனவாகத் தோன்றுகின்றன. ஆயினும பெரும்பாலும நூலின் போக்கை நோக்குமிடததுச் செம்மையாய் வகுத்தமைத்த செப்பமுற்ற நூலாகவே திருக்குறள் விளங்குகின்றது. கற்றோர் யாவரும் அறியும் அறிவு அமையப பெற்றவராய், கற்றோர்ககுத தாமும் வரமபாகிய தலைமையராய் விழுமிய உண்மைகளை வினையின் நீங்கிய அறிவாற கண்டு, உலகம் மகிழ்ந்துய்ய

திருக்குறள் நூல் நயம்.

இனிது எடுத்துரைத்து, புகழுடம்பை இவ்வுலகில் நிறுத்தி நாயனார் அழியாத இன்பப் பேறெய்தினார்.

திருக்குறள்—பொது நூல்

"நன்றென
எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி—கல்லாடர்"

உலகில் உயர் தனிச் செம் மொழிகளாய் விளங்குகின்ற மொழிகளில் சொல்லழகும், பொருளழகும நிறைந்த நூல்கள் விளங்கக் காண்கின்றோம். ஒரு மொழியைத் தம மொழி யென்றும் தாய் மொழி யென்றும் போற்றுகின்ற மக்கள் தமது மொழியி லுள்ள நூல்கள் ஆழமும், அழகும் உடையன வென்று போற்றி மகிழ்வார்கள். உலகில் வாழுகின்ற ஒவ்வொரு நாட்டினரும் தம் நாடே உயர்ந்த தென்று அதன் நலம பாராட்டலும, ஒவ்வொரு மொழியினுக் குரியவரும தம் மொழியே உயரிய சீரிய மொழி யெனக் கருதுதலும் இயற்கையே யாகும்.

திருக்குறள் உலகோர் போற்றும் உயரிய நூல்.

ஆயினும் உண்மையாக ஒரு பால் சாராமல் நடு நிலையில் நின்று நூல் நயம் உணரும் புலவர்கள், சில நூல்களை உலகோ ரனைவரும் போற்றிப் படித்துப் பயனடைதற் குரிய உயரிய நூல்களெனத் தமது அறிவாற் கண்டு உறுதி கூறுகின்றார்கள். இத்தகைய உயரிய நூல்கள் எம் மொழியில் முதனூலாக எழுதப்பட்டு விளங்கினாலும், அவை அறி

வுடைய மக்கள் அனைவர்க்கும் பொது நூல்களே யென்பதில் யாதும் ஐயமில்லை. இப்பெற்றித் தூய ஒரு விழுமிய நூல், நம் தமிழ் நாடு செய்த தவப் பய ஞய்த் தோன்றிய தெய்வப் புலமைத் திருவள்ளுவரால் அமிழ்தினு மினிய தமிழ் மொழியில் அருளப் பெற்றது.

திருக்குறள் பொது நூல்.

(திருக்குறள் என்னும் சீரிய நூல் சமயம், காலம், சாதி, இடம் முதலிய வரையறை யின்றி, எச் சமயத்தார்க்கும், எக் காலத்தினர்க்கும், எச்சாதியினர்க் கும், எந்நாட்டினர்க்கும் பொதுவாய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனி நூலாகத் திகழுகின்றது.)

சமயப் பொது நூல்.

இவ்வுலகில் ஒன்றோடொன்று ஒவ்வாத பல வகைப்பட்ட சமயங்கள் பரவி யிருக்கப் பார்க்கின் றோம். இவற்றுள், பழைய காலத்தே தோன்றிய சம யங்கள் பல வாகும். இக்காலத்தில் தோன்றிக்கொண் டிருக்கும் சமயங்களும் இருக்கின்றன. இனித் தோன் றும் மதங்களும் உண்டு. இவ்வாறு ஒன்றோடொன்று ஒவ்வாத சமயங்கள் உலகில் பலவாய்க் காணப்படுகின் றன வாயினும், அவை மக்களது அறிவின் தன்மைக் கும், மனப் பான்மைக்கும், அமைவுறும் வண்ணம் ஆன்றோரால் அருளப் பெற்றன வென்றும், ஆதலின் அவை யனைத்தும் அவசியமே யென்றும் அறிவுடை யார் கருதுகின்றார்கள். உண்மை யிவ்வா றிருப்பி-

னும், சமயப் பற்றுடைய மக்கள், தமது சமயமே மெய்ச் சமய மென்றும், தாமே செந்நெறிகண்ட சீரி யா என்றும், ஏனைய சமயவாதிகள் பொய்ச் சமயநெறி நின்று புன்னெறியில் வாழ் நாளைப் போக்குகின்ற ரென்றும் சமயப் பொறுமை சிறிதும் இன்றிச் சொற் போா விளைத்தலையும், கலாம விளைததலையும் நாம பல காலும கண்டிருக்கின்றோம். இத்தகைய போர் விளைக்கும் சமய வாதிகள் எல்லாம் திருக்குறளைத் தத தம சமயநூல் என்று போற்றி மகிழ்கின்ற ஒன்றே அந்நூலின் பெருமைக்குப் போதிய சான்றாகும. மற் றைய நாடுகளில் வழங்கி வருகின்ற சமயங்களைத் த்விர்தது நம மிந்திய நாட்டில் வழங்கி வருகின்ற சமயங்களை அறுவகையாக வகுத்து அறிஞர் ஆராய்ந் திருக்கின் றார்கள். இவ்வுண்மை 'அறு

அறுவகைச் சமயங்கள்.

வகைச சமயத்தார்க்கும, அவ்வவர் பொருளாய் நின்று அருள் செய்பவன் இறைவன்' என்னும் ஆன்றோர் திரு வாக்கால் அறியலாகும். இவ்வாறு சமயகொள்கை யில் வேறுபட்டவர் அனைவரும், ஒருங்கே ஈடுபட்டு இசைந்து நிற்பதற்கு நிலைககளமா யிருக்கும் நூல திருக்குறள் ஒன்றேயாம. இவ்வுண்மையைக் கடைச சங்கப் புலவரான கல்லாட ரென்பார்,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப, வேறெனின்
அன்றென்ப ஆறுசமயத்தார்—நன்றென
எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி"

என்று கூறிய செய்யுளால் அறியலாகும். என்றும

கல்லாடர் மதிப்புரை.

அழியாத உறுதிப்பொருள் ஒன்றே என்று ஒரு சமயம் கூறுமாயின், அதனை மறுத்து மற்றொரு சமயம் வேறு கொள்கையைக் கூறும். அதனையும மறுத்துப் பிறிதொரு சமயம் பிறிதொரு கொள்கையைக் கூறும. இவ்வாறு ஒன்றோடொன் றொவ்வாது சமயங்களு முறண்படும். ஆனால் அறம், பொருள், இன்பம என்னும் உறுதிப்பொருள்களை எடுத்துரைக்கின்ற திருக்குறளின் பொருளை உண்மையென எம்மதத்தி னரும் சம்மதமாய் ஒப்புக் கொள்வ சென்றால், அந் நூலின் பெருமை சொல்லாமலே விளங்கு மன்றோ? இனி இவ்வாறு குறளின் பெருமையை வியந்து கூறிய புலவர் பெருமான் 'கல்லாடர்' என்பதும சிறப்பாகக் குறிப்பித்தற் குரியதாகும். சமயப் பற்றுச சிறிது மில்லாது, தமிழ்ப் புலமை யொன்றே உடைய பெரியார் ஒருவர் இத்தகைய சிறப்புப் பாயி ரம அருளியிருப்பாரேயாயின், அது அத்துணை சிறப பாக எடுத்துக் கூறும் இயல்புடைய தாகாது. ஆனால் கல்லாடர் என்னும் புலவர் சைவ சமயத்தில் பெரும் பற்று வைதத பெரியாராவார். சைவசமயத் தலைவ ரான மணிவாசகப் பெருமான் அருளிய திருக் கோவையாரென்னும் அகத்துறை பயின்ற அழகிய நூலின் ஆழம உணராதிருந்த தமிழ்ப் புலவர்க்கு அதன் உண்மைத் தன்மையை உணர்த்தும் பொருட் டுக் 'கல்லாடம்' என்னும் உயரிய நூல் **செய்த**

புலவர்பெருமான் சிவநெறியில் பெரிதும் பற்றுடையரா யிருந்தும், நாயனார் நூலைப் பொது நூலென்றே பாராட்டி மகிழ்ந்தார்.

ஆயினும் சைவ சமயத்திற் காணப்படும் உயரிய விழுமிய கொள்கைகளும், கருத்துகளும் திருககுறளில் காணப்படுகின்றன வென்பதும் உண்மையேயாகும். 'கடவுள் வாழ்த்து' என்னும் முதல் அதிகாரத்தில் இறைவனை 'எண்குணத்தான்' என்று நாயனார் கூறுவது சைவசமயக் கருத்தென்று கருதலாகும். மூழு முதற் பொருளாய சிவபெருமானை 'எட்டு வான் குணத்து ஈசன்' என்று அப்பர் பெருமானும், 'இறையவனை, மறையவனை, எண்குணத்தினானை' என்று சுந்தரப் பெருமானும் தேவாரத்தின் கண்ணே அமைத்தருளினர். இதுவுமன்றி,

திருக்குறளில் விளங்கும் சைவ சமய உண்மைகள்.

"சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின், மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்ற தெய்வப்புலவர் குறளைத் திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனார் என்னும் சைவசமய ஆசிரியர், தமது திருக்களிற்றுப்படியார் என்னும் சமய நூலில்,

"சார் புணர்ந்து சார்பு கெட ஒழுகின் என்றமையால்
சார்புணர்வு தானே தியானமுமாம்—சார்பு
கெட ஒழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவதில்லை வினைப்பற்று"

என்று அமைத்திருக் கின்றமையால் ஆசிரியர் கருத்

தும் சைவ சமய நூற்கருத்தும் ஒன்றே யென்று தெரியலாகும். இன்னும் சைவ சமயப் பெரியார் ஒருவர்

"தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திரு வாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகம் என்றுணர்"

என்று அருளிச் செய்தமையால் திருக்குறள் சைவ சமய நூல்களுள் ஒன்றாகவே கருதப்படுதல் தெளிவாக விளங்கும்.)

திருக்குறளும் வைணவ சமயமும்.

இவ்வாறே, வைணவ சமயத்தாரும் திருக்குறளைத் தம சமயச்சார்பான நூல் என்று கருதுகின்றார்கள். 'தாமரைக் கண்ணான் உலகு' என்றும், மற்றும் பூவிலுறை செய்யாளைக் குறித்து அமைந்திருக்கின்ற சொற்களையும ஆதாரவாகக் கொண்டு திருக்குறளைத் தம் சமய நூல் என்பார்கள்.

இன்னும் பௌத்தம், சமணம முதலிய சமயங்களும் நாயனாரைத் தம் சமயத்தவர் என்று பாராட்டி மகிழ்கின்றன. சமண சமயத்தில் கடவுள் பூமேல் நடந்தான் என்னும் கருத்துக காணப்படுகின்றதென்றும், அக் கருத்தே 'மலர்மிசை யேகினான்' என்றும நாயனார் சொற்றொடரில் விளங்குகின்றதென்றும் சமண சமயத்தார் கருதுகின்றார்கள். பௌத்த சமயத்தின் அடிப்படையான கொள்கைகள்

திருக்குறளும், பௌத்த சமயக் கொள்கையும்.

காயனார் நூலில் அழுத்தமாகக் கூறப்பட்டிருத்தலால், திருக்குறள் பௌத்தமதச் சார்பாய் எழுந்த நூல் என்று கருதுவாருமுளர். பௌத்த சமயத்தின் அடிப்படையான கருத்தை மணிமேகலை ஆசிரியரான சாத்தனார்,

“ பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது அறிக ”

என்று தெளிவாகக் கூறியிருத்தலால், பிறப்பால் வருவது துன்பமேயென்றும், பிறப்பையொழித்துப பிறவாமையாகிய பெருமபேறு பெறுவதறகு இருவகைப் பற்றையும அறவே ஒழித்தலே வழியென்றும், துறவறமே பிறவியை வேரறுக்கும மருந்து என்றும, பௌத்த சமயங் கூறும் கொள்கையே, திருக்குறளில துறவு என்னும் அதிகாரத்தில்,

“ தலைப் பட்டார் தீரத்துறந்தார் மயங்கி
வலைப் பட்டார் மற்றை யவர் ”

என்னும் குறளிலும், மற்றைய குறளிலும் காணப்படுகின்றது. ஆகவே இவ்வாறு பலவகைச சமயத்தினரும், திருக்குறளைத் தம் நூல் என்று போற்றிப் புகழுகின்ற தன்மையால், அவ்விழுமிய நூல் உலகிலுள்ள உயரிய சமயக் கொள்கைகளை யெல்லாம் தன்னகத்தே யடக்கித் தனக்கு அங்கங்களாய் அமைத்துக்கொண்டு, அவையனைத்திற்கும் தலையாய் நிற்கும் தகுதி வாய்ந்த

ஒரு தனிநூல என்பது உள்ளங்கையின் நெல்லிக் கனிபோல் விளங்குகின்றது.

காலத்தாற் பொது நூல்.

ஒரு நூலின் பெருமை காலத்தாற் காணப்படு மென்பது மொழி நூல் வல்லார் துணிபாகும. காலம என்னும கடுவாரியில் அகப்பட்டு, அதனை எதிர்த்து வெற்றி பெற வலியற்று மறப்பென்னும் கடலுள ஆழ்ந்து போகின்ற நூல்கள் உலகில் பலவாகும. ஆனல் உயரிய உண்மைகள் அமைந்த நூல்கள் காலஞ் செல்லச செலல, வளா மதியும் போல வளர்ந்தோங்கி எங்கும தண்ணொளி பரப்பி, உலக முள்ளளவும் வாழையடி வாழையென வருகின்ற மக்க ளனைவர்க்கும் தமது வண்மையையும வளத்தையும் அளித்து மேம் படச் செய்கின்றன. தெய்வப் புலவர் செய்த ‘தமிழ் மறை’ இத்தகைய நூலாகும். முக்காலத்திற்கும பொதுவாய, விழுமிய உண்மைகள் நிறைந்து திகழு கின்ற காரணத்தால், திருக்குறளைக் காலம கடந்த நூல் என்று கூறுவது மிகையாகாது. ஒவ்வொரு காலத்தில் எழுதப்படுகின்ற நூல்களிற் பல, அக் காலத்தில வாழும மக்கள் வாழ்க்கைக்கே பயன்படத் தக்கனவாய், அக்காலத்தில் மாந்தர் கருத்தைப் பெரிதும கவர்கின்ற பொருள்களைப் பற்றியுமே எழுதப்பட்டனவா யிருப்பதால, அவை பிற்காலத்தில் பயன்குன்றிப் பாழ்படுகின்றன. ஆனல் மககள் உயர் நெறி யறிந்து உய்தற்குரிய உறுதிப் பொருள்களாய அறம, பொருள், இன்பம் ஆகிய மூன்றின் திறம்

தெரிந்து திருவள்ளுவனார் செய்த நூல், எக்காலத்திலும் மாறாப் பயன்தரும் மாண்புடை நூலாய் விளங்குகின்றது.

ஒருவன் தன் வாழ் நாளிலேயே பலமுறை படிப்பானாயின், அவனது அறிவின் திறத்திற்கும், அனுபவ முதிர்ச்சிக்கும், மனப்பாங்கிற்கும் ஏற்பப் பொருள் சுரக்கும் ஞானச் சுனையாகவும் விளங்குகின்றது. நவில் தொறும் நயம் பெருகும் நூலே விழுமிய நூல் என்றும், அறியும் தொறும் முன் அறியாமையை விளங்கக் காட்டுதலே அருநூலின் தன்மை யென்றும் நாயனார் கூறிய சீரிய உண்மைகளுக்கு அவர் நூலே சிறந்த சான்றாகும். நவில் தொறும் நவில் தொறும் நயம் மிக விளைப்பதும் பயில் தொறும் பயில் தொறும் பயன் மிக விளைப்பதும் திருக்குறளின் திற மென்பதனை, அந்நூலை ஓதியுணர்ந்த அறிஞர் தெள்ளிதில் அறிவார்கள். திருக்குறளின் ஆழத்தை அறியு மிடத்து, தெளிந்த நீர் சுரந்து நிற்கின்ற ஓர் கிணற்றை உற்றுப்பார்ப்பான் ஒருவன், அதன் தளம் எட்டக்கூடிய எளிய ஆழத்திலிருப்பதாக எண்ணி இறங்கும்பொழுது அதன் ஆழம் தன்னளவிற்குப் பன்மடங்கு அதிகமாயிருத்தலைக் காணுதல் போல, இரண்டடியால் ஓதற் கெளிதாய் அமைந்துள்ள திருக்குறள் உணர்தற்கரிதாய் அறிய ஒண்ணாத ஆழமுடையதாய் விளங்குகின்றது. ஆதலின் ஒருவன் எக்காலத்திலும் நாயனார் கருத்தை அளவிட்டு அறிந்து விட்டதாகச் சொல்ல இயலாது. ஆகவே

எக்காலத்திற்கும் பொதுவாய உண்மைகள் பொதிந்ததாய், பயில தொறும், புதிய எழுச்சியும், உணர்ச்சியும் தந்து மக்களுக்கு உறுதி பயக்கின்ற நூல் திருக்குறள் என்று கூறுவதில் யாதும் ஐயமில்லை.

சாதிப் போது நூல்

திருக்குறள் எலலாச் சமயங்களுக்கும, எல்லாக் காலங்களுக்கும் எவ்வாறு பொது நூலாய் விளங்குகின்றதோ அவ்வாறே எல்லாச் சாதிகளுக்கும பொது நூலாய் அமைந்திருக்கின்றது. உண்மையில் ஆசிரியரது உள்ளக் கருத்தை நாம் அறிவோமாஞல் சாதி, குலம், பிறப்பென்னும சுழிப்பட்டுத் தடுமாறுகின்ற தன்மை அவரிடம் இல்லை யென்பது வெள்ளிடைமலை போல் விளங்கும். தொழில் வேற்றுமையால் உலகில் பாகு பாடுகள் காணப்படுமே யல்லால், பிறப்புக் காரணமாக ஏற்றமும், தாழ்வும், வேற்றுமையும் இல்லை யென்பது ஆசிரியரது அடிப்படையான கருத்தாகும்.

"பிறப் பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப் பொவ்வா
செய்தொழில் வேற்றுமையால்"

என்ற குறளே மேற்கூறிய உண்மைக்குப் போதிய சான்றுகும். இத்தகைய பொதுத் தன்மையை அக்காலத்திய புலவர்களும் போற்றிப் பாராட்டி யிருக்கின்ருர்கள். திருக்குறளுக்குச் சாற்றுக்கவி கொடுத்த புலவர்களின் பாக்கள் இப்பொழுது திருவள்ளுவ மாலை யென்னும் பெயரால் வழங்குகின்றன. இவ்வாறு சிறப்புப்பாயிரம அளித்த புலவர்களிற் சில

வடமொழியில் சீரிய நூலாகவும் செய்யா மொழியாக வும் கருதப்படுகின்ற வேதத்தையும் தமிழ் மொழி யில் தமிழ மறை யென்று பெயர் பெற்றுளிரும பொய்யா மொழியையும ஒப்பிட்டுப் பார்க்கின்றார்கள்.

“செய்யா மொழிக்கும் திருவள்ளுவா மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே—செய்யா
அதற்குரியர் அந்தணரே யாராயின்
இதற்குரியர் அல்லா தார் இல்”

என்று வெள்ளிவீதியார் என்னும புலவர் கூறுகின் றார். ஆரிய வேதமாகிய எழுதா மறைகரும், தமிழ வேதமாகிய பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே யாம். ஆயினும் வடமொழி வேதத்திற்கு அந்த ணரே உரியரல்லால், மற்றைய வகுப்பினர் அதனைப் படித்துப் பயனடைதற் குரியரல்லர். ஆனால் பொய்யா மொழியாய தமிழ் வேதத்தைப் படித்துப் பயனடை தற் குரியரல்லாதா ரிலலை என்றமையால் எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும திருக்குறளைப் படித் துப் பயனடையலாகும் என்ற பரந்த பொது நோக் கமே இந்நூல் யாவர்க்கும் பொதுவென்னும் உண் மைகருப் போதிய சான்றாகும். இன்னும் திருக்குறளை வியந்து கூறிய கோதமனார் என்னும மற்றொரு புலவர்,

“ஆற்றல் அழியுமென்று, அந்தணர்கள் நான்மறையைப்
போற்றி யுரைத்து ஏட்டின் புறத்தெழுதார்—ஏட்டெழுதி
வல்லவரும், வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல் சோர்வு இன்று”

என்று கூறினார். வடமொழி நான்மறைகளையும் ஏட்டில் எழுதி வைத்தால், பலரும் படித்தலால் அவற்றின் ஆற்றல் குறையும் என்று எண்ணி வேதத்தை ஏட்டில் எழுதாமல் வாய்ப்பாடமாக, வழிமுறை, வழிமுறையாக ஓதியுணர்ந்து அந்தணர் அவற்றைப் போற்றினார்கள். ஆனால் திருவள்ளுவர் தாம் செய்த நூலை வல்லாரும், வன்மையில்லாரும் ஓதினாலும் தம நூலின் திறம் குறையாதென்று, ஏட்டில் எழுதி வைத்து உலகமெல்லாம் பயனடையுமாறு செய்தார். சொல்லே பெரிதென்று போற்றுகின்ற காரணத்தால் வடமொழி மறையோர் ஒலி வழுவாமற் பாதுகாத்தார். ஆனால் நாயனார் பொருளே பெரிதென்று கொண்ட பெரியாராதலின், தம நூலை யாவரும் ஓதலும் வகையால அறிந்துய்ய வேண்டும என்னும் பொது நோக்கத்தில் தலைநின்றவராய்த் தம் கருத்தை உலகத்திற்கு வெளிப்படுத்தினாரென்ற உண்மைகள் நன்றாக விளங்குகின்றன. ஆகவே ஒரு சாதியினர்க்காவது, ஒரு வகுப்பினர்க்காவது சிறப்பாகச் செய்யப் பெற்ற நூல் திருக்குறள் அன்றென்பதும், மக்களாய்ப் பிறந்தார் அனைவார்க்கும அது பொது நூல் என்பதும் இனிது அறியபபடும.

பொது நீதி பொதிந்த பெருநூல்.

யாவர்க்கும் பொது நூலாயிருப்பதோடு பொய்யாமொழி தன்னகத்தே பொது நீதிகளைக் கொண்ட பெரு நூலாகவும விளங்குகின்றது. தமிழ் மொழியில் நீதி நூல்களும், ஒழுக்க நூல்களும மிகப் பலவாய்க்

காணப்பட்டாலும், அவற்றிற் கெல்லாம் தலைமை வாய்ந்து நிற்பது திருக்குறளேயாம். ஆனால் வட மொழியில் வழங்குகின்ற நீதிநூல்களுக்கும் இந்நீதி நூலுக்கும் பெரிதும் வேற்றுமை காணப்படுகின்றது. வடமொழி நீதிநூல்கள் பெரும்பாலும் சாதி வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டு, வழக்கு, தண்டம் முதலிய துறைகளில் ஒரு சாதிக் கொரு நீதியாகவும், ஒரு குலத்துக் கொரு நீதியாகவும் அமைத்துக் கூறுகின்றன. குற்றம் செய்தான் ஒருவனுக்கு, அறம் கூறவையத்தலைவரான நீதியாளர், அவன் குலத்தை அறிந்து, அதற்கேற்ற தண்டனை விதிக்க வேண்டும். ஒரே குற்றத்தை உயர்குலத்தா னொருவன் செய்தால் எளிய தண்டனையும், தாழ்குலத்தா னொருவன் செய்தால் கடிய தண்டனையும் விதிக்கப் பட்டிருத்தலை மநுநீதி முதலாய நீதிநூல்களிற் காணலாம். ஆனால் திருவள்ளுவர் நீதிநூலிலோ, சமன் செய்து சீர் தூக்கும் கோல்போன்ற நடுநிலை வழுவாத பொது நீதியே போற்றப்பட்டுள்ளது. இவ்வுண்மையைச் செந்தமிழ்ப் புலவர் சுந்தரம் பிள்ளை யவர்கள் தமது மனோன்மணீயத்தில்,

> "வள்ளுவர் செய்திருக்குறளை மறுவற நன்குணர்ந் தோர்கள்
> உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொரு நீதி"

என்று மிக உளம் நொந்து, ஏனைய நீதி நூல்க ளென்று பெயர் வாய்ந்தன வற்றை உள்ளத்தால் உள்ளலும் தீது என்று கூறியுள்ளார்.

இத்தகைய பெருமை வாய்ந்த திருக்குறள், அருந்தமிழ் மொழியில் முதனூலாக எழுதப்பட்டிருப்பினும், அது எம்மொழியாளர்க்கும் பொது நூல் என்பதை அறிவுடையார் எவரும் மறுக்க மாட்டார்கள். பல நூற்றாண்டுகளாக நமது அமிழ்தனைய தமிழ் மொழியின் திறமுணராதிருந்த மேற்புலத்து மக்கள் திருவள்ளுவர் நூலின் நயம் உணராதிருந்தனர். ஆனால் தமிழ் நாட்டில் இப்பொழுதும் போப்பையர் என்று வழங்குகின்ற ஆங்கிலப் பாதிரியார், இத் திருந்திய நூலைத் தம் மொழியில் மொழிபெயர்த்து ஆங்கிலம் பயிலுகின்ற நாடெல்லாம் பயனடையுமாறு செய்த நன் முயற்சியைப் பின்பற்றி, இப்பொழுது மேலை நாட்டில் வழங்கி வருகின்ற பன்னிரண்டு மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது தென்று தெரிகின்றது. இன்னும் வடமொழியாய, ஆரியத்திலும் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதென அறிகின்றோம்.

திருக்குறள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளமை.

ஆனால் மொழி பெயர்க்கின்ற பேராசிரியர்கள் இந்நூல் வளத்தால் தம்மொழியும் மேம்பட வேண்டுமென்னும் விழுமிய நோக்கத்துடன் தாம் மேற்கொண்ட தொழிலைச் செய்ய வேண்டுமேயன்றி இவ்வாறு தமிழ் நூலை மொழி பெயர்த்துக் கொண்டு, சூழ்ச்சிகள் பல செய்து, இன்னும் சில காலத்தில் தம்மொழியிலேயே இந்நூல் முதல் நூலாக இயற்றப் பெற்றதென்றும் ஆசிரியர் திருவள்ளுவனார் அதனை மொழிபெயர்த்தா

தமிழுலகிற்குத் தந்தாரென்றும் நன்றி கொன்று உயிர் வாழும் நச்சுத்தன்மை தவிர்தது நன்னோக்கமே தலைப்படுமாயின் தமிழ்நாடு தழைத்தலோடு ஏனைய நாடுகளும் ஏமம் உறும்.

அறத்தின் திறம்

"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு."

உலகில் மக்களாய்ப் பிறந்தார்க்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் உறுதிப் பொருள்களென உயர்ந்தோரால் எடுத்தோதப் படும். இவற்றுள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றுமே நூல்களில் விரிவாக எழுதப்படும். வீடென்னும் விழுமிய பொருள் மனமும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், அதனை அளவிட்டுக் கூறாமல், அனுமானத்தால் அறிந்து கொள்ளுமாறு ஆசிரியர்களால் அமைக்கப் பெறும். வீட்டைப் பற்றி நாயனார் வெளிப்படையாக மொழியாமல், மற்றைய மூன்று பொருள்களையே தமது நூலில் மொழிகின்றமையால், திருக்குறள் முப்பால் நூல் என்று பெயர் பெற்றது. ஆயினும் வீட்டின் தன்மையை நாயனார் குறிப்பாக உணர்த்தாமற் போகவில்லை யென்பது திருக்குறளைத் தெளிவாக ஓதியுணர்ந்த புலவர் கருத்தாகும். அந்நூலின் நயமுணர்ந்து கற்ற நற்றமிழ்ப் புலவர் ஒருவர்

திருக்குறள் முப்பால் நூல் என்று பெயர் பெற்ற காரணம்.

"அறனறிந் தேம், ஆன்ற பொருள் அறிந்தேம், இன்பின்
திறனறிந்தேம், வீடு தெளிந்தேம்"

என்று கூறுகின்றமையால், முன்னைய மூன்றையும் வெளிப்படையாகவும், வீட்டைக் குறிப்பாகவும் நாயனார் உணர்த்தினார் என்பது இனிது விளங்கும். இவ் வீட்டு நெறியொன்றனும் ஒளி நெறியைக் குறிப்பாகக் கூறினரே னும ஆசிரியர் அதனை மிகத் தெளிவுபெறக் கூறியுள்ளா ரென்பது

வள்ளுவர் வீட்டு நெறியையும் கூறி யுள்ளார்.

"இம்மை, மறுமை, இரண்டும் எழுமைக்கும்
செம்மை நெறியில் தெளிவுபெற—மும்மையின்
வீடு அவற்றின் நான்கின் விதிவழுங்க வள்ளுவனார்
பாடினார் இன்குறள் வெண்பா"

என்னும் பெருங்கண்ணனார் பாட்டால் தெளிவாக விளங்கும்.

அறம் என்னும் பொருளை ஆசிரியர் இல்லறம், துறவறம் என வகுத்து ஆராய்கின்றார். இல்லற மென்பது ஒருவன் மனைத்தக்க மாண்புடையாளை மனை யாளாகக் கொண்டு, நல்லொழுக்க நெறி நின்று, அற வோர்க் களித்தல், அந்தணரோமபல, துறவோாக் கெதிர்தல் ஆகிய நல்லறங்களை நாள்தோறும் இயற்றி இனிது வாழ்தலாம். துறவறமென் பது இவ்வுலகப் பொருள்களின் நிலையாமை கண்டு, பிறப்பால் வரு வது துன்பமே யென்றும, பிற

அறம், இல்லறம் துறவறம் என இருவகைப்படும்.

வாமையாகிய பேறே பெரும் பேறென்றும் கொண்டு, இருவகைப் பற்றையும் அறவே ஒழித்து, மறுமைப் பயன் கருதித் தவஞ் செய்யும் விழுமிய நெறியாம்.

இவ்வுலகில் நன்னெறி யென்றும் தீநெறி யென்றும் இரு நெறி யுண்டென்பதும், நன்மையைப் போற்றித் தீமையை அகற்றி மக்கள் வாழ வேண்டுமென்பதும நாயனரது அடிப்படையான கருத்தாகும்.

நன்னெறியும், தீநெறியும்.

நன்னெறி தீநெறியாகிய இருநெறியின் இயல்புகளைப் பகுத்தறிந்து, மக்களை நலவழிப்படுத்தும் அறிவே பகுத்தறி வெனப்படும். அறிவின் தன்மை கூறப் போந்த ஆசிரியர் வள்ளுவனார்,

'சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு''

என்று அருளுகின்றமையால், மனதைச் சென்றவிடமெல்லாம் செல்லவிடாமல் தீநெறியை விலக்கி, நன்னெறியிற் செலுத்துவதே அறிவாகும் என்று நன்கு அறிகின்றோம். இவ்விரு நெறியின் பாகுபாடுகளை நன்குணர்ந்து நன்னெறியாகிய பெருநெறி பிடித்தொழுகும பெருமை பெருதார், மக்களாய்ப் பிறந்தும், அவ்வுயரிய பிறவிக குரிய பெரும பயனை இழந்தவரே யாவர் என்பது ஒருதலையாம்.

வினையின் பயன்.

நல்வினை தீவினை யென்னும் இரண்டின் தன்மையை ஆராயுங்கால், நல்வினை எப்பொழுதும நன்மையே பயக்

கும், தீவினை எப்பொழுதும் தீமையே பயக்கும் என்பது தெளிவாகும்.

> "தீயவை தீய பயத்தலால் தீயவை
> தீயினும் அஞ்சப்படும்"

என்று ஆசிரியர் அருளுகின்றார். தினையை விதைத்தவன் தினையை அறுப்பதுபோல் வினையை விதைத்தவன் வினையை அறுப்பான் என்பது தமிழ் நாட்டுப் பழமொழியாகும். வினை செய்தார் தம் வினையின் பயனினின்றும் எக்காலத்தும் தப்பிப் பிழைப்பது இயலாது.

> "தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை
> வீயாது அடியுறைந் தற்று"

என்று நாயனார் கூறுகின்றமையால், ஒரு பொருளை எப்பொழுதும் பிரியாது தொடர்ந்து செல்லும் அதன் நிழலைப் போன்று தீவினை செய்தானை அவ்வினை விலகாது பின் சென்று அடும் என்பது உண்மையாகும்.

தீவினையைத் திரி கரணங்களாலும் நீக்குதல்.

தீவினையை மனம், மொழி, மெய் என்னும் மூன்று காரணங்களாலும் நீக்குதல் வேண்டும். அஃதாவது தீய எண்ணங்களை மனதால் எண்ணுதலும், தீய சொற்களை வாயால் சொல்லுதலும், தீய தொழில்களைச் செய்தலும் ஆகாவாம். தீய சொல்லுக்கும் தீய செயலுக்கும் தீய எண்ணமே காரணமாகயிருத்தலால், அத்தீய எண்ணம் விளைவதற்கு நிலைக்

களமாயிருக்கும் மனம் எப்பொழுதும் மாசற்றதாய், தூயதாய் விளங்கவேண்டும். இதனாலேயே நாயனார்,

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"

என்று அருளிச் செய்தார். மனத்தின்கண் மாசின்மையே அறமென்றும், மாசுடைமையே மறமென்றும் நன்கு உணரப்படும்.

மனத்தில் மாசு இன்மையே அறம்.

ஒருவன் மனத்தின்கண் நிகழுகின்ற தீய கருத்துக்கள் அழுக்காறு, அவா, வெகுளி யென மூவகைப்படும். இவற்றுள் பிறர் ஆக்கங்கண்டு மனம் பொறாமையாகிய அழுக்காறு மனதில் நிகழுமாயின், அது இம்மையில் செல்வத்தை ஒழித்து, மறுமையிலும் தீயுழி உய்த்து விடும்.

மனதில் நிகழும் மூன்று தீய எழுச்சிகள்.

அழுக்காறுடையான்கண் ஆக்கமில்லை யென்பதும், அஃதுடையான் கெடுதல் ஒருதலை யென்பதும், நாயனாரது முடிந்த முடிபாகும்.

1. அழுக்காறு

இனி அவா வென்பது பிறரை வஞ்சித்து, அவர் பொருளைக் கரவாற் கைப்பற்றக் கருதும் மன நிகழ்ச்சியாம். பிறர் பொருளாய, அவர் உடைமையையும், மனையாளையும் இச்சித்து, கைப்பற்ற வழி தேடும் ஒருவன் கெடுதல் ஒருதலையாம்.

2. அவா.

"அருள் வெஃகி ஆற்றின் கண் நின்றான்
பொருள் வெஃகிப் பொல்லாத சூழக்கெடும்"

என்னும் குறளால், பிறர் பொருளைக் கரவால வஞ

சிக்கக் கருதும் ஒருவன் கெடுவது திண்ணம் என்பது இனி துணர்த்தப்பட்டது. இனிப் பிறன் பொருளாகிய இல்லாளை விரும்புதலும் பெரும் பேதைமை யாதலோடு ஏதம் பெரிதும் தருவதாகும்.

'பகை பாவம் அச்சம் பழியென நான்கும்
இகவா வாம் இல்லிறப் பான் கண்''

என்றமையால், பிறன் மனையாளை நயக்கும் பேதையொருவன், நீங்காப் பகைக்கும், நிறைந்த அச்சத்திற்கும், நிலைத்த பாவத்திற்கும் பழிக்கும் ஆளாவான் என்று ஆசிரியர் அருளுகின்றார். ஆகவே பிறர் உடைமையாகிய, பொருள் மீதும், பெண் மீதும், செல்லுகின்ற ஆசை தீவினைக்கே வித்தாக இருந்தால் அதனை ஒழித்தல் அவசியமாகும். இனி மனதின் கண்ணே நிகழும் வெகுளியெனப்படும் சினமும் கேடு பயக்குமாதலால், அதனையும் வேரோடு அழிக்க வேண்டும்.

3. வெகுளி.

"தன்னைத்தான் காக்கிற் சினம் காக்க, காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்''

என்று திருக்குறள் கூறுகின்றது. இன்னும் சினமே தீவினைக்கு வித்தாகும் என்பது

மறத்தல் வெகுளியை யார் மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும்''

என்னும் திருவாக்கால் அறியலாகும். ஆகவே மக்களுக்கு எக்காலத்தும் தீமையே பயக்கின்ற அழுக்காறு, அவா, வெகுளி யென்னும் மூன்றையும அறவே ஒழிக்கவேண்டுமென்பது அறியப்படும்.

தீய எண்ணங்களை அகற்றுவது அவசியமாதல் போல, தீய சொற்களையும் ஒழிப்பது இன்றியமையாத தாகும். தீய சொற்களும தீமை பயப்பன வாதலால் அவற்றையும அறவே விலக்கவேண்டும். தீய சொல் என்பதனை நாயனார் பயனில் சொல் லென்றும, பிறரைப் பழிக்கும் சொல்லென்றும், இன்னாச் சொல் லென்றும், பொய்ச சொல்லென்றும நான்காக வகுத்துக்கூறுகின்றார்.

தீய சொற்கள் நால் வகைப்படும்.

தமக்கும பிறர்க்கும அறம,பொருள், இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களே பயனில் சொற்களாம. இத்தகைய பயனற்ற சொற்களைப் பாராட்டிப் பேசும இயல்புடையவர், மக்களல்லர், மக்களுள் பதர் என்று ஆசிரியர் கூறுகின்றார். ஆகவே எவ்வாற்றானும் ஒருவன் பயனுடைய சொற்களையே சொல்லவேண்டு மென்பதும், பயனற்ற சொற்களை ஒழிக்கவேண்டு மென்பதும் நாயனார் கருத்தாகப் பெறப்படும.

பயனில்லாச் சொல் (1).

இனிப்பிறரைப் பழிக்கும் சொல்லாவது, அவரில்லாத விடத்து அவரை இகழ்ந்துரைக்கும புறங் கூறுதலாகும. புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலினும், உயிர் துறத்தல் சாலவும் நன்றென்று நாயனார் கூறுகின்றார்.

> " புறங் கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
> அறங் கூறும் ஆக்கம் தரும் "

என்று தமிழ் மறை முழங்குகின்றது. இனி இன்

புறங்கூறல் (2). னாச்சொல்லாவது, கேட்டார்க்குத் துன்பம் பயக்கும் சொல்லாம். இனிய சொற்களைச் சொல்லாது, இன்னாச் சொற்களைச் சொல்லுதல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று என்று நாயனார் அருளுகின்றார். இன்சொல்லால் இவ்வுலகம் மகிழுமேயன்றி, வன்சொல்லால் என்றும் மகிழாதாம். இன்சொல் இயம்புவதாய அறம் எல்லார்க்கும் இயலுமோர் இனிய

இன்னாச் சொல் (3). அறமாகும். ஈதலாகிய அறத்தைச் செய்வதற்குப் பொருள் வேண்டும். ஆனால் இன்சொல்லாகிய அறத்திற்கு ஒன்றும் வேண்டாமையால், இது யாவரும் கையாளுதற்குரிய சீரிய அறமாகும். இவ்வுண்மையைத் திருமூல நாயனார்,

> "யாவர்க்குமாம் இறைவர்க் கொரு பச்சிலை
> யாவர்க்குமாம் பசுவிற் கொரு வாயுறை
> யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
> யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே"

என்று அருளினார். இன்னாச் சொல் இம்மையும் மறுமையும் துன்பம விளைக்கும். இனிய சொல் இம்மையும் மறுமையும் இன்பம் பயக்கும். ஆகலின் அகத்தே அன்பு நிறைந்த ஆன்றோர், மறந்தும் இன்னாச் சொல் இயம்ப மாட்டார்கள். இனிப்

பொய்ச்சொல் (4). பொய்ச் சொல் என்பதற்கு நாயனார் தீமை பயக்கின்ற சொல் என்று கட்டுரை கூறுகின்றார். நன்மை பயக்கின்ற

மறைமலையடிகள் நூல்நிலை
MARAIMALAI ADIGAL

சொல் வாய்மை யென்றும், தீமை பயக்கின்ற சொல் பொய்மை யென்றும் நாயனர் செய்துள்ள பாகுபாடு, பலரும சொற்போர் விளைப்பதற்கு நிலைக்களமாக நிற்பதாகும். ஒருவன் சொல்லுகின்ற சொல்லின் பயன் நோக்கியே, அதனை மெய்ச் சொல், அன்றிப் பொய்ச் சொல் என்று துணிய வேண்டுமே யன்றி, சொல்லளவால் அவ்வாறு கூறுதல் பொருந்தா தென்று நாயனர் கருதுகின்றார். 'வாய்மை' யென்பதற்குக் கட்டுரை கூறப்போந்த ஆசிரியர்,

"வாய்மை யெனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்"

என்று அருளினர்.

வாய்மையின் கட்டுரை.

யாதொரு தீமையும் பயவாத சொற்களைச் சொல்லுதலே வாய்மை யென்று சிறப்பித்துச் சொல்லப்படும் என்று நாயனர் மொழிவதை நோக்குமிடத்து, நயம் ஈன்று நன்மை பயக்கும் சொறகளைச் சொல்வதே வாய்மை யென்றும், தமக்கும், பிறர்க்கும் தீமை பயக்கின்ற சொற்களைச் சொல்வதே பொய்மை யென்றும் நாயனர் கருதியதாகத் தெரிகின்றோம். இக்கருத்தையே மீண்டும் வற்புறுத்தும் பொருட்டு,

"பொய்மையும் வாய்மை யிடத்த, புரை தீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்று நாயனார் தெளிவு படுத்துகின்றார். குற்ற மற்ற நன்மை பயக்குமாயின், பொய்மை யென்று உலக வழக்கிற் சொல்லப்படுகின்ற சொற்களும் வாய்மையின் பாற்படும் என்பதே, இக்குறளின் கருத்தாகும்.

பொய்மையும் வாய்மையும்.

களவு என்ற சொல்லைக் கேட்ட அளவி லேயே, அது தீது என்று கொள்ளலாகாது. களவு நன்று மாறும் உண்டு என்று இறையனார் அகப்பொருள் உரைகண்ட நக்கீரர் கூறுவதுபோல, பொய் என்ற சொல்லைக்கேட்ட அளவிலே அது தீதென்று கொள்ளலாகாது. பொய் நன்றுமாறு முண்டு, என்பதே நாயனார் கருத்தாகத் தெரியப்படும். களவினால் நன்மையும் விளையும் என்பதற்கு நக்கீரர் ஒரு சான்றுரைக்கின்றார். ஒரு மனையாள், தன் தலைவனொடு மாறுபட்டு, உலக வாழ்க்கையை வெறுத்து நஞ்சுண்டு உயிர்நீக்கக் கருதி, ஒரு கலத்தில் நஞ்சு கலந்து ஒருவரும் அறியாதபொழுது, உண்ணும் பொருட்டு அதனை ஓரிடத்தில் ஒளித்து வைத்திருந்தாள். அதனை யறிந்த அருளுடையான் ஒருவன், அப்பெண் மணியின் ஆருயிர் காக்கும் அருங் கருணையால், அக் கலத்தினை அவளறியாமல் கவர்ந்து, வெளியே கொண்டுபோய் நஞ்சைக் கொட்டி விட்டான். இச் செயலறியாத அப்பெண், மருங்கிலுள்ளா ரெல்லாம் நன்றாக உறங்கும் நள்ளிரவில், தான் நஞ்சை மறைத்து வைத்திருந்த இடத்திற்குச் சென்று பார்த்தாள். அங்கு அதனைக் காணாமல் திகைத்து உயிர் துறத்

தற்கு வழியற்றுப் பின்னும் வாழ்ந்திருந்தாள். இச் செயலை ஆராயுமிடத்து, நஞ்சாகிய பொருளை, அதற் குரியளான அந்நங்கை யறியாமல், அருளாளன் கவர்ந்துகொண்டது களவே யாகும். ஆயினும் புறத்தே நிகழ்ந்த செயல் நோக்கி அதனைக் களவெனக் கரு தாது, அச்செயலின் பயன்நோக்கி அதனை அறமெனக் கருத வேண்டும். நஞ்சினைக் களவால் கைப்பற்றிய செயலால், ஓர் ஆருயிர் பிழைத்தது. ஆகவே தோற்றத் தால் ஒரு செயலின் தன்மையை அளவிட்டுரைத்தல் ஆகா தென்பதும், அதன் பயன் நோக்கியே நல்ல தென்றும், அல்லதென்றும வகுத்துக் கூறவேண்டு மென்பதும் நற்றமிழ வல்ல நக்கீரர் கருத்தாகத் தெரிகின்றது. அது போல, சொல்லின் பயன் நோக்கி, அச்சொல் பொய்ம்மையின் பாற் படுமோ, அன்றி வாய்மையின் பாற்படுமோ என்று ஆராய வேண்டுமேயன்றி, இல்லதைச் சொல்வது பொய் யென்றும், உள்ளதைச் சொல்வது மெய் யென்றும், வெளிப்படையாகக் கூறும் வேற்றுமை நாயனுருக்கு உடன்பாடான கொள்கையாகத் தோன்ற வில்லை. இதனை யோா உதாரணத்தால் விளக்கலாம். ஒரு ஆடவன் இறந்த பொழுது, அவன் உற்றார் உறவினரெல்லாம ஒருங்கு சேர்ந்து, கற்புநிலை வழு வாத அவன் மனையாளையும உடன் கட்டையேற்றி வளர்ந் தெரிகின்ற நெருப்பில இட்டு எரித்துவிட வேண்டும் என்னும தீய எண்ணத்துடன், அம்மா

தன்மை பயக்கும் பொய்ச் சொல்லும் வாய்மையாம்.

யைத் தலைவிரி கோலமாகத் தெருவழியே இழுத்துச் செல்வதை அருள் நிறைந்த ஓர் ஆண்மகன் கண்டான். கண்டு மனங்கரைந்து தான் நீதியாயின யாவையும் எடுத்துரைத்தாலும் அக்கயவர் கேளாரென் றெண்ணி அவர்பால் விரைந்து சென்று, ஏ! கொலைத் தொழில் புரியும கொடிய மாந்தர்காள்! நில்லுங்கள். இவ்வாறு முறை யின்றி ஒரு உயிர்ப் பொருளைக் கொல்வாரைத் தூக்கு மரத்திலேற்றிக் கொலலுமாறு நயது அரசனது ஆணை பிறந்திருக்கிறது. அவ்வாணைக்குத தப்பி நீங்கள் உயிர் பிழைக்க வேண்டுமாயின் இம்மாதைக் கொல்லும் எண்ணத்தை அறவே தவிர்த்து அரசனது ஆணையைப் போற்றுமின்! என்று கூறிய உறுதியான சொற் கேட்டு அவ்வாணையை உண்மை யென்று நமபிப் பயந்து, கயவரும் பெண்ணைக் கொல்லாது விட்டுச் சென்றனர். இச்செயலை ஆராயுங்கால், அவ்வருளாளன் உரைததவாறு அரசனது ஆணை யொன்றும் இல்லை யென்று வைத்துக் கொள்வோம். அவ்வாறாயின் அவன் கூறிய சொல, பொய்யோ, மெய்யோ, என்று ஆராயுமிடதது, உள்ளதை உள்ளவாறு கூறாமல் இல்லதை உள்ளதாகக் கூறினமையால் அதனைப் பொய்யென்போமா? அன்றி அச்சொல்லின் பயன் ஓர் பெண்ணின் ஆருயிர் காத்த அருஞ் செயலாதலால், அதன் பயன் நோக்கி அதனை வாய்மை யென்போமா! என்னும் ஆசங்கை நிகழுமிடத்து, ஆசிரியர் திருவள்ளுவனார் அதனை வாய்மை

ஓர் உதாரணம்.

பென்றே கொள்வர் என்று கருதலாகும். ஆகவே தீமை பயக்கின்ற சொற்களும் பொய்ச் சொற்களே யென்றும, அவற்றை ஒழித்து நன்மை பயக்கின்ற சொற்களாய மெய்ச் சொற்களையே சொல்ல வேண்டு மென்றும் நாயனார் அருளிச் செய்தார்.

இனித் தீய எண்ணங்களையும, தீய சொற்களை யும், எவ்வாறு களைய வேண்டுமோ, அவ்வாறே தீய செயல்களையும் அறவே ஒழிக்க வேண்டும்.

தீய செயல்கள்.

தீய செயல்களாவன, ஒருயிர்க்குத் துன்பம் செய்தல், ஒருயிரைக் கொல்லுதல் முதலியனவாம். ஒரு உயிர்க்கு நாம் முற்பகலில் துன்பம் செய்தால, பிற்பகலில் நமக்குத துன்பம் தானே வரும் என்பது ஆசிரியர் துணிபாகும். இன்னும்

> "நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம், நோய்செய்யார்
> நோயின்மை வேண்டு பவர்"

இன்னா செய்தல் (1).

என்றமையால், இன்னா செய்தார் எப்பொழுதும் துன்பத்திலேயே வீழ்ந்து உழல்வர் என்றும, தமக்குத் துன்பம் வேண்டாதவர் பிறர்க்குத் துன்பம் செய்தலை ஒழித்தல் வேண்டு மென்றும், தெளிவாகத் தெரிகின்றது.

ஒருயிர்க்கு இன்னா செய்தலினும், அதனைக் கொல்லுதல் பன்மடங்கு தீமை பயக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ?

"நல்லா றெனப் படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழு நெறி"

என்று நாயனார் அருளினமையால், கொல்லாமை யாகிய அறமே நன்னெறி யென்றும், கொலைசெய்தலாகிய முறையே தீநெறி யென்றும் தெள்ளிதிற் பெறப்படும்.

கொலை செய்தல் (2).

உலகில் இறைவனது ஆணையால் வாழுகின்ற உயிர்ப்பொருள்களைக் கொன்று அதனால் எய்தற் பாலதாகிய ஆக்கம அளவிறந்ததா யிருப்பினும் அவ்வாக்கம் கருதிக கொலைசெய்தல் பெருங்கேடு விளைப்பதாகு மென்று நாயனார் கூறு கின்றார்.

"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை"

என்னும் குறளிலும்,

"அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுதது உண்ணைமை நன்று"

என்னும் குறளிலும், நாயனார் தம் காலத்தில் சில நாடு களில் நிகழ்ந்த பழக்க வழக்கங்களை மறுத்து உண் மையை நிலைநாட்டுகின்றார். ஆசிரியா காலத்தில் வட நாடுகளில், வேள்விகள் மிகுந்து உயிர்க்கொலையும் பல வாய்ப் பெருகினமையால், அதனை ஒழித்து அருள் நெறியை நிலைநிறுததும பொருட்டு புததர் என்னும் பெரியார் உலகில தோனறிக கொல்லாமையாகிய நன் னெறியை வடநாடெங்கும பரப்பினர் என்று இந்திய சரித்திரம எடுததுரைககின்றது. இத்தகைய கொலை நிகழத்திய புரியும வேளவியால வரும ஆககததினும,

கொல்லாமையால் வரும் அறமே சிறந்ததென்று ஆசிரி யர் அழுத்தமாகக் கூறுகின்றார்.

இன்னும் கொல்லாமையாகிய அறத்தினை ஆசிரி யர் எவ்வாறு போற்றுகின்றாரென்பது

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்பின் சாரப்
பொய்யாமை நன்று"

கொல்லாமையே உயரிய அறமாகும்.

என்னும் திருக்குறளால் தெரியலாகும். பொய்யாமையின் சிறப்புச் சொல்ல வந்த பொழுது

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்று பொய்யாமையாகிய அறத்தின் பெருமையை நாயனார் வியந்துரைத்தார். பின் கொலலாமையைக குறித்துப் பேசுங்கால, இவ்வறத்தின் தலைமை நோக்கிப் பொய்யாமைக்கும் மேலாய பெருமையளித்த அழகு கண்டு மகிழ்வதற் குரியதாகும்.

பெரும்பாலும் கொலை நிகழ்வது ஊனைத தின்று ஊனைப்பெருக்கும பொருட்டே யாதலால, அவ் வழககத்தை நாயனார் நன்கு கண்டிக்கின்றார்.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

என்று மிக மனம நொந்து, மககள் ஊனைததின்று

ஊனைத்தின்று ஊனைபபெருக்குதல்.

ஊனைப் பெருககும் வழககததை மேறகொண் டிருப்பின், எவ்வாறு அருள் நெறி உலகில் நிலைபெறும் என்று ஏங்கி வருந்துகின்றார். உல

கில் அருள் நெறி யென்னும் ஒளி நெறி நிலைபெற வேண்டுமாயின் கொலைத் தொழில் அறவே ஒழிய வேண்டும். கொல்லாமையாகிய நெறி குவலய மெலாம் பரவி ஓங்கவேண்டும். மன்னுயி ரனைத்தையும் மக்கள் தம்முயிர்போல் எண்ணி வாழும் அன்பு நெறி எங்கும் சிறக்கவேண்டும். இன்னும் தவம் என்பது இத்தன்மைத்தெனக் கட்டுரை கூறப்போந்த விடத்தும் நாயனார்,

> " உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செயயாமை
> அற்றே தவத்திற்கு உரு "

என்று, மற்றோ ருயிர்க்கும் தீங்கு செய்யாதிருத்தலே உயரிய தவமென எடுத்தோதுவாராயினர். ஆகவே தீய எண்ணங்களும், தீயசொறகளும், தீயசெயல்களும் தீமையே பயக்கு மாதலால், மனம், மொழி, மெய்யாகிய மூன்றாலும தீமையை விலக்கவேண்டு மென்பது பெறப் படுகின்றது.

இன்னா செய்யாமையே தவம்.

தீவினை தேயுமாயின் நல்வினை ஓங்கி வளரு மென்பது ஓர் உண்மையாகும. தீமை பயக்கின்ற மறம் தளர்ந்து அறம் வளர்ந்தோங்க வேண்டுமாயின் அன்பென்னும் அருங்குணம போற்றி வளர்க்கப்பட வேண்டும். அன்பு என்பது தொடர்புடையார் மாட்டு நிகழு கின்ற ஓர் உள்ள நெகிழ்ச்சியாம். அன்பின் தன்மை கூறவந்த ஆசிரியர் நக்கீரர், " குடததுள் விளக்கும்

அன்பின் தன்மை.

புதடற்றுள் வாளும் போல" இதுகாண் அன்பென்று தந்து காட்டலாகாது. "அன்புடையரான குணங் கண்ட விடத்து இவை யுண்மையான் ஈங்கு அன்புண் டென்று அனுமித்துக் கொள்ளற்பாற்று" என்று கூறுகின்றமையால், அன்பு இத்தன்மைத் தெனக் கட்டுரை கூறுதல் இயலாதென்பதும், அவ்வன்பால் நிகழும் புறசெயல்களாலேயே, அஃதுண்டென்று அனுமானத்தால் உணரப்படு மென்பதும் விளங்கும். இவ்வன்புதான், நிகழுமிட நோக்கிப் பல பெயரால் வழங்கும். எல்லாம் வல்ல முழுமுதற் பொருளாய இறைவன் பால் வைத்த அன்பு பக்தி யென்றும், மனை யாள் பால் வைத்த அன்பு காதல் என்றும், ஒத்தவர் பால் வைத்த அன்பு நட்பென்றும், இவ்வாறு பல பெயர் கொண்டு விளங்கும். இவ்வன்பு சிறிது சிறிதாக வளர்ந்து, தமமுடன் தொடர்பிலார் மாட்டும், ஏனைய அறிவாற் குறைந்த உயிர்ப்பொருள்கள் மாட்டும் பரவிச் செல்லும்பொழுது அருள் என்னும் பெயரா மையும். இவ்வுண்மையை 'அன்பின் குழவி அருள்' என்று நாயனார் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார். அன்பிலா ரெல்லாம் எப்பொழுதும் தம் நலமே பெரி தாகக் கருதும் தன்மையில அமர்ந்திருப்ப ரென்றும், அன்புடையார், பொதுநலம் பேணும் பெருமை வாய்ந்து, தமக்கென வாழாது பிறர்க்குரியராய் வாழ்ந்து வருவார்கள் என்பதும்,

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்னும் திருக்குறளால் தெளிவாக விளங்கும். அன்புடையார் எப்பொழுதும் இன்சொல் இயம்பும் இயல்புடையரா யிருப்பரே யல்லாமல், மறந்தும் வன்சொல் வழங்கார். அன்புடையாரது உள்ளம் பிறர் துன்பங்கண்டு பொறாமல், வெந்தழலிற்பட்ட மெழுகுபோல் உருகி, அத்துன்பத்தை ஒல்லும் வகையால் நீக்க முன்னின்று முயலும். தம்மிடம் உள்ள பொருளை உண்ண உணவும், உடுக்க உடையும் இல்லாத வறியார்க்கு வழங்கி அவர் துயரைக் களைய அன்புடையார் முன்வருவார்கள். தம்மிடத்துச் செல்வம் சுருங்கிய காலத்தும், ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும், அவ்வாறு ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டல்போல, தம்மால் இயன்ற அளவு அறஞ் செய்வதில், அன்புடையார் சிறிதும் தளர மாட்டார்கள். பசிப்பிணியால் வருந்தும் மக்களுக்கு ஆருயிர் மருந்து என்று அறிஞர் கூறுகின்ற ஆகாரமளித்தல் தவத்தினும் பெரியதோர் தகுதியுடையதாகும்.

அன்பும் அறமும்.

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல், அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின்பின்"

என்று நாயனார் கூறுகின்றமையால், பசி நோயைப் பொறுத்து புற்றுமாய் மரமாய் வற்றிக்கிடந்து தவஞ் செய்யும் உயரிய ஆற்றலைப் பார்க்கிலும், அப்பசியை மாற்றி, அதனால் வருந்தும் உயிர்க்கு இன்பம் அளித்தல் உயர்ந்ததாகும் என்பது பெறப் படுகின்றது. பொருளுடையவர், பசியால் வருந்தும் ஏழைகளு

டைய பசியைத் தீர்த்து அவர் வயிறுகிய அழகிய பெட்டிகளிலேயே, தம் பொருளை அமைத்துப் பாது காக்க வேண்டும் என்று நாயனர் அழகாகக் கூறுகின்றார். இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம், விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டே யாகுமென்பது நாயனருடைய அடிப்படையான கருததாகும்.

இவ்வாறு அறத்தைப் பாதுகாக்கின்ற பெரியார், அடக்க முடையராய், நல்லொழுக்க முடையராய், நடுநிலை தவறுதவராய், பொறுமை யுடையராய் வாழ்ந்து வருவார்கள். தன்னயம கருதியேனும், அறியாமையாலேனும், ஒருவன் தீமை செயத விடத்து, அதனைப் பொறுததல பெரியார் தன்மையாகும். இவ்வாறு பிறா செய்த தீமையைப் பொறுததுக் கொள்வது நன்றே யெனினும, அத்தீமையை மறததல அதனினும நன்று. இவ்வாறு மறததலோ டமையாது தீமை செய்வாககு அவர் நாணுமபடி நன்மையும செய்தலே சான்றுண்மைக்கு அழகாகும். இன்னு செய்தாரை ஒறுககும உபாயததை நாயனர்,

தீமைசெய்தார்க்கு நன்மை-செய்தல்.

> "இன்னு செய்தாரை ஒறுத்தல் அவா நாண
> நன்னயம் செய்து விடல்"

என்று அருள்கின்றுர். ஒருவனுக்குத் துன்பம் செய்தவர்களையும், தீங்கு இழைத்தவர்களையும் ஒருவன் தண்டிக்கும் முறை யாதெனின், தீமை செய்தவர் நாணும்படி அவர்க்கு உயரிய நன்மை செய்துவிடலாகும்.

தீமை செய்தவனுக்கு நன்மையே ஒருவன் செய்யுங் கால், அவன் நெஞ்சே அவனைச் சுட்டுணர்த்தி நல் வழிப் படுத்தும்.

" இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு "

என்றமையால், இன்னு செய்தார்க்கும் இனியவை செய்தலே சிறந்ததாகும் என்பது இனிது விளங்கும். இவ்வுண்மை,

" அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை "

என்னும் குறளாலும் விளங்கும். அறத்தை வளர்ப் பதற்கு அன்பு அவசியமாதல் போல, மறத்தைக் கொன்று ஒழிப்பதற்கும், அன்பே கருவியாய் அமைந் துள்ளது.

இனித் துறவற மென்னும் உயரிய நெறியில் நிற் கும் பெரியார், இவ்வுலகின் நிலையாமையை உணர்ந்து, உடலோடு உயிர் ஒன்றி நிற்கின்ற காலத்தே மறு மைப் பயனை அளிக்கவல்ல முறையினைத் தேர்ந்து ஒழுக ஆர்வம்கொண்டு, இருவகைப் பற்றையும் அறவே ஒழித்த ஆன்றோராவார். சுருங்கச் சொல் லின், புறமாகிய செல்வத்தின் கண்ணும், அகமாகிய உடம்பின் கண்ணும் உள்ள பற்றை அறவே விடுதலே துற வெனப்படும். யான், எனது என்னும் செருக் கொழிந்து, ஐம்பொறிகளை வாயிலாக வுடைய ஐம் புலன்களும் அவிந்து, இறைவனை நினைந்து, பிறவா

துறவற நெறி. மையாகிய பெரும்பேறு பெறுதற்குத் தவம் புரியும் பெரியாரே பற்றற்றவ ராவார். "பற்று அற்ற கண்ணே பிறப்பறுக்கும்" என்றமையால் உலகப்பற்று ஒழிந்த இடத்து, பிறப்பும் ஒழியும, என்பது பெறப்படும். இத்தகைய இருவகைப் பற்றையும் ஒழிப்பதற்கு யாதொரு பற்றும இல்லாத இறைவனைப் பற்றுதலே நெறியாகும். இவ்வாறு உயரிய துறவற நெறியில் நின்ற பெரியார், பிறப்பென்னும பேதைமை நீங்கச சிறப்பென்னும் செம்பொருள் காணும மெய்யறிவு பெறுவர். இத்தகைய மெய்ஞ்ஞானம பெற்றோர், கற்றோர் யாவரும் அறியா அறிவினராய்க் கற்றோர்க்குத் தாம வரம்பாகிய தலைமையராய் உலகில் வாழ்ந்து வீடு பெறுவர். இத்தன்மையாளரது பெருமை, இவ்வளவென்று கூறுதல் இயலாதென்பது நாயனர் கருததாகும்,

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக கொண்டற்று"

என்னும் திருக்குறளால் இவ்வறவோர் பெருமை அளவிடற் கரிதாம் என்பது இனிது அறியப்படும். உண்மையாக உலகபபற்றற்ற உயர்ந்தோர் பெருமையை, நாயனர் பலபடப் பாராட்டிக் கூறினரேனும், அகத்தில் களவொழுக்கமும், புறததே துறவொழுக்கமும் உடைய போலியரை, நெல்லினின்றும் பதரை வேறுகப் பிரிப்பதுபோல, நமது அறிவாற் பகுத்துணர்ந்து உண்மைத் துறவிகளையே போற்றவேண்டுமென உறுதியாகக கூறுகின்றர். அகத்தில் அன்

யில்லாதார், செய்யும் பூசனையும், பூவும் நீரும், பயன் படாதவாறு போல, அகத்துறவில்லாத போலியர், புறத்தே துறவியர்க்குரிய உடையுடுத்தலாற் போந்த பயன் யாதுமில்லை. உலகில் உயர்ந்தோர் பழிக்கும், செயல்களை ஒருவி, மனத்தூய்மை யுடைய உள்ளத் துறவுடையோர், சடை முடியும, மரவுரியும், தரித்துக் கந்த மூலம் புசித்துக் கானகத்திடை வதிந்து கடுந் தவம புரிய வேண்டிய அவசிய மில்லை.

உண்மைத் துறவும், போலித் துறவும்.

"மழித்தலும், நீட்டலும் வேண்டா, உலகம்
பழித்த தொழித்து விடின்"

என்று நாயனார் கூறுகின்றமையால், ஒழுக்கமே பெரி தென்பதும், உடையாலும் சடையாலும் உயர்வு பெற முடியாதென்பதும், உள்ளங்கையின் நெல்லிக்கனி போல் விளங்கும. உண்மையாக ஆராயுங்கால், காட்டிடைச்சென்று கந்த மூலம் புசித்துக் கடுந்தவம் புரியும் பெரியோரைப் பார்க்கிலும் நாட்டிடை வாழ்ந்து நற்றவம் செய்யும் நல்லோரே நனி சிறந்த வர் என்பது, நூலறிந்த நுண்ணறி வுடையோர் கருத் தாகும். பழுதறு தீங்கனிகள் நிறைந்து மணங்கமழ்ந்து மனதையும கண்ணையும் ஒருங்கே கவரும கவின்பெறு சோலையின் நடுவே, பசித்திருந்தும் அப்பழங்களின் மேற் செல்கின்ற ஆசையை அடக்குவதே அடக்க மென்று சிறப்பாகச் சொல்லப்படும். அது போனறு, ஓவியத்தில் எழுதவொணு உருவமும், குழலும் யாழும்

அமிழ்தும் குழைத்தாற் போன்ற மெல்லிய குரலும், அன்னமன்ன மென்னடையும், அமையப்பெற்ற மங்கையர், நிறைந்து, மாசறு பொன்னும், மணியும், தூசியும், துகிலும் மலிந்து நிரம்பித் திகழ்கின்ற மாநகரத்தி லிருந்துகொண்டு, அப்பொருள்களின் மேல் செல்லும் இச்சையை ஒழித்து இறைவன்பால், மனத்தைச் செலுத்தும் மாட்சியே சிறந்ததாகும். அது வன்றி அனுபவப் பொருள்கள் யாதுமின்றிக் கல்லும், முள்ளும் கலந்து விளையாடும் கானகத்திலிருந்து கொண்டு, மனத்தை அடக்கிவிட்டதாகச் சொல்வது கவிநயமே யன்றி உண்மையன்று. ஏனெனில், ஐம் பொறிகளையும், மனத்தையும் கவரத்தக்க பொருள்கள் ஒன்றுமில்லாத விடத்து, மனத்தை அவைகள் மேற் செல்லவொட்டாது அடக்கவேண்டிய அவசியமும் இன்றாய் விடும. அன்றிக் காட்டில் சென்ற பின்னரும், மனம தான விட்டகன்ற பொன்னையும், பொருளையும், பெண்ணையும், நினைந்து பின் நிற்குமாயின், அத்தகைய உள்ளமுடையான் துறவியன் றென்பது ஒரு தலையாம. ஆகலின் மாளிகையிலிருந்தாலும், மலைக்குகையில் வதிந்தாலும், மனத்தை அடக்கித் தூய நெறியாய துறவற நெறிபற்றி ஒழுகுதலே சீரும் சிறப்பும் தருவதாகும என்பது நாயனார் கருத்தாகும.

நமது நாட்டில் இப்பொழுது காணப்படுவது போலவே, அக்காலத்திலும் நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்ந்துவந்தனர் என்பது திருக்குறளின் வாயிலாகத் தெளிவாக விளங்குகின்

றது. புலியின்தோல் போர்த்துமேயும் பசுப்போல மனத்தின் கண் மாசுடையராய் மறைந்தொழுகும் மாந்தர் உலகில் பலராவர். இவ்வாறே பசுத்தோல் போர்த்திய புலிகளும் உலகில் உண்டு. இத்தகைய தவமறைந்தொழுகும தன்மையிலாளரைப் பூத சதுக்கத்தினின்றும் பூதம் வெளிப்பட்டு காத நான்கும் கடுங்குரல் எழுப்பிப் புடைத்துண்ணும் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இப்பெற்றியராய போலித் துறவிகளைப் போக்கி, உண்மைத் துறவிகளையே இல்வாழ்வான் உணவு முதலிய வற்றால் பேணிப் போற்றவேண்டும்.

பசுத்தோல் போர்த்த புலிகள்.

> " துறந்தார்க்கும் துறவாதவர்க்கும் இறந்தார்க்கும்
> இல்வாழ்வா னென்பான் துணை "

என்று நாயனார் கூறுமிடத்து, காவியுடை யுடுத்தவரை யெல்லாம் கண்டு வணங்கி, அவர் குறையை நிறை செய்யவேண்டுமென்று கருதினாரல்லர். ஆகவே துறவறத்திற்குறிய உயரிய ஒழுக்கத்தில் வழுவாதிருப்பவரே துறவோரென்றும், அவரே இல்வாழ்வாரால போற்றப்படுதற்குரியரென்றும் எளிதில் விளங்கும்.

இத்தகைய மெய்த்துறவிகளே மெய்யுணர்ந்து, வினையின் நீங்கிய தம் விளங்கிய அறிவினால், மக்களாய்ப் பிறந்தார்க்கு உறுதிப் பொருள்களை எடுத்துரைக்கும் ஆற்றல வாய்ந்தவராயிருப்பர். இன்னார்

எடுத்துரைக்கும் மறை மொழி தானே மந்திரம் எனப்படும்.

> நிறை மொழிமாந்தர் ஆணையிற் கிளந்த
> மறை மொழிதானே மந்திரம் என்ப ”

மறைமொழி. என்னும் தொல்காப்பியனார் பெரு வாக்காலும்,

> ‘ நிறை மொழிமாந்தர் பெருமை நிலத்து
> மறை மொழி காட்டி விடும் ”

என்னும் திருக்குறளாலும் இவ்வுண்மை தெளிவாக அறியப்படும். உலகில் பல சமயநெறிகளை நிருவிய பெரியாரெல்லோம், தாம மெய்யாக்கண்ட உண்மைகளை உலகமெல்லாம் உணர்ந்து உய்தற்பொருட்டு, உலகினர்க்கு மொழிகளின் வாயிலாக அருளிச் செய்வர். இம்மொழிகளடங்கிய நூல்களே மறையென்று உலகில் வழங்கும். இப்பெருமை வாய்ந்த பெரியார், அறவோர் என்னும் சிறப்புப் பெயரால் ஆசிரியரால் அழைக்கப் பெறுகின்றனர்.

> “ அந்தணரென்போர் அறவோர், மற்றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுகலான் ”

என்னும் குறளால் அந்தணரே, அறவோரென்றும், அருளாளர் என்றும் நாயனார் சிறப்பித்துள்ளார். இல்லறத்திற்கு அன்பு அடிப்படையாய் விளங்குதல்போல, துறவறத்திற்கு அருள் அடிப்படையாகும். பொருளிலார்க்கு இவ்வுலகமில்லாதவாறு போல, அருளிலார்க்கு அவ்வுலகமில்லை யென்று ஆசிரியர் தெளிவாகக் கூறுகின்றார்.

இனி, இல்லறம் நன்றோ! துறவறம் நன்றோ! என்னும் ஆராய்ச்சி சில விடங்களில் நிகழினும் இத்தகைய கணக்காயர் பாடத்தால் பெரும் பயன் அதிகம் இன்றென்பது திருக்குறளை நன்கு ஓதி யுணர்ந்த பெரியார் கருத்தாகும். நாயனார், இவ்விரு நெறியையும் இரு கண்ணெனவே போற்றுகின்றாராதலின், அவர் மனதில் இதனின் இது சீரியது என்னும் ஆராய்ச்சியே எழுந்ததாகத் தோன்றவில்லை. "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" யென்று இல்லறத்தைச் சிறப்பித்த நாயனார், "தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்" என்று துறவறத்தின் சிறப்பைக் கூறினார்.

இல்லறம் நன்றோ? துறவறம் நன்றோ?

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின், புறத்தாற்றில்
போய்ப் பெறுவ தெவன்"

என்று இல்லறத்தை வியந்து கூறிய நாயனார்,

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மறைய வர்கள் தவம்"

என்று துறவறத்தைப் பாராட்டினர். ஆகவே இவ்விரு பெரு நெறியில் எந்நெறியில் நின்றாலும், அறத்தைப் போற்றி வளர்க்கும் பெரியார், அந்தமில் இன்பத்து அழிவில் வீடு அடைவது ஒரு தலையாமென்பதே நாயனார் கருத்தாகத் தெரிகின்றோம.

அரசியல் முறை

"நெல்லும் உயிரன்றே: நீரும் உயிரன்றே.
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்".—புறநானூறு.

நம் தமிழ் நாட்டில் அரசியல் நடாத்திய மூவேந்தரது வரலாறு பெரும்பாலும் அறியாமை யென்றும் ஆரிருள் வாய்ப்பட்டு, விளக்கமாக அறிதற்கு வழியற்றுக் கிடக்கின்றது. தமிழகத்தின்கண் அக்காலத்தில் ஆட்சி புரிந்த அரசரெல்லாம் தமது உரிமைகள் எவ்வகையாகவும் வலை யறுக்கப்படாமல், அரசியல் நடாத்தினர் என்பது சில சரித்திர ஆசிரியர்களின் கருத்தாகும். இக்காலத்தில், பல நாடுகளில் காணப்படுகிற குடியரசு என்னும் முறை அக்காலத்தில் தமிழகத்தில் இல்லையென்றே சொல்லலாம். ஆனால் அரசன் நாடாளுகின்ற காலத்தில் குடிகளின் நன்மையைக் கண்ணும் ஆவியுமாகக் கருதி வளர்த்தானென்பதும், தனக் களவிறந்த அதிகார மிருந்தபோதிலும், அதனை அறத்தின் வழிச் செலுத்தி ஆட்சி செய்தானென்பதும், நன்கு தெரிகின்றது. இவ்வாராய்ச்சியில், தமிழ் நாட்டு அரசியல் முறைகளை விளக்கமாக எடுத்துரைத்த தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் கருத்துக்களைத் தெரிதல் அவசியமாகும்.

தமிழ் அரசின் தன்மை.

அரசனது இயல்புகளை ஆசிரியர் திருவள்ளுவனார் விரிவாக எடுத்துரைக்கின்றார். அரசன், இன்ன குணங்களுடையனாய் இருக்கவேண்டும், இன்ன

குற்றங்களி னீங்கியிருக்கவேண்டும், இன்ன அங்கங்

நல் அரசின் குணங்கள்.

களை யுடையவனய் அரசியல் நடத்த வேண்டும் என்ற அமைதிக ளெல்லாம் நன்ருக வகுத்துரைக்கப் பெற்றுள்ளன. முறை தவருது அரசியல் நடத்தி மக்களைக் காப்பாற்றும் மன்னவன் இறைவனேடு ஒப்பவைத் தெண்ணப்படுவானென்றும, மனத்திண் மையும், அறிவும், ஊக்கமும அரசனுக்கு இன்றியமை யாதன வென்றும், தன்னைக் காண விரும்புவோர்க் கெல்லாம் எளிதில் காணக்கூடியவனய், கடுஞ்சொல் வழங்காது இன் சொல் சொல்லும இயல்புடைய வனய், அரசன் அமைந்திருக்க வேண்டுமென்றும், செருக்கும், சிறுமையும் இலலாது, குறறமும சீற்ற மும் தன்னைச் சாராது அரசியல் நடத்தவேண்டு மென்றும, நாயனர் அருளுகின்ருர். இத்தகைய உயரிய குணங்களெல்லாம அமையப் பெறுவதற்கு அரசன் கல்வி யறிவுடையனயிருக்க வேண்டுமென் பது சொல்லாமலே அமையும். மணற்கேணியில் தோண்டுகின்ற அளவாக நன்னீர் சுரத்தல போல, கல்வியை முனைந்து கற்க, கற்க, அறிவு மேமபட்டு வளரும். இத்தகைய அறிவுடைய அரசன் எல்லா முடையவன் என்றும, அறிவில்லா அரசன் என் னுடையனேனும் இலனேயாவன் என்றும், நாயனர் நன்ருய்க் கூறுகின்ருர். அறிவில்லாத ஒருவனிட முள்ள பொன்னும், பொருளும், மாதரும் மக்களும், மற்றெல்லாம் பயனற்றனவாம. அறிவே அரசனுக்கு

இறுதி வாராமற் காக்கும் அருங்கருவியாகும். பகைவர் அழிக்கலாகா அரணாகும்.

இத்தகைய அறிவு அமையப்பெற்ற அரசன், பெரியாரைத் துணைக்கொண்டு, சிற்றினஞ் சேராது அரசியல் நடத்த வேண்டும். விண்ணினின்று விழும் மழைநீர், யாதொரு நிறமும், சுவையும அற்றதாய் இருப்பினும், அந்நீர் எந்நிலத்தில் வீழ்ந்து சேருகின்றதோ, அந்நிலத்தின் நிறத்தையும் பண்பையும் ஏற்றுக்கொள்ளுதல் போல, அரசனது மனப் பண்பும் அவன் சார்ந்து நிற்கும், மக்களது இயல்பால் மாறுதலடையும். நல்லாரைத் துணைக்கொண்டால் அரசன் நன்னெறியில் நின்று செங்கோல் செலுத்துவான். தீயாரைத துணைக்கொண்டால தீய நெறியில் நின்று கொடுங்கோல் மன்னனாவான். ஆதலால், அரசன் எப்பொழுதும் அறனறிந்து மூத்த அறிவுடையாரைத் துணைக்கொண்டு அரசியல நடததவேண்டும் என்று ஆசிரியர் அருளுகின்றார். நம் பண்டைத் தமிழரசனைச் சூழ்ந்து, எப்பொழுதும், ஐம்பெருமகுழுவும, எண்பேராயமும் இருந்தனவென்று சிலப்பதிகாரம முதலிய சங்கநூல்களால், தெரிகின்றோம். அரசன் ஒரு அரும், பெரும் தொழிலைச் செய்ய முயலுமுன், தன்னைச சுற்றியுள்ள அறிவுடையாரில், அத்தொழில் முறையில் நூலறிவோடு நுண்ணறிவும் அமையப்பெற்றவர்களுடன், ஆலோசித்து, அவர்கள் கருத்தைத் தழுவியே, தான் எண்ணிய கருமங்களைத் திண்ணமாய் முடித்தான் போலும்.

அரசனைச் சுற்றியுள்ளோர்.

அரசன் ஊக்கம் பெரிதும உடையனுய்த் தான் எண்ணிய தொழில்களை ஓயாது, உலையாது சலிப்பின்றிச் செய்யும் மன உறுதியுடையனுய் இருக்கவேண்டும். ஒரு தொழிலைச் செய்யத் தொடங்குமுன அதனைப் பலவகையாலும் ஆராய்ந்து, தெளிந்து துணியவேண்டும்.

ஊக்கமுடைமை.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்று திருக்குறள் கூறுகின்றது. இவ்வாறு துணிந்தபின், எவ்வாற்றானும் பின் வாங்காது திண்ணமாய் முன்னின்று முயன்று அதனை முடிக்கவேண்டும. அரசன் மன உறுதியுடையனுயிருப்பின், செயற்கரிய செயல்களும் மிக எளிதில்முற்றுப்பெறும.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துவா, எண்ணியார்
திண்ணியராகப் பெறின்"

என்று இவ்வுண்மையை நாயனுர் எடுத்துரைக்கின்றுர். ஒரு அருந்தொழிலை முடிகக நினைக்கும அரசன், மிகக மனவுறுதியுடன் முயலவானே யானுல், அவன் எண்ணிய கருமம எண்ணியவாறே முற்றுப்பெறு மென்பது திண்ணம். விதி வலிதே யாயினும், அவ்விதியையும ஊக்கத்தால் வெல்லலாம என்பது ஆசிரியர் கருத்தாகும்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்"

என்பது நாயனுர திருவாக்காகும்.

போர் செய்து பொருள் ஈட்டுதல் அரசற்குரிய முறையென்று நமது அறநூல்கள் கூறுகின்றன. ஆயினும் போர், அறப்போ ரென்றும், மறப்போ ரென்றும் இருவகைப்படும். இவ்வகையில், மறப்போர் செய்யாது, அறப்போர் செய்வதே அரசனுக்கு ஆக்கம் தருவதாகும. இவ்வாறு அறப்போர் செய்யும் அரசன், பல படைகளை யுடையனாய் விளங்கினாலும, பகைவர் மேல் போர் செய்யத்தொடங்கும பொழுது, காலமும், இடமும், எதிரியின் வலிமையும் அறிந்தே போர்க்கு முற்பட வேண்டும.

இடம் தேர்தல்.

தனக்கு வெற்றியும், மாற் றரசனுக்குத் தோல்வியும் தரவல்ல, தகுந்த இடத்தை அரசன் போர்க்களமாகக் கொள்ளவேண்டும். தனக்குரிய இடந்தவறிச் செல்லும் அரசனது படை இடர்ப்படு மென்பதில் சிறிதும் ஐயமில்லை. தண்ணீரில் வாழுகின்ற முதலை, தனக்குரிய நீர் நிலையில் இருக்குமளவும், மிக வலிமையுடையதாய், அவ்விடம வருகின்ற யானையையும இழுத்துக்கொலலும் ஆற்றலுடையதாய் விளங்கும். ஆனால அம்முதலை தன் னிலை தவறித் தரைசேருமாயின், ஒரு சிறு நாயும அதனை இழுத்துச்செல்லும இயல்புடையதாகும். அதுபோன்று, அரசன் தனக்கு ஏற்ற இடத்துப் படை வகுத்துப் போர் செய்வானானால், வெற்றி பெறுவான். இல்லாவிட்டால், பகைவர் தன்னிலும படையிலும பலத்திலும் குறைந்தவரா யிருப்பினும் தோல்வியே அடைவான்.

தனக்கு ஏற்ற இடத்தைத் தேர்ந்து அமைத்துக்கொள்ளுதல போல, அரசன் தனக்கு ஏற்ற காலத்தையும அறிந்து போர் தொடங்கவேண்டும. ஞால முழுதையும கைப்பற்றக் கருதியிருக்கும் அரசர் காலம் கருதியிருப்பா என்று நாயனார் மிக அழகாக அருளுகின்றார். நீரோடையில் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொககைப் போல, தனக்கேற்ற காலம் வரும் வரையில் பகப்போலிருந்து பின் பகைவர்மேல் புலி போல பாய்ந்து அரசன் வெற்றி பெறுவான்.

காலம் தேர்தல்.

கூகை யென்னும் பருந்து காக்கையைப் பார்க்கிலும் மிக வலிமையுடையதே யாலும், அது பகலில் வெளியே வருமானல் காக்கை அதனைக குத்திக்கொன்றுவிடும; ஆனல இராவில் கூகை யிருககுமிடத்திற்குப் போவதற்கும் காககை யஞ்சும். அது போல, அரசன் தனக்கு வலிய காலமும, பகைவர்கு வலிகுன்றிய காலமும தேர்ந்து போர் செய்ய முறபடவேண்டும்.

> “பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
> வேந்தர்க்கு வேண்டும்பொழுது”

என்று நாயனார் அருளினார்.

மேற்கூறிய அனைத்தும் அமைந்திருந்தாலும், அரசன் கொடுங்கோல மன்னனாய் இருப்பானானல், அவனுக்கு வெற்றி கிடைப்பது அரிதாகும. குடிகளின் நலத்தை தன்னலம போல பேணிப் போறறுகின்ற அரசன் எத்தொழிலை முயன்றாலும வெற்றி

பெறுவான். அரசனுக்கு வெற்றி தருவது அவனது வேலும் படையும் அன்று. ஆனால் அவனது செங்கோல் ஆட்சியே யென்று ஆசிரியர் கூறுகின்றார்.

செங்கோன்மை.

"வேலன்று வென்றி தருவது, மன்னவன் கோல்
அதூஉம் கோடா தெனின்"

என்ற குறளால் மேற்கூறிய உண்மை விளங்கும். தனது குடிகளைத் தன்னோடு இணைக்கிக்கொண்டு, அரசியல் நடாத்தும் மன்னவன், இவ்வுலகனைத்தை யும் ஒரு குடைக்கீழ் அரசாளும் பெருமை வாய்ந் தவனாய் விளங்குவான். இவ்வுலகத்தை யெல்லாம் காக்கும் அரசனைக்காப்பது அவனது செங்கோன் மையே யல்லால வேறன்று. கொடுங்கோல் அரசன் ஆளும் நாட்டில் கடும்புலி வாழும் காடு நன்றே யென்றாற்போல, குடிகளை வருத்தி வரிவாங்கும் அரச னுக்கு அக்குடிகள் அழுத கண்ணீரே அவனுக்குப் படையாகும என்று நீதிநூல் கூறுகின்றது.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத தேய்க்கும்படை"

என்று நாயனார் அருளுகின்றார்.

இனி அரசாங்கம் நடைபெறுவதற்கு இன்றி யமையாத பொருளை எவ்வாறு அரசன் பெற்று அரசியல் நடாத்த வேண்டுமென்பது ஆராய்தற்குரிய தாகும். பொருளை மிகுதியாகவுடைய அரசனே,

பகைவர் அஞ்சும் பான்மையில் அமைந்து, தான் எண்ணிய தொழில்களை எண்ணியாங்கு செய்யும் ஆற்றல் வாய்ந்தவனா யிருப்பன்.

பொருள் உடைமை.

இவ்வுண்மை

" பொன்னினாகும் பொருபடை, அப்படை
தன்னினாகும் தரணி, தரணியில்
பின்னையாகும் பெரும்பொருள், அப்பொருள்
துன்னுங்காலைத் துன்னாதனவில்லையே "

என்னும் சிந்தாமணிச் செய்யுளால் சிறந்து விளங்கும். அரசனுக்குரிய பொருளை வகுத்துரைக்க வந்த நாயனார்

" உறுபொருளும், உல்கு பொருளும், ஒன்னார்த்
தெறுபொருளும், வேந்தன பொருள் "

என்று கூறுகின்றார். உறுபொருளாவது தனது முயற்சியின்றி அரசனுக்குத் தானாகவே வந்துசேரும் பொருளாகும். பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்து மாண்டுபோன குடிகளின் புதையலாகிய பொருள்களும், தாயத்தாரில்லாது வழி தூர்ந்த மக்களின் பொருள்களும், அரசனுக்குரிய பொருளாம். இனி 'உல்கு பொருள்' என்பது சுங்கத்தால் வரும்பொருள் என்று பொருள்படும். மிகப் பழைய காலத்தே தமிழகத்து வாழ்ந்து வந்த மக்கள், ஐரோப்பிய நாட்டில் அக்காலத்தில் தலைமை வாய்ந்திருந்த யவனருடன் (Greeks) வாணிகம் செய்துவந்தார்கள் என்

பொருள் ஈட்டு முறை.

புதையற் பொருள்.

சுங்கப் பொருள்.

பது சரித்திர உண்மையாகும். வியாபாரத்தாற் கிடைக்கும் பெரும் பொருளுக்காகத் தமது நாட்டை விட்டுத் தமிழநாடு போந்து, தமிழ மக்களுடன் வேற்றுமை யின்றிக் கலந்துறைந்த யவனருடைய மாளிகைகள், காவிரிப்பூம் பட்டினத்தில் கண்ணுக் கெட்டாத தூரம் விண்ணளாவி இருந்தன வென்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

> " கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
> கலந்திருந் துறையும் இலங்கு நீர்வரைப்பும் "

என்றும்

> " கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
> பயனறவறியா யவனர் இருக்கையும் "

என்றும் காணப்படுகிற குறிப்புகளால், யவனர் நம் தமிழநாட்டில் அக்காலத்தே குடிபுகுந்து வாணிகம் செய்து பெரும்பொரு ளீட்டினர் என்பது தானே போதரும். இவ்வாறு மரக்கலங்களிலும், வேறு வழி களிலும், தன் நாட்டெல்லைக்குள் வந்திறங்கிய பொருள் களுக்கு அரசன் 'சுங்கம்' என்னும் வரி வகுத்திருந்த தாகத் தெரிகின்றது.

> " நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
> காலின் வந்த கருங்கறி மூடையும்,
> வடமலைப் பிறந்த மணியும், பொன்னும்,
> குடமலைப் பிறந்த ஆரமும், அகிலும்,
> தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்,
> கங்கை வாரியும், காவிரிப் பயனும்,
> ஈழத் துணவும், காழகத் தாக்கமும் "

எனப்பட்டினப் பாலை கூறுவதால், அக்காலத்தில்

வாணிகம் செய்யப்பெற்ற பொருள்கள் இத்தன்மையன என்று அறியலாகும். அரசன் சுங்கமென்னும் வரியை வணிகருக்கு அமைத்ததுபோல, உழுதுண்டு வாழும் பெரு மக்களிடமும் ஆறிலொன்று இறை பெற்றான் என்று அறியப்படுகிறது.

வெற்றிப் பொருள்.

இனி அரசன் பகைவர்மேற் படையெடுத்துச் சென்று, மாற்றாரைப் போரிற் புறங்கண்டு, அவரிடம் பெறுகின்ற கையுறையும், கப்பமும அரசாங்கத்திற் குரிய பொருளாகும். அக்காலத்தில் தமிழ நாட்டில் அடலேறென விளங்கிய கரிகால் பெருவளத்தான் என்னும பெயர் பெற்ற சோழவேந்தன், போர்க்கோலம் கொண்டு, வடநாடு சென்று, தன்னை எதிர்ப்பாரும், பொருவாரும இன்றி இமயமலையளவும சென்று, அதற்கப்பாலும் தன்னைச செல்லவொட்டாது குறுக்கிட்டுத் தடுத்த அம்மலைமீது கடுங்கோபங் கொண்டு, தன் புலி முத்திரையை அம்மலைமேல் பொறித்து, மீண்டும் தமிழ்நாடு நோக்கி வருமபொழுது

"மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப் புறத்துக் கொடுத்த பட்டி மண்டமும்,
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபில் தோரண வாயிலும்"

பெற்றான் என்று சிலப்பதிகாரம முழங்குகின்றது.

இவ்வாறு அரசன் பெறும் பொருளும அரசாங்கத்திற்கே உரியபொருளாம.

குடிகளிடம வரிவாங்கும பொழுது, அரசன் எவ்வாற்றானும அவாகளை வருததி வாங்குதல கூடாது. குடிகள் தம பொருளை அன்போடும அருளோடும் அரசனுக்குக் கொடுகக வேண்டுமேயலலால, அவர்கள் மனம் நொந்து கொடுக்கும் இறைப் பொருள், அரசனுக்குக் கேடு பயப்பதாகும என்பது நாயனா பலவிடங்களில் வறபுறுத்துகின்ற உண்மையாகும. "அழக்கொண்ட வெல்லாம, அழப்போம என்றமையால, குடி கொன்று இறை கொள்ளும கோமகன் கெடுவது ஒருதலை யென்பது" நன்கு உணர்த்தப் பட்டது.

வரி வாஙகும் முறை.

போர் செய்து பொருளிட்டல் அரசற்குரிய முறையே யெனினும், அரசன் அறப்போர் செய்ய வேண்டுமே யன்றி மறப் போர் ஒரு நாளும் செய்ய லாகாது.

> "ஈன்றாள் பசி காண்பாளாயினும், செய்யற்க
> சான்றோர் பழிக்கும் வினை"

என்றமையால், அறிவுடையார் பழிக்கும் வினையை அரசன், ஒரு பொழுதும செய்ய வொண்ணாது என்பது பெறப்படும. இவ்வா றன்றி மறப்போர் விளைததுச் சேர்த்த பொரு ளெல்லாம், பச்சை மட்கலத்தில் நிறைத்து வைதத நீா போல,

அறப்போர் செய்தல்.

நில்லாது அழியும் என்று ஆசிரியர் கூறுகின்றார். அறப்போர் செய்யும் அரசன் மாற்றரசர் படையின்றி வலியிழந்து நிற்குங்கால் அவரை வெல்லுதல் அழகன்று எனக் கருதிப் பெருந் தன்மையோடு அப்பொழுது அவர் மேற் செல்லாமல, தனது ஆண்மையையும் அன்பையும ஒருங்கே அமர்க்களத்தில் வெளிப்படுத்தின னென்பது, நம் தமிழ் நூல்களால் அறியப் படுகின்றது. நாயனாரும இதனை

"பேராண்மை யென்பதறுகண், ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு"

என்று அருளினார். பகைவர்மேல் மிக வலிமையோடு

ஆண்மையும், அருளும்.

போர் செய்தல் ஆண்மையே யாயினும், மாற்றரசனுக்குத் தாழ்வு வந்த விடத்து, அவன் மீது இரக்கங் கொண்டு அன்பு பாராட்டுதலே, ஆண்மைக்கு அணியாகும். இப்பெருந் தன்மை கவிப் புலவராய கம்பர் பெருமானால நன்கு விளக்கப்பட்டுள்ளது. தன் படைக்கலமிழந்து, தனியனாய் அகப்பட்ட இலங்கையர் கோனது வலியற்ற நிலைகண்ட இராம வீரன், பகைவன் மீது பெருங் கருணை

இராமனது அருள்.

கொண்டு, "இன்று போய்ப் போர்க்கு நாளை வாவென்று" சொல்லிய பெருந் தன்மையைக் கமபர்

" ஆளையா வுனக்கமைநதன மாருத மறைந்த
பூளையாயின கண்டனை யின்று போய்ப்போர்க்கு
நாளை வாவென நல்கினன் நளிங்கமுகின்
வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல் "

என்று அழகாக எடுத்தமைத்தார். இன்னும் பாரதத்தில் படைத்தலைவனான கர்ணனும், வில்லின் வீரனான விசையனும, போர் செய்த காலத்து தன்படைக்கலமிழந்து தனியாய் நின்ற கர்ணனை விசையன் பார்தது "இன்று போய்ப் போர்க்கு இனி நாளை வாவென்று" கூறிய வீரத்தன்மையை வில்லிபுத்தூராழ்வார்,

விஜயனது அருள்.

"அன்று போர் புரி சேனையின் பதியான வீரனை நீ
இன்று போயினி நாளைவா வென இனிதியம் பினனால்
வென்றி கூர் வரி வின்மையா லடல் வெவ்வரககரை முன்
கொன்றகாளையை ஒத்த பேரிசை கொண்ட ஆண்மையினான்"

என்று வியந்து கூறுகின்றார். இன்னும்,

"வீறின் மையின் விலஙகா மென மதவேழமும் எறியான்
ஏறுண்டவர் நிகராயினும் பிறர் மிச்சில் என்றெறியான்
மாறன்மையின் மறம் வாடு மென்றிளையாரையும் எறியான்
ஆறன்மையின் முதியாரையும் எறியான் அடியில் உழவன்"

என்று அரசனது ஆண்மையோ டளாவிய அருளைச் சிந்தாமணி யாசிரியர் கூறுகின்றார். வேலைக் கையில் தாங்கிய வீரவேந்தன், ஒரு விலங்கைத் தன் வேலால் எறிந்து கொல்லுதல் இழுக்காமென்று எண்ணி வெறி கொண்டவேழத்தையும் வெட்டமாட்டான். போர்க்களத்தில் வடுப்பட்ட வீரன் தனக்கு ஒப்பானவனாயிருப்பினும், மற்றொருவன் புண்படுத்திய வீரனைத் தான் வேலால் வெல்லுதல் வெற்றியன்றென

நினைந்து விலகிப் போவான். தன்னின் இளையாரையும், முதியாரையும், வேலாலெறிவது அறமன்றென் றெண்ணி அவர் மீதும் படையைச் செலுத்தான் என்று சிந்தாமணி ஆசிரியர் வீரனது அருளின் திறத்தை வியந்து கூறுகின்றார். இன்னும் புறநானூற்றில்

"மாண்ட அற நெறி முதற்றே அரசின் கொற்றம்"

என்று கூறுகின்றமையால், அறப்போரால் வரும் பொருளே அரசற்கு ஆக்கம் தருவதா மென்றும், மாநிலங்காக்கும் அரசர் எஞ்ஞான்றும் மறப்போர் செய்யலாகாதென்றும் நன்கு தெரிகின்றது.

இவ்வாறு போர்செய்கின்ற அரசர் நால்வகைப் படைகளை யுடையராய் இருந்தாரென்று பழைய நூல்களால் தெரிகின்றோம். தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாள்படை, ஆகிய நால்வகை படைகளும் அரசற் குரியனவாச சொல்லப்படுகின்றன.

நால்வகைப்படை.

"உறுப்பமைந்து ஊறஞ்சா, வெல்படைவேந்தன்
வெறுக்கையு ளெல்லாம் தலை"

என்று நாயனார் கூறுகின்றமையால், அஞ்சாது போர்க் களத்தில் நின்று போர்செய்யும் நாற்படைகளையுடைய அரசன் மிகச சிறந்தோன் என்பது நன்கு விளங்கு கின்றது. வீரமும் மானமும் ஒருங்கே யமைந்தவ ராய், போர்க்களத்தில் பூத வுடமபை நீத்துப் புக ழுடம்பைப் பெறுவதே பெரும்பேறென்று கருதிய வீரர் அக்காலத்தில் தமிழகத்தி லிருந்தாரென்று

பழைய நூல்களால் தெரிகின்றது. இதுவுமன்றிப் போர்க்களத்திற் சென்ற தமது மக்கள் அஞ்சா நெஞ்சுபடைத்தவராய் மாற்றார் முன்னின்று போர் புரிந்து, அவர் படைக்கலத்தால வெட்டுண்டு, போர்க்களத்தில் இறந்தார் என்னும் சொற் கேட்டுப் பெற்றபொழு தடைந்த் இன்பத்தினும, பேரின்பமடைந்த வீரத்தாயர், நம் தமிழ நாட்டிலிருந்தன ரென்று, புறநானூறு முதலிய பழைய நூல்களால் அறிகின்றோம்.

வீரமக்களும், வீரத்தாயரும்.

இவ்வாறு நாட்டின் நன்மைக்காக உயிர்துறந்த பெருமக்களது வீரமும் புகழும் உலகமுள்ளளவும் திகழவேண்டும் என்னும் பெரு நோக்கங் கொண்டு, அவ்வீரரது உருவமைந்த ஒரு பெருங்கல் நட்டு, அக்கல்லில், அவ்வீரர் செய்த அரும் பெரும் செயல்களையும், அடைந்த் வெற்றிகளையும் எழுதி, அவர் புகழை நிலைநிறுத்துவது தமிழ வழக்கமாகும்.

வீரக்கல்.

இத்தகைய 'வீரக்கல்' தமிழ நாட்டில் இப்பொழுதும பலவிடங்களில் நிலைபெற்றிருப்பதாகத் தோன்றுகின்றது. இவ்வழக்கம்

> " என்னை முன் நில்லன்மின் ! தெவ்விர், பலரென்னை
> முன்னின்று, கல்நின்றவர் "

என்னும் குறளாலும் விளங்குகின்றது. ஒரு போர் வீரன் தன் எதிரில் நின்ற வீரனைப்பார்த்து "எம்முடன் போர்செய்ய வந்துநிற்கும் வீரரே ! எம்மரசனுடன் போர்செய்து இதற்கு முன் அவன் வேலாயுதத்தால்

அழிந்து, கல்லிலே நிற்கின்ற வீரர் பலர். ஆகையால் நீரும் அவரைப்போல், கல்லில் நில்லாமல் உடலோடு நிற்க நினைத்தால், எம்மரசனை எதிர்க்கவேண்டாம்" என்று கூறும் வாயிலாக வீரக்கல்லின் தன்மையை நாயனார் விளங்க உரைத்தார். இவ்வழக்கம் தமிழ் நாட்டுப் பழைய வழக்கமென்பது

"காட்சிகால் கோள், நீர்ப்படை, நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்"

என்னும் தொல்காப்பியப் பாட்டாலும், மற்றும் புறநானூறு முதலிய நூல்களாலும் அறியப்படுகின்றது. தகுந்த இடத்தில் சென்று ஒரு கல்லெடுத்து அக்கல்லை அவ்வீரனது உருவாக்கி, அதனை நதியில் நீராட்டி, குறித்த ஓரிடத்தில் நட்டு வீரனும், பெயரும், பீடும் எழுதி, அதற்குக் கோயிலும், மதிலும், வாயிலும் அமைத்து, வாழ்த்தி வணங்கி விழாவெடுக்கும் வழக்கம் தொல்காப்பியம் முதலிய நூல்களில் விரிவாகக் கூறப் பெற்றுள்ளது.

வீரக்கல்லின் தன்மை.

"ஆடவர் பீடும் பெயரும் எழுதியதர் தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்"

என்னும் அகப்பாட்டும இவ்வழக்கத்தையே குறிக்கின்றது. தமிழ நாட்டில் அக்காலத்தில் ஒப்புயர்வற்று விளங்கிய சேரன் செங்குட்டுவன் என்னும் அரசன் வீரமாதெய்வமாகிய கண்ணகியார்க்கு வீரக்கல் நட்டு மகிழும் பொருட்டு, இமயமலையிற் சென்று

கல்லெடுத்து, கங்கையாற்றில் நீர்ப்படைசெய்து, வஞ்சி மாநகரில் கண்ணகிக் கோட்டம் என்னும் கோயி லமைத்து, நடுகல் நட்டு விழா வெடுத்த வரலாறு சிலப்பதிகாரத் தில் மிக விரிவாக விளங்குகின்றது.

கண்ணகியின் வீரக்கல்.

இத்தகைய விழாவையும் பெருமையையும் கண்டவீரர், எப்பொழுதும் அழிதற் பாலதாகிய பூத வுடம்பைப் போர்க்களத்தில் மாய்த்தேனும் உலக முள்ளளவும் பொன்றி ஒழியாத புகழுடம்பைப் பெற ஆர்வம் கொண்டார்கள்.

நெடுங்கடலிற் செல்லும் மரக்கலத்திற்கு மாலுமி யொருவன் எவ்வாறு அவசியமோ அவ்வாறே ஒரு நாட்டிற்கும் வேந்தன் அவசியமென்பது தமிழ்நாட் டுக் கொள்கையாகும். எல்லா வளங்களும் நிறைந்தா யிருப்பினும், வேந்தனில்லாத நாடு மதியிலா வானம் போலும், மணமிலா மலர்போலும், ஒளியிலா மணி போலும் பயனற்றதாகு மென்பது,

> " ஆங்கு அமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
> வேந்தமை வில்லாத நாடு"

என்னும் திருக்குறளால் அறியப்படும். நாட்டில் குற்றம் நிகழ்ந்த பொழுது அதனை விசாரித்து நீதி செலுத்தியதும் அரசனே என்று தெரிகின்றோம். இப்பொழுது பல நாகரிக முற்ற நாடுகளிலும் காணப்படுகின்ற, நீதிபதிகளைத் தலைமையாகக் கொண்ட நீதி மன்றங்கள் அக்காலத்தில் இருந்தன

வென்று கொள்வதற்குச சான்றுகிடைப்பது அரிதா யிருக்கின்றது. முறை தவறாமல் நடு நிலையில் நின்று நீதி செலுத் தும மன்னவன், குடிகளால் பெரி தும பாராட்டப் பெறுவானென் பது,

நீதி போற்றும் அரசனே இறைவன்.

"முறை செயது காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறை யென்று வைக்கப்படும்"

என்னும் குறளால அறியலாகும். இவ்வண்ணம் முறையால் உலகம் காககின்ற அரசனை முழுமுதற் பொருளோடு ஒப்பவைத்தெண்ணுவது, தமிழ நாட்டு வழகக மென்பது,

"திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக்கண்டேனே"

என்னும் திருவாய் மொழியாலும் அறியப்படும்.

வேந்தன் நீதி செலுத்தும் பொழுது நடு நிலையில் நின்று ஆராய்ந்து குறறத்திற்குரிய தண்டனை விதிததா னென்று தெரிகின்றது.

"குடிபுறங் காத் தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்"

என்பதனால், குற்றம் செய்தவனைத் தண்டித்து ஒடுககுதல் அரசநீதி யென்பது விளஙகும். மேலும்

"கொலையிற் கொடியாரை வேந் தொறுத்தல் பைங்கூழ்
களை கட் டதனோடு நேர்"

என்னும் குறளால், கொடுங்குற்றம் செய்யும் கொடி யாரைக கொல்வது, வளரும் பயி ருககுக் களைபறித்தாற்போல, நாட் டிற்கு நன்மை பயக்கும் என்பதுஅறியப்படும். பயிர்

குற்றம் கடிதல்.

செழித்தோங்கி வளர வேண்டு மாயின் அதற்கிடை யூறு செய்கின்றவர்களைப் பறித்தல் எவ்வாறு அவசியமோ அவ்வாறே நாட்டில நலம்பெருக வேண்டுமாயின் அரசன் கொடியாரைத் தண்டித்து நாட்டினின்றும் களைய வேண்டும் என்பது ஆசிரியரது கருத்தாகும்.

வேந்தன் ஒளி.

உலகம் காக்கின்ற வேந்தரிடத்து ஓர் ஒளி உண்டென்றும், அவ்வொளியே உலகினைக் காக்கும் பெருந் திறமா மென்றும், அவ்வொளியே அவர் மாட்டுள்ள தெய்வத் தன்மையை உணர்த்து மென்றும் தமிழ் நூல்கள் கருதுகின்றன. அரசன் உருவத்தால சிறியனேயாயி னும், அவன் பாலுள்ள ஒளியால், அவனை மக்கள் போற்ற வேண்டு மென்னும் கருத்தை நாயனார்

> "இளையர், இனமுறையர், என்றிகழார் நின்ற
> ஒளி யோடு ஒழுகப் படும்"

என்று அரசனிடத்துள்ள ஒளியைக் குறிக்கின்றார். இக்கருத்தையே சிந்தாமணி ஆசிரியரும்

> "உறங்கு மாயினும் மன்னவன் தன் ஒளி
> கறங்கு வெண்திரை வையகங் காக்குமால்
> இறங்கு கண்ணிமையார் விழித்தே யிருந்து
> அறங்கள் வெஃவ அதன் புறம் காக்கலார்"

என்னும் பாட்டால், அரசன் உறங்குகின்றகாலத் தும், அவன் ஒளி உலகத்தைக் காக்கும் என்னும் உண்மையால் விளக்குகின்றார். இவ்வொளி பொருந் திய அரசன் நீதி போற்றும் முறையில் நேர்மை குன்றி ஒரு திறம் பற்றுமாயின், அவ்வரசனுக்கு

அறமே கூற்றாகும என்று பழந்தமிழ் நூல்கள் முழங்குகின்றன.

செங்கோல் வழுவாத அரசியல் நடத்துகின்ற அரசனைச் சூழ்ந்து, ஐம்பெரும் கூட்டங்களும், எட்டுப் பெரிய ஆயங்களும் அமைந்திருந்தன வென்று சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் கூறுகின்றன. நாயனாரும் அமைச்சனது தன்மை கூறுகின்ற இடங்களில், அவனுக்கு மிக இன்றியமையாத குணமாகச் சொலவன்மையை அமைத்திருக்கின்றார். நாடாளுகின்ற அரசற்குத துணையாயிருககும் அமைச்சர், அவையஞசா திருகக வேண்டும, சொல்வன்மை யுடையராய் இருக்க வேண்டும், சபையின் குறிப்புத் தெரிந்து பேச வேண்டும என்று பல வாறாகக் கூறுகின்றமையால, அக்காலததில் அரசனைச சுற்றிலும பெரிய சபைகள் இருந்தன வென்பதும, அச் சபையாருக்கு அரசாங்க முறைகளை எடுததுககூறி, அவருடைய ஆதரவு பெறுதற்கு அமைசசர் பேசும திறமை பெறறவராயிருக்க வேண்டு மென்பதும், அவ்வாறு சபையார் ஒப்புக கொண்ட கருத்தையே அரசன் நடததி முடித்தான் எனபதும், அனுமானத் தால அறியப்படும. இககாலததில் சட்ட சபைகளிலும மற்றைய சபைகளிலும, அரசாங்க முறைகளைத் தெளிவாகவும், உறுதியாகவும எடுததுப் பேசும திறமை வாய்ந்தவர்களையே அமைச்சாகளாக நியமிக்கக்

சபைகளும் ஆயங்களும்.

காண்கின்றோம். அதுபோல,அக்காலத்திலும் அரசாங்கத்தில் சில சபைகள் இருந்ததனாலேயே, சொல்வன்மை அமைச்சர்க்கு வேண்டும் அருங்குணங்களில் தலையாய் நிற்கும் தகுதிபெற்றது போலும்! இன்னும் அமைச்சனாயிருப்பவனுக்குத் தருக்க நூல்பயிற்சி (Logic) இன்றியமையாததென்று நாயனார் கூறுகின்றமையால், அக்காலத்திலும் சபையிலுள்ள அங்கத்தினர் அமைச்சரிடம் கேள்விகள் கேட்கும் வழக்கமிருந்ததென்று ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

சொல்வன்மை.

> " ஆற்றின் அளவறிந்து கற்க, அவையஞ்சா
> மாற்றம் கொடுத்தற் பொருட்டு "

என்று ஆசிரியர் கூறுகின்றமையால், சபையின் உறுப்பினர் நிகழ்த்தும் வினாக்களுக்கு அஞ்சாமல், அப்போதைக்கப்போது மாற்றம் கொடுத்தற்கு அமைச்சர் அளவைநூல (Logic) நன்றாய் அறிந்திருக்க வேண்டுமென்பது பெறப்படுகின்றது. பலநூல்களைப் படித்திருந்தாலும் சொல்வன்மை யில்லையானால் அமைச்சர்க்குச் சிறிதும் பயனில்லை யென்பது ஆசிரியரது அடிப்படையான கருத்தாகும். அழகிய மலருக்கு மணமே சிறப்பாயிருத்தல் போல, அறிவுடைய அமைச்சர்க்குப் பேசுந் திறமையே பெருஞ்சிறப்பாகும். பேசும் திறமைபெற்ற அமைச்சனை வெல்லுதல் அரிதாமென்பது

> " சொலல் வல்லன சோர்விலன், அஞ்சான் அவனை
> இகல் வெல்லல் யார்க்கும் அரிது "

என்னும் திருக்குறளால் தெளிவாக விளங்கும்.

இனி அரசனைச் சூழ்ந்திருந்த ஐம்பெருங் கூட்டங்கள் எவையென்று ஆராயுங்கால், அமைச்சர், காலக்கணிதர், தானைத்தலைவர், தூதுவர், சாரணர் இவர்களே ஐம்பெருஞ் சபையினர் என்று திவாகரம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

ஐம்பெருஞ் சபைகள்.

ஏற்ற பொருள்களை ஏற்றபொழுது அரசற்கு எடுத்துரைக்கும் தன்மை வாய்ந்தவராய், இயற்கையாகிய நுண்ணறிவோடு, நூலறிவும் அமையப்பெற்றவராய், பேசுந் திறமை பெற்றவராய்த் திகழ்பவரே அமைச்சராதற் குரியர். அரசன் சொல்லும் பொருளையெல்லாம் ஆமோதித்தல் அமைச்சர்க்கு அழகன்று. அரசனுக்கும், நாட்டிற்கும், உறுதி பயப்பனவற்றைத் தேர்ந்து சொல்லுதலும், அரசனது செவ்விபார்த்துக் குறிப்பறிந்து, தன்கருத்துக்களைச் செம்மையாகச் சொல்லுதலும், அவ்வாறு தான் துணிந்து கூறிய தெளிபொருளை அரசன் ஒப்புக்கொள்ளானாயின், தனது நுண்ணிய அறிவாலும் சொல் வன்மையாலும், உண்மையை உறுதியாக எடுத்துரைப்பதும், அமைச்சனது தன்மையாம். அரசன் நன்மையை நாடிச் செய்யும்பொழுது அவனை மேன்மேலும் அவ்வழியிற் செல்லுமாறு ஊக்கப்படுத்தியும், தீயவழியிற் செல்லும்பொழுது அவ்வாறு செல்லவொட்டாது தடுத்தும் அறங்காப்பவனே அமைச்சனாவான். வேந்தரைச் சார்ந்தொழுகும் அமைச்சர் அவரை மிக நெருங்காமலும், விலகி அகலாமலும்

அமைச்சர் (1)

நெருப்பினிடத்தே குளிர காய்வார்போல நின்றொழுக வேண்டுமென்று நாயனார் கூறுகின்றார்.

அக்காலத்திய அரசர் போர் தொடங்குமுன், நன்னாளும் நற்பொழுதும் பார்த்து, அதன் பின்னரே தாம் மேற்கொண்ட வேலையில் இறங்குவர் என்பது நம் பண்டைநூல்களில் ஆங்காங்கு காணப்படுகின்றது. இவ்வாறு நல்வேளையும் பொழுதும் பார்த்துச் சொல்வதற்கு காலக்கணிதர் இன்றியமையாதிருந்தமையால், அவரும் ஐம்பெருங் குழுவில் ஒன்றாயினர் போலும்! அக்காலத்தில் அரசர் போருக்குப் புறப்படும் பொழுது நன்னாள் பார்த்து, தம் வாளும் குடையும் முரசும் பிறிதோரிடத்தில் பெயர்த்து வைத்துப் பின் படைதிரட்டிப் போருக்கு எழுந்தனர் என்று தெரிகின்றது. வடநாட்டிற்கும் படையெடுத்துச் சென்ற திருமாவளவன் என்னும் கரிகாற்சோழன்,

காலக்கணிதர் (2)

> " வாளும் குடையும், மயிர்க்கண் முரசும்,
> நாளொடு பெயர்த்து "

நாட்செய்துகொண்டு போர்க்கு எழுந்தானென்றும், செழும்போர் வல்ல சேரன் செங்குட்டுவன், சில குறுநிலமன்னர் குறும்பை அடக்குமாறு, செல்வகுண்டு போர்க்கெழுந்த காலத்து, அங்கிருந்த காலக்கணிதன் எழுந்து, அரசனது கோபத்தை ஆற்றி, நல்ல முழுத்தம் இதுவென்று சொல்ல, வேந்தனும் உடனே போர்க்கு நாட்செய்தான் என்றும்

சிலப்பதிகாரத்துள் கூறப்பட்டிருக்கிறது. அரசன் ஆடல் ஏறு போன்று எழுந்தகாலத்து

" ஆறிரு மதியினும் காருக வடிப்பயின்று,
ஐந்து கேள்வியும் அமைந்தோன் எழுந்து,
வெந்திறல் வேந்தே! வாழ்க நின்கொற்றம்,
இருநில மருங்கின் மன்னரெல்லாம் நின்
திருமலர்த் தாமரைச் சேவடி பணியும்
முழுத்தம் ஈங்கிது, முன்னிய திசைமேல்,
எழுச்சிப் பாலை ஏகென் றேத்த
மீளா வென்றி வேந்தன் கேட்டு
வாளும் குடையும் வடதிசைப்
பெயர்க்கெனப் பணித்தான் "

என்றும் சிலப்பதிகாரம் கூறுவதால், நல்ல முழுத்தத்தில் காலக்கணிதரைக் கலந்தே அரசன் போர் செய்தான் என்று தெரிகின்றோம். இவ்வழக்கம் புறப்பொருள் வெண்பாமாலை முதலிய தமிழ் நூல்களிலும் பாராட்டப் பெற்றுள்ளது.

இக்காலத்தில் போா நிகழ்த்தும் அரசர் தானைத் தலைவரை யெல்லாம் ஒருங்கே யழைத்து ஆலோசித்தல் போல, அக்காலத்திலும் போர்த் தொழிலைக் குறித்து ஆராய்வதற்கு சேனாபதியராலமைந்த ஒரு சபை இருந்த தென்று அறியப்படுகின்றது.

சேனாபதியர் (3)

இவ்வாறே, தூதுவரும் அரசனுக்கு ஓர் அங்கமாக விளங்கினர், என்பது நாயனார் குறளால் நன்கு தெரிகின்றோம். தூதின் இயல்பு கூறவந்த நாயனார்,

அறிவும், உருவும், ஆராய்ச்சியும், ஆன்ற குடிப்பிறப்பும் உடையார் தூதாம் தொழிற்குரியர் என்றும், மாற்றரசரிடம் தாம் மேற்கொண்டப் பொருளைப் பற்றிப் பேசுங்கால், காலமும் இடமும் தேர்ந்து, தொகுத்தும் வகுத்தும் இன் சொல்லால் எடுத்துச் சொல்லி, தம் அரசற்கு நன்மை பயப்பவரே தலையாய தூதுவராமென்றும் கூறுகின்றார். தூதுவர் பகையரசரிடத்திற் பேசும்பொழுது, உறுதியோடு தம் கருத்தையுரைக்கவேண்டுமேயன்றி, சொல்லிற் சோர்வும், கலங்கிய உள்ளமும், தூது செல்வார்க்கு ஆகாவாம். தூது செல்பவர் அறிவிலும், சூழ்ச்சியிலும் வல்லவராயிருந்தால் பெரிதும் அரசனுக்கு நன்மை விளையுமென்பதற்குப் பாண்டவர்க்காகத் தூது சென்ற கண்ணபிரான் கதையே போதிய சான்றாகும்.

தூதுவர் (4)

தூதுவர் போலவே அரசாங்கத்திற்கு ஒற்றரும் மிக அவசியமாகும். மற்றைய நாடுகளில் நிகழுகின்ற நிகழ்ச்சிகளையும், இயக்கங்களையும் அறிவதற்கு ஒற்றர் மிக அவசிய மென்பது திருவள்ளுவர் கொள்கையாகும். அறிவுடைய அரசன், ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை ஒற்றரால் நன்கு அறிந்து கொள்வான். பிறர் தமமைக்கண்டு ஐயுறா வண்ணம் அயல் நாடு சென்று, அங்கு நிகழும் செயல்களின் தன்மையை உள்ளவாறுணர்ந்து, தம் அரசற்கு உணர்த்துபவரே ஒற்றராம் தொழிலுக்கு உரிய

ஒற்றர் (5)

ராவார். தமிழ் நாட்டில் ஒற்றர் பெரும்பாலும் துறவிக்குரிய காவியுடை தரித்து, துறவொழுக்க முடையார் போல நடித்து அயல் நாட்டு நிகழ்ச்சிகளை நன்முய் அறிந்தன ரென்பது சரித்திர உண்மை யாகும். துறவிக்குரிய உடை தரித்தவர் பல நாடு களுக்குச் சென்முல், பற்றெல் லாம் அற்ற பெரியார், உண்மை காணும் பொருட்டு உலகில் சுற்றித் திரிகின்முர் என்று எல்லாரும் எண்ணுவார்களே யல்லாமல்; எவரும் அயல் நாட்டானென்று ஐயுற மாட்டார்கள். இவ்வாறு சென்று மற்றைய நாடு களிலுள்ள குடிகளின் மனப்பாங்கையும், உட்பகை புறப்பகை முதலிய பகைகளையும் தெளிவாக உணர்ந்து தம் அரசனுக்குச் சொல்வார்கள். அயல் நாட்டின் உட்கிடை யுணர்ந்த அரசன், பகைவரை எளிதில் போர்க்களத்தில் வென்று, வெற்றிமாலை சூடுவான். இத்தகைய நன்மைகளை யெல்லாம் நன்குணர்ந்தே ஒற்றரை மன்னவன் கண் என்றும், ஒற்றரை ஆளா அரசற்குக் கொற்றம் இல்லை என்றும் நாயஞர் வியந்துரைக்கின்முர். இனி ஒற்றரின் தொழிலை உணர்த்தப் போந்த நாயஞர்

ஒற்றரால் விளையும் நன்மை.

"வினைசெய்வார், தம் சுற்றம் வேண்டாதார், என்முங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று"

என்று கூறுகின்றமையால், தன் நாட்டில் பலவகைத் தொழிலில் அமர்ந்திருப்போரையும், சுற்றி யிருக்கும் சுற்றத்தாரையும், எதிலராகிய பகைவரையும் ஆராயும்

தன்மை ஒற்றரிடத்தே அமைந்து விளங்கும். ஆகவே அரசன் தன் நாட்டிலுள்ள காவாடும் வன்னெஞ்சக் கள்வரையும், உட்பகையையும் நன்றாய் ஒற்றரால் உணரவேண்டு மென்பது விளங்குகின்றது.

"பல்குழுவும், பாழ் செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல் குறும்பும் இல்லது நாடு"

என்று நாயனர் அருளுகின்றமையால், அரசாங்க விரோதமாக அமைந்துள்ள பல கூட்டங்களையும் (Cliques) உடனுறைந்தே கொல்லும் உட்பகையையும், போர்க்காலத்தில் மாறுபடும் குறும்பர் கூட்டங்களையும், அரசன் ஒற்றரால் நுணுக்கமாய் அறிந்து அவற்றை அழிக்கவேண்டும். ஒரு ஒற்றர் அறிந்து சொல்லும் பொருளை மற்றொரு ஒற்றரது கருத்தைக் கொண்டு ஆராய்ந்து, ஒருவர்க்கு மேற்பட்ட ஒற்றர் உரைக்கும் பொருளில் ஒற்றுமை காணப்பட்டால்,

ஒற்றரை ஆளும் தன்மை.

அது உண்மை யெனத்துணிந்து, வேண்டுவன செய்ய முற்படவேண்டும்.

"ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினுல் ஒற்றிக் கொளல்"

என்ற திருக்குறளில் கண்ட பொருளையே சிந்தாமணியாசிரியரும்

"ஒற்றர் தங்களை ஒற்றினுய்தலும்
கற்றமாந் தரைக் கண்ணெனக் கோடலும்
சுற்றம் சூழ்ந்து பெருக்கலும், சூதரோ
கொற்றங் கொள் குறிக் கொற்றவர்க் கென்பவே"

என்று அமைத்தனர். இவ்வாறு மறைவிடத்தில் நிகழும் செயல்களையெல்லாம் அறியும் ஒற்றரைத் தன்னொட்டினரும் ஒற்றர் என்று உணராதவாறு அவர்க்கு அளிக்கும் சிறப்புகளையும் பொருளையும் மறைவாகவே அரசன் கொடுக்கவேண்டும். இத்தகைய ஒற்றர், அரசாங்கத்தில் ஐம்பெரும் சபையில் ஒன்றாய் அமைந்திருந்தனரென்பது அறியற் பாலதாகும்.

எண் பேராயம்.

இனி 'எண்பேராயம்' என்று சிலப்பதிகாரம் கூறுகின்ற பெருஞ் சபைகளின் வகை,

" கரணத்தியலவர், கரும விதிகள்,
கனகச் சுற்றம், கடைக்காப்பாளர்,
நகர மாந்தர், நளிபடைத் தலைவர்,
யானை வீரர், இவுளி மறவர்
இனையர் எண் பேராயமென்ப "

என்னும் திவாகரக் குறிப்பால் தெரிகின்றது. இவற்றுள் நகரமாந்தர் என்பது நாட்டில் வாழும் மக்கள் தொகுதியினரைக் குறிக்கும் என்று கொள்ளப்படுமானால், அக்காலத்திலேயே குடிகளின் கருத்தை அரசாங்கத்திற்கு அறிவிப்பதற்கு ஓர் பேராயம் (Popular Assembly) இருந்ததென்றும், அரசன் குடிகளையும் தன் அரசியலில் இணைத்து அவர் தம் உரிமையை உணர்த்தினான் என்றும், இம்மாந்தர் ஆயமே குடியரசின் முளையாக அக்காலத்தில் விளங்கியதென்றும் கொள்ள இடமிருக்கின்றது. ஆகவே இக்காலத்தில் அரசியல்

மாந்தர் ஆயம்.

முறையில் வழங்கி வருகின்ற அங்கங்களிற் பல, அக்காலத்தே முளை கிளம்பி யிருந்தன வென்பதும், சில முற்றி யிருந்தன வென்பதும் அறியப்படுகின்றது.

இனி அரசனது ஆட்சிக்குட்பட்டிருந்த நாடு எத்தன்மைத்தென்றும், அந்நாட்டில் வாழ்ந்த நன் மக்கள் எத்தன்மையரென்றும், ஆராய்வது அவசியமாகும். நீர்வளம், நிலவளம், மலைவளம், குடிவளம் ஆகிய நால்வகை வளங்களும் உடையதாய்ப் பசியும், பிணியும், பகையும் இன்றி, வசியும் வளமும் சுரந்து விளங்கும் இடமே நாடென்று பெயர் பெறும். தன்னிடம் பொருந்திவாழும் குடிகளுக்கு வருத்தமின்றிப் பொருள் அளிக்கும் வளமுடையதாய், பிறநாடுகள் பொறுத்த பாரமெல்லாம், ஒருங்கே தன்னிடம் வந்த காலத்தும், அவற்றைத் தாங்கும் தகுதியுடையதாய் அமைந்திருப்பதே நாடாகும். வேளாண்மையால், வளம் பெருக்கும் தாளாளரும், நற்றவஞ்செய்யும் நல்லோரும, வாணிபத்தாற் பொருள் பெருக்கும் வணிகரும் பொருந்தி வாழுமிடமே நாடென்று சிறப்பித்தற்குரியதாகும்.

நாட்டின் நால்வளமும் நல் இயல்பும்.

"தள்ளா விளையுளும் தக்காரும், தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு"

என்று திருக்குறள் கூறுகின்றது. இவ்வுண்மையைச் சிந்தாமணி யாசிரியரும்,

"நற்றவஞ் செய்வார்க்கிடம், தவஞ் செய்வார்க்குமஃதிடம்
நற்பொருள்செய்வார்க்கிடம், பொருள் செய்வார்க்குமஃதிடம்"

என்று எடுத்துரைத்தார். வறியார்க்கு வழங்கக் குறையாவளத்தை யுடையதாய், பகைவரால் அழிக்கப் பெற்றாலும் தன் வளம் குன்றாததாய், ஆற்றுப் பெருக்கும், ஊற்றுப்பெருக்கும் உடையதாய், மலை வளமும், நிலவளமும் பொருந்தியதாய் விளங்கும் நாடே நன்றாகும். இத்தகைய நாட்டில் அரசற்குப் பகை செய்யும் பல்குழுவும, நாட்டைப் பாழ் செய்யும் உட்பகையும், கொற்றவனையலைக்கும் கொல் குறும்பும் காணப்பட்டால், பசும்பயிரைச செழித்து வளர வொட்டாது தடுக்கும் நச்சுக்களையைப் பறித்தெறிவதுபோல, அரசன் அவற்றை வேரொடு களைய வேண்டும். பகைவர் பயமின்றிக் குடிகள் நன்கு வாழு மாறு நால்வகை அரண்களையுடையதே நாடாகும். நீர் அரண், நிலவரண், மலை அரண், காட்டரண் என அரண் நால்வகைப்படும், என்பது

"மணி நீரும், மண்ணும் மலையும், மணிநிழல்
காடு முடைய தரண்"

என்னும் குறளால் நன்கு விளங்கும்.

நாட்டில் வாழும் குடிகள் உயர் குடிப்பிறந்தார்க் குரிய ஒழுக்கங்களை யுடையாராயிருத்தல் வேண்டும். நற்குடிப்பிறந்தார் ஒழுக்கமும், வாய்மையும் நாணும் உடையராய் ஈகையும் இன் சொல்லும் அமைய்ப்

பெற்றவராயிருப்பர். இத்தகைய நல்ல குடிப்பிறந்தார்

குடிகளின் தன்மை.

நல்கூர்ந்தாரானாலும் வறியார்க்கு எஞ்ஞான்றும் இல்லையென மாட்டார்.

"இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே உள"

என்று நாயனார் அருளினார். நிலத்தின் இயல்பை அதன் கண் முளைத்த முளை காட்டுதல்போல, குலத்தின் இயல்பை, அக்குலத்திற் பிறந்த மக்கள் சொல்

பண்புடைமை.

காட்டிவிடும். தீயசொற்களை வழுக்கியும் வாயாற் சொல்லுதல் ஒழுக்கமுடையார் மாட்டு இல்லையாம். ஒழுக்கம் விழுப்பம் தருதலால், அதனை உயிரினும் மேலாக மேன் மக்கள் போற்றுவார்கள். மானமே உயிரினும் மாண்புடையதெனப்போற்றுவது நன்மக்கள் குணமாகும்.

"மயிர் நீப்பின் வாழா கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்"

என்ற நாயனார் வாக்கே இதற்குப் போதிய சான்றாகும்.

மானமுடைமை.

குடிகள் செறுக்கும் சிறுமையும் இல்லாது, பெருமை யுடையவர்களாய் வாழ்ந்திருப்பர். பெருமை பெருமிதமின்மையென்றும், "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் பெருமையின் இயலுக்கிணங்க, பணிதலாகிய அணியைக்கொண்டு அவர் விளங்குவர். நன் மக்கள், பிறரது சீரெல்லாம் எடுத்துரைத்து, சிறுமை

புறங்காத்து எல்லாருக்கும் நல்லாராய் வாழ்வார்கள். பெறுதற்கரிய பகுத்தறிவு பெற்ற மக்களுக்குரிய ஒழுக்கத்தைநாயனார் சான்றாண்மை யென்னும் பெயரால் நன்கு எடுத்துரைக்கின்றார்.

சான்றாண்மை.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
சால்பு ஊன்றிய தூண்" [ஐந்தும்

என்றமையால், இவ்வைந்து குணங்களும் அமையப் பெற்றவரே மக்கட் பண்புள்ளவர் என்று நாயனார் கருதுகின்றார்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல் சான்றாண்மைக்கு அழகாகும். இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாணும் வண்ணம் நன்னயம் செய்துவிடலே யாம் என்று நாயனார் அருளுகின்றமையால், துன்பம் ஒருவன் நமக்குச்செய்த விடத்து அதனைப் பொறுத்த லோடமையாது, அவனுக்கு நன்மையே செய்ய வேண்டு மென்பது இனிது பெறப் படுகின்றது. தம்மிடம் எப்பொழுதும் பகைமையே செய்தொழுகுவார் மாட்டும் தாம் பண்புடையாராய் ஒழுகுதலே அறிவுடையார்க் கழகாகும். அறிவுடையார் பெரும் பாலும் உலகில் பொருளுடையாராய் இராரென்றும், பொருளுடையார் பெரும் பாலும் அறிவுடையராய் இராரென்றும் உலகில் விளங்கும் உண்மையை நாயனார் நன்றாய்க் கூறிப் போந்தார்.

இனியவை செய்தல்.

> "இருவேறு உலகத்தியற்கை ; திருவேறு
> தெள்ளிய ராதலும் வேறு"

என்று நாயனார் அருளுகின்றார். அளவிறந்த பொருள் பெற்றிருந்தும், அதனைத் தாமும் துய்த்துப் பிறர்க்கும் வழங்கிப் பயன் படுத்த அறியாத பேதையர் இவ்வுலகில் இருப்பதும் இறப்பதும் ஒன்றேயாம்.

ஈகையின்பம்.

பொருளல்லவற்றைப் பொருளென்றுணர்ந்து, அவற்றை முயன்று தேடியும் பயன் படுத்தாது பற்றுள்ளம் செய்யும் மயக்கமே, பிறப்பிற்கு வித்தாகும். வறியார்க்கு ஒன்றும் வழங்காத வன்கண்ணனிடம் உள்ள செல்வம் ஊர் நடுவே நச்சு மரம் பழுத்தாற் போலவும், நயனுடைய நல்லானிடம் உள்ள செல்வம், பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தாற் போலவும் விளங்கும்.

மக்கள் தாம் வாழும் குடியை மேன் மேலாகப் பெருக்கி வளர்க்க வேண்டும். அறிவினாலும், முயற்சியாலும் ஒருவனது மரபின் பெருமை உயரும். அறியாமையாலும், மடியினாலும் அப்பெருமை தளரும்.

முயற்சி யுடைமை.

மக்கள் மேற் கொள்ளத்தக்க முயற்சிகள் பலவா யிருப்பினும் அவற்றுள் பல வகையாலும் தலையாய் நிற்கும் தகுதி வாய்ந்தது பயிர்த்தொழிலேயா மென்று நாயனார் சிறப்பித்துக் கூறுகின்றார்.

> " உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
> தொழுதுண்டு பின் செல்பவர் "

என்றமையால், வேளாண்மையே மற்றெல்லாத்

தொழிலினும் சிறந்த தென்பது விளங்கும். வேளாண்மையை மேற்கொண்ட தாளாளர் பிறரிடம் குறை கூறி ஒரு பொருளை இரவார். தம்மிடம் வந்து இரப்பவர்க்கு அவர் வேண்டிய பொருளைக் கரவாது கொடுப்பார். உலகிலுள்ள பசி நோய் நீக்கி, ஆருயிர் மருந்தாய உணவை ஆக்கி, நாட்டையும், அரசாங்கத்தையும் காப்பது வேளாண்மையே யாகும் என்று சொல்வது மிகையாகாது.

வேளாண்மை.

"வாழி நான் மறையோர்கள் வளர்க்கின்ற வேள்விகளும்
ஆழியால் உலகளிக்கும் அடல் வேந்தர் பெருந்திருவும்
ஊழிபெயரினும் பெயரா உரையுடைய பெருக்காளர்
மேழியால் விளைவதலால் வேறொன்றால் விளையாவே"

என்று கல்வியிற் பெரிய கம்பர் வேளாண்மையின் பெருமையை விரித்துரைத்தார். வேளாண்மையே வறுமையை நாட்டினின்றும் அகற்றும் நற்பணியாமென்பது

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

என்றும் நாயனார் நயம் பொருந்திய வாக்கால் நன்குணரப்படும். இத்தகைய முயற்சி திருவினையாக்கும். முயற்சி யின்மை இன்மை புகுத்து விடும். வறுமை போல் துன்பம் உலகில் வேறில்லை. இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாய் வேண்டாள்; அவன் வாய்ச் சொல்லும் செல்லாத தாகும்.

"நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வுபடும்"

என்றமையால், மெய் நூற் பொருளை ஐயந்திரிபற அறிந்து சொன்னாரேனும், வறியார் சொல் சோர்வு படும் என்பது விளங்கும். இவ்

வறுமை.

வறுமை காரணமாகப் பிறரிடம் சென்று இரந்து உயிர் வாழ்தல், வறுமையினும் துன்பம் தருவதாகும். கரவாத திண் அன்பில் கண்ணன்னார் கண்ணும் இரவாது வாழ்வதே வாழ்க்கை யெனப் படும். தம் வறுமை காரணமாக மானம் துறந்து, குறை யிரந்து வறியார் நிற்குங்கால், 'சொலப் பயன்படுவர் மேலோர்' என்றவாறு, மேலோர் வறுமை யுள்ள சொற்கேட்ட அளவிலே, பொருள் கொடுத்து வறுமைநோய் களைவர். கீழ் மக்கள் தம்மை வறியார் இறைஞ்சி ஏத்திப் பாரியே யென்று பன் முறை கூறினும் யாதும்கொடார். ஆகவே, மேற் கூறிய நல்லொழுக்கம் ' அமையப் பெற்றவராய், வறுமை, அறியாமை முதலிய இழுக்குகளின் நீங்கிய வராய் வாழும் மக்களே நற்குடிகள் என்று எடுத்துக் கூறும் இயல்புடையராவார்.

இன்ப இயல்

அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள் மூன்றனுள், இன்பத்தை நாயனார் காமத்துப் பால் என்னும் பகுதியில் இனிது எடுத்துக் கூறுகின்றார். தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் தமது

அரிய பெரிய நூலில் சிற்றின்பத்தின் இயல்பை எடுத் துரைக்கின்ற காமத்துப்பாலை அமைத்தது, அந் நூலின் பெருமைக்கும், அப்பெரியாரது உயரிய மன நிலைமைக்கும் பொருந்தாதென்று, அப்பாலின் உண் மைத் தன்மையுணராத ஒரு சிலர் கருதுகின்றார்கள். ஆதலின் இன்பப்பாலின் வகையினையும் அழகினையும் ஆராயப் புகுமுன்னர், ஆசிரியர் சிற்றின்பத்தின் இயல் பைத் திருக்குறளில் அமைத்து எழுதிய கருத்தைச் சிறிது ஆராய்வது மிகையாகாது.

இன்ப இயலின் உண்மை நோக்கம்.

காமம் என்ற சொல்லைக் கேட்ட அளவாலே அது தீது என்று கொள்ளுதல் தவறாகு மென்று நற்றமிழ்ப் புலவர் நக்கீரர் அருளுகின்றார். சிற்றின்பத்தின் உண்மைத் தன்மையினை ஆசிரியர் நன்கு அறிந்தவரே யாதலால், பேரின்பத்தின் பெருமையையும், செம்மையையும், மக்கள் செவ்வையாய் அறிந்து, அப்பேரின்பப் பெரு வாழ்வை அடைய ஆர்வம் கொள்ளுதற் பொருட்டே சிற்றின்பத்தின் திறத்தை விளக்கமாக எடுத்துரைத் தார். மேலும் இன்பம் என்பதே இன்னதென்று அறியாத ஒருவனுக்குப் பேரின்பத்தின் பெருமையை எடுத்துரைத்து, அவனை அப்பேரின்ப நெறியில் ஈடு படச் செய்வது இயலாததாகும்.

உலகப் பொருள்களின் அழகையும் நயத்தையும் ஒரு சிறிதும் காணப்பெறாத ஒருவனுக்கு உலகத்தின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறுதல் இயலாத வாறுபோலவும், சுவையென்பதே இன்னதென அறி

சிற்றின்பம் கூறிப் பின் பேரின்பம் கூறல் எளிது.

யாத ஒருவனுக்கு அமுதத்தின் அருமையை விளங்க உரைத்தல் இயலாதவாறு போலவும், இன்பம் என்பதே இன்னதென்று அறியாத ஒருவனுக்குப் பேரின்பத்தின் பெருமையை விளங்கக் கூறுதல் பெரும்பாலும் இயலாததேயாகும். உலகில் மக்களாய்ப் பிறந்தவர்களுள், மேலைத் தவத்தால் மெய்த்துற வடைந்த பெரியாரைத் தவிர்த்துப் பெரும் பாலும் மாந்தர் சிற்றின்பத்திலேயே ஈடுபட்டிருக்கக் காண்கின்றோம். இவ்வாறு சிற்றின்பத்தில் அழுந்திக் கிடக்கும் மக்களை, அந்நிலையினின்றும் உயர்த்தி அவர் கருத்தை விழுமிய பேரின்ப நெறியில் பதித்தலே இன்பப் பாலின் உண்மையான நோக்கமாகும். சிற் றின்பமே பெரிதென நினைந்து, சிற்றின்பம் துய்த் தலே மக்களாய்ப் பிறந்தார் பெறும்பேறு என்று எண்ணியிருக்கும் ஒருவனை, எளிதில் அந்நெறியை விட்டு நன்னெறிக்குக் கொண்டுவருதல் இயலாத தாகும். ஆனால் அவன் அவ்வின்பத்தை ஆரத் துய்த்து நுகரும் பொழுது அது தான் எண்ணிய அளவாக இல்லாது, குறைவா யிருத்தலைக்கண்டு சிற்றின்பத்தின் உண்மைத் தன்மையை உணர்ந்து கொள்வான். எப்பொழுதும், மறைபொருள் மீது மக்கள்மனம் மிகுந்துசென்று, அதனையறிய ஆர்வ முறுதல் இயற்கையாகும். ஒருவனது கண்ணையும், கருத்தையும் ஒருங்கே கவரும் எழில் நலம் வாய்ந்த ஒருபொருளை அனுபவித்தல் தகாதென்று சொல்லவே,

அதன்கண் இயற்கையாகவே உள்ள பற்று, நெருப்பில் நெய்வார்த்தாற்போல, பன்மடங்கு அதிகமாக வளர்ந்தோங்குவதாகும். ஆதலால் மக்களது ஐம்புல இன்ப நுகர்ச்சியைத் தடுத்து, அதனால் ஆசையை மிகுதிப் படுத்துவதைத் தவிர்த்து, சிற்றின்பத்தில் இடையூறின்றி மனதைச் செல்ல விடுவதனால் அதன் சிறுமையும், குறையும் மக்களுக்குத் தெளிவாகத் தெரிந்து, அதனினும் மேலாய பொருளில் ஆர்வம் கொள்வார்கள்.

சிற்றின்பத்தின் நிறைவை இன்ப இயல்கூறும்.

ஆதலால் சிற்றின்பம் பற்றுடையான் ஒருவனுக்கு அவன் மனம் இயற்கையாகவே நாடி நிற்கும் இன்பத்தில் நிறைவான, பழுதற்ற நீர்மையை எடுத்துரைக்க, அவன் உள்ளம் பள்ளத்துள் பாயும் வெள்ளம் போல, அவ்வழியாக விரைந்து சேரும். உலகில் சிற்றின்ப அனுபவத்தில் காணப்படுகின்ற குற்றம் குறைகளை நீக்கி, நிறைவான இன்பத்தை இனிதாக எடுத்துரைக்குமிடத்து அவ்வின்பத்தைப் பெறும் வழியைநோக்கி மக்கள் முயல்வது இயற்கையேயாகும். எக்காலத்தும் மூப்பு, பிணி, வறுமை முதலிய குறைகளின் நீங்கி தலைமகன் பதினாறுண்டும் தலைமகள் பன்னீராண்டும் அமையப் பெற்றவர்களாய், ஒத்த குணமும், ஒத்த நலமும், ஒத்த அன்பும், ஒத்த அறிவும், ஒத்த செல்வமும் உடையராய், இருவரும் இன்பம் துய்ப்பர் என்று இன்ப இயல் எடுத்துரைக்கும். இவ்வாறு சொல்லவே, இத்தகைய சிறந்த இன்பத்தைப் பெறும் வழி யாது

என மக்கள் மிக்க ஆர்வத்தோடு ஆராயத்தொடங்குவர்.

சிற்றின்பம் பெறும் வழிகளைத் தேடி முயற்சித்தல்.

அப்பொழுது, இப் பெற்றித்தாய இன்பம் வனப்பாலும், வலிமையாலும் பெற இயலாது, வேண்டியார்க்கு வேண்டிய வற்றைக் கொடுக்கும் தவம் செய்தாற் பெறலாம் என்று உண்மை நூல் கூறும் உறுதிமொழியைக் கேட்டுத் தானும் தவம் செய்யத் தொடங்குவான். இவ்வாறு சிற்றின்பம் பெறக் கருதிச் சீரிய தவம் செய்வானிடம், அத்தவம் சிற்றின்பத்திற்கும் மேலாகிய சிறப்பு வாய்ந்த பேரின்பம் பயக்கும் பெருமை வாய்ந்தது என்று கூறிப் பின் பேரின்பத்தின் இயல்பைப் பெருகக்கூறும். அப்பேரின்பம், பிறப்பு, பிணி, இறப்பு முதலிய குறைகள் அற்றதாய், அவலக் கவலையின் நீங்கியதாய், மணியினது ஒளியும், மலரின் மணமும், தண்ணீரின் தண்மையும்போல, உள்நின்று எழுகின்ற ஒரு பேரின்ப வெள்ளமாமென்று சொல்லக்கேட்டு, அப்பெற்றித்தாய பேரின்பத்தில் பதிந்த மனமுடையராய், மக்கள் தவமும் ஞானமும் புரிந்து வீடு பெறுவர்.

பேரின்பத்திற் கொண்டு சேர்த்தல்.

இவ்வாறு கடுத்தின்றுதானைக் கட்டிப் பூசிக் கடுத் தீற்றியவாறு போலவும், நீர் வேட்கையால் அண்மையிலுள்ள கலங்கல் நீரை உண்ணக் கருதிய ஒருவனுக்குக் கானலைக்காட்டி நல்ல நீருள்ள பொய்கையிற் கொண்டு சேர்த்தாற் போலவும், சிற்றின்பத்தில் ஆழ்ந்து கிடக்கும் ஒருவனை வஞ்

சித்துப் பேரின்ப நெறியில் சேர்த்தலால் இன்ப இயல் களவியல் என்னும் பெயர் பெறும். ஆதலின், இன்ப இயல் இறுதியில் வீடு பேறு பயக்கு மென்பதும், அப்பெரும் பயன் கருதியே, ஆசிரியர் வள்ளுவரும் தமது நூலில் இன்பப்பாலை அமைத்தருளினர் என்பதும் நன்கு அறியப்படும். இவ்வுண்மையை உணர்ந்தே இறைவன்பால் ஈடுபட்டு பத்திமையால் பணிந்து பாமாலை பாடிய பெரியாரும் கடவுளையும், உயிரையும், காதலி காதலன் எனனும் முறையில் அகத்திணை அழகுகளை யெல்லாம் அமைத்துப் பேரின்பப் பெருமையை எடுத்துரைப்பா ராயினர். இத் தன்மை, மணிவாசகப் பெருமானது திருவாசகத்திலும், நம்மாழ்வாரது திருவாய் மொழியிலும் மற்றைய சமய நூல்களிலும அமைந்து விளங்குகின்றது.

அருள் நூல்களில் அகத்துறையை அமைத்தல்.

இனி, இன்பத்தின் தன்மையைக் கூறப்போந்த நாயனார், அதனைக் களவியல், கற்பியல் என இரண்டாக வகுத்து எழுதுகின்றார். இவ்வாறு பாகுபாடு செய்வது தமிழ் நூல் வழக்கென்பது பழைய நூல்களால் அறியப்படுகின்றது. இவற்றுள் களவொழுக்கமாவது, பிணி மூப்பு இவையின்றி, எப்பொழுதும் ஒருதன்மையராய், உருவும், திருவும், குலமும, குணமும், பருவமும், அன்பும் ஒத்தவராய தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இன்றி,

களவொழுக்கத்தின் தன்மை.

ஊழ்வினைப் பயனாய்த் தாமே எதிர்ப்பட்டுக் காதலித்துக் கலக்கும் முறையாகும். கற்பியலாவது, இங்ஙனம் கலந்த தலைமகனும் தலைமகளும் முறைப்படி மணம்புரிந்து இல்லறமாகிய நல்லறத்தை இனிது நடத்தி இன்பம் துய்த்தலும், பின் இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமைகண்டு வீடுபெற முயல்வதுமாம். இவ்விருமுறைகளும் தமிழ் நாட்டில் மிகப் பழைய காலம் முதலே வழங்கி வந்த மணமுறைகளா மென்றும், இவ்வொழுக்க நெறியே பின்னர் நூலறி புலவரால் இலக்கிய இலக்கணங்களில் வகுத்துரைக்கப் பட்டதென்றும், தொல்காப்பியம் முதலிய நூல்களிற் காணப்படுகின்றது. ஆகவே, ஆசிரியர் கூறும் களவியல், கற்பியல் இரண்டும் தமிழ் வழக்கத்தில் பழைய காலத்தே பயின்றிருந்த கருத்தேயன்றி கவிநயமும் கற்பனையும் அன்று என்பது தெளிவாக உணரப்படும்.

இனிக் களவியல் என்று நாயனார் வகுத்திருக்கின்ற முதல் பகுதியைச் சிறிது ஆராய்வோம். அன்பினாலும், குணத்தினாலும், கல்வியினாலும், உருவினாலும், திருவினாலும் ஒத்தவராய்த் தம்மை ஒப்பாரும் மிக்காருமின்றி உயர்வுற்ற தலைமகனும் தலைமகளும், தமியராய் ஒரு பொழில் இடத்து ஒருவரை யொருவர் ஊழ்வினைப் பயனால் எதிர்ப்படுவர். அப்பொழி லிடத்தே தலைமகளுடன் கூட விளையாட வந்த தோழியர், மலர் கொய்து மகிழ்ந்தும், மயிலாடக் கண்டு களித்தும், குயில் கூவக்கண்டு களித்

தலைமகனும் தலைமகளும் எதிர்ப்படல்.

தும், வாச மலர்க் கொடியில் ஊசலாடி விளையாடியும், தலைமகளைத் தனிமையாய் விட்டு, வெவ்வேறிடங்களிற் பிரிந்து செல்வர். இவ்வாறு தனித்து நிற்கும் தலைமகள், எழிலுற அமைந்த அப்பொழிலின்கண், விரையுறு நறுமலர் கொய்து விளையாடி, பூவார்சோலை மயிலாடப் புரிந்து, குயில்கள் இசைபாட, இன்புற்று மகிழ்ந்து இறுமாந்திருப்பாள். தலைமகள் மகிழ்ந்து விளையாடும் மணங்கமழும் பொழிலையும், அதன் எழிலுறு வனப்பையும், நற்றமிழ்ப் புலவராய நக்கீரர், செந்தேன் துளிக்கும் செந்தமிழ்ச் சொற்களால் புனைந்துரைக்கின்றார். "சந்தனமும் சண்பகமும், தேமாவும் தீப்பலவும், ஆசினியும் அசோகமும், கோங்கும் வேங்கையும், குரவமும் விரிந்து, நாகமும் திலகமும், நறவும் நந்தியும், மாதவியும் மல்லிகையும், மவ்வலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து, பொரிப் புன்கும், புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து,

பொழிலின் அழகிய காட்சி.

வண்டிரைந்து தேனார்ந்து வரிக் குயில்கள் இசை பாட, தண் தென்றல் தவழ்ந்துலவும் தண்ணரும் பொழிலின் நடுவே, விசும்பு துடைத்துப் பசும் பொன் பூத்து, வண்டு துவைப்பத் தண்தேன் துளிப்ப தோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள். கண்டு பெரியதோர் காதல் களிகூர்ந்து, தன் செம் மலர்ச் சீரடிச் சிலம்புகள் ஆர்ப்ப, நடந்து சென்று நறை விரி வேங்கை நான்மலர் கொய்தாள். அப்

பொழுது அம்மாமலைச் சாரலில், வேட்டைக்குப்பல இளைஞரொடு வந்துற்ற தலைமகனும், ஆண்டு எழுந்த தோர் கடுமானின் பின்றொடிக் காவல் இளைஞரைக் கையகன்று, கடிகமழ் நறுங்கண்ணிமேற்கொண்டு, வண்டுமிணமயா, அஞ்சாந்தின் நறுமணம், அகன்ற பொழிலிடைப் பரந்து வீச, வரிசிலையொடு கணை யேந்தி வடிவு கொண்ட காமன் போலச் சென்று, அவள் நிற்கும் அழகிய பொழிலிடம் புகுவான். இவ்வாறு ஊழ்வினைப் பயனால் ஒருவரை யொருவர் எதிர்ப்பட்டுக் கண்டபொழுது, தலைமகன் "இம்மாதர் பூவில் உறைகின்ற பூமகளோ, அன்றி இப்பொழி லிடை உறையும் தெய்வமோ அன்றி வானுறை தெய்வமோ," என்று தனக்குள்ளே ஐயுற்று, பின் ஓவியத்தில் எழுத வொணா உருவமைந்த மாது ஓர் பெண்மணியே யெனத் தெளிவான். இவ்வாறு நிகழும் ஐயத்தை நாயனார்,

தலைமகனது ஐயம்.

"அணங்கு கொல், ஆய்மயில் கொல்லோ, கனங்குழை
மாதர் கொல் மாலும் என் னெஞ்சு"

என்ற குறளால் கூறினார். இவ்வாறு தலைமகளை ஒரு பெண்மணியே என்று துணிந்த தலைமகன், தன் காதலைச் சொற் களால் சொல்லாது கண்களின் குறிப்பாலறிவிப்பான். அவ்வாறே தலைமகளும் தனது காதலைவெளிப்படக் கூறாது, தன்கண்களின் குறிப் பால் கூறுவாள். தலைவன் தன்னை நோக்கும் கால்,

பெண் என்று தெளிதல்.

தான் நிலத்தை நோக்கியும், அவன் தன்னை நோக்காத போது, தான் அவனை நோக்கி மெல்லிய புன்முறுவல் பூத்தும், தலைவி தன் காதலைக் குறிப்பாக உணர்த்துவாள். காதலர் இருவர் கண்நோக்கும் ஒக்குமாயின், வாய்ச் சொற்களால் யாதும் பயனில்லை என்பது

கண்ணால் கலத்தல்

“ கண்ணொடு கண்ணினை நோக்கு ஒக்கின், வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில ”

என்னும் திருக்குறளால் தெரியப் படும். இவ்வாறு காதலால் இருவரும் கலந்தபின், தன் கண்ணிற்கினிய, கருத்திற்கிசைந்த காதலியின், நலத்தையும் குணத்தையும் தலைமகன் புகழ்ந்து மகிழ்வான். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும், பெண்ணென்னும் பெருந்தகையாளிடம் அமைந்துள்ளன வென்றும், தனக்குக் காதல் நோயைத் தந்த காரிகையே அந் நோய்க்கு மருந்தாகவும் அமைந்தாளென்றும், அழகு பெறக் கூறி அகமகிழ்வான். மோப்பக் குழையும் மெல்லிய அனிச்ச மலரை நோக்கி அம்மலரினும் தன் மாது மெல்லியலாள் என்று சொல்லி மகிழ்வான். அப்பொழிலிடை தேனுண்டு திளைத்து நிற்கும் வண்டானது, தன் மாதின் கண்ணைக் கருங் குவளை மலரென்றும், கையினைக் காந்தள் மலர் என்றும், கொவ்வைச் செவ்வாயினை

தலைமகளது நலம்புனைந்து உரைத்தல்.

அனிச்சமலரை நோக்கி உரைத்தல்.

அழகிய ஆம்பல் மலரென்றும், மயங்கி அவள் குழல் மேலும கோதை மேலும் சுழல்கின்றது என்று கூறுவான்.

வண்டை நோக்கி உரைத்தல்.

இன்னும் வெண்ணிலா வீசுகின்ற தண்மதியையும், தனது மாதின் முகத்தையும் ஒப்பிட்டு நோக்கி, மறுவுற்று விளங்கும் மதியினைப்பார்க்கிலும், மறுவற்று விளங்கும் மாதின் முகமே சிறந்ததென்று கூறுவான்.

சந்திரனை நோக்கி யுரைத்தல்.

இன்னும் மதியினைப் பார்த்து, 'நீ, இம்மலரன்ன கண்ணாள் முகம் போல், மறுவற்று விளங்கவேண்டுமாயின், அவள் போல, பலர் காணத் தோன்றாது, எனக்கு மட்டும் தோன்றுவாயாயின், உன்னிடமுள்ள மறு ஒழியும். உன்பாலுள்ள மறு ஒழிந்தால் நீயும் என் காதலுக்கு உரியாய்' என்று கூறுவான். இன்னும் அனிச்ச மலரும், அன்னத்தின் மெல்லிய தூவியும், தன் மாதின் மெல்லிய பாதங்களை உறுத்தி வருத்தும் என்று வருந்துவான்.

வெணை மலரை நோக்கி யுரைத்தல்.

இன்னும், இப்பொழில்களில் செம்மாந்து, இறுமாந்து விண்ணை நோக்கி மலர்ந்திருக்கும குவளை மலர்களிடம் காணும தன்மையும், நாணுந் தன்மையும் அமைந்திருந்தால், அவை இம்மாதின் அழகிய கண்களைக் கண்டு நாணித்தலை கவிழும் என்று கூறுவான். இவ்வாறு தன் பெண்மணியின் நலம் புனைந்துரைத்த தலைமகன், பின்னும் அவளுடன் நீடித்த காலமிருப்

பின், அக்களவொழுக்கத்தைப் பிறர் காணில், பழித்தும், இழித்தும் உரைப்பார்கள் என்றும், அப்பழிச் சொல்லைக் கேட்டு நாணுடைய தலைமகள் சிறிதும் ஆற்றாள் என்றும் எண்ணி அவளது கருங்குழற் கற்றை மருங்கு திருத்தி, அளகமும் நுதலும் தகை பெற நீவி, ஆகமும் தோளும் அணி பெற வருடி, குளிர்ப்பக் கூறித் தளிர்ப்ப முயங்கித் தான் பிரிய வேண்டுமென்று கூறுவான். இவ்வாறு பெருமான் பிரியக் கருதியது உணர்ந்த பெண் மணி, கனல் முன்னிட்ட மெழுகு பாவைபோல் மனமுருகிப் பசந்து காட்டுவாள். இவ்வண்ணம் பிரிவாற்றாது வருந்தும் தலைமகளுக்குத் தலைவன் பலவாறாகத் தேறுதல் கூறித் தன்னூர் அண்மையிலேயே உள்ளதென்றும், தான் அடுத்தடுத்து அவளைக் காண்பது எளிது என்றும், எடுத்துரைத்து ஆற்றித் தேற்றிப் பிரிவான்.

தலைமகன் தலைவியைப் பிரிதல்.

இவ்வாறு பிரிந்த தலைமகன் தனது காதலியை மறுமுறையும் கண்டு மகிழ்வெய்திக் காதலிற் கலக்கக் கருதி, முந்திய நாளில் அவளைக் கண்டு களித்த அழகிய பொழிலிடம் தானே செல்வான். தலைமகளும் அப்பொழிலிடை பூக் கொய்து விளையாட வந்தவள், தன் காதலன் தன்னிடம் மொழிந்தவாறே, பொழிலிடை வருவானோ என்னும் நாணத்தாலும், அன்றிப் பிரிவாற்றாமையால் இறந்தானோ என்னும் அச்சத்தாலும், கவலைகொண்டு நிற்பாள்.

இடந்தலைப் படுதல்.

அவள் கண்ணெதிரே தண்ணொளியுடைய தலைமகன் தோன்றுவான். இருவரும், கண்டு களிகூர்ந்து மகிழ்ந்து விளையாடிப் பின்னும் முன்போலவே பிரிவார்கள்.

இவ்வாறு பிரியா விடைபெற்றுப் பிரிந்த காதலன் பிரிவாற்றாது பெரிதும் வருந்தி, ஒளி மழுங்கி, வனப்பழிந்து நிற்பதைக் கண்ட அவனது பாங்கன் என்னும் தோழன், அவ்வேறுபாட்டிற்குக் காரணம் என்னை என்று தலைமகனைக் கேட்பான். அவ்வாறு கேட்கவே தலைமகன் தன் பாங்கனிடம் ஒன்றையும் மறையாது, தான் கண்ட காட்சியின் கவின் பெருநயத்தினை எடுத்துரைத்து தன்னுள்ளம் பள்ளத்து வழியாய்ப் பாயும் வெள்ளத்தைப் போல, அப்பாவைபால் ஓடிப் பாய்ந்ததென்று பகர்வான். இதைக் கேட்ட பாங்கன், "என் உயிரனைய நண்பனே, ஒரு நங்கையை நினைந்து வாடி நிற்றல் உன் தலைமைப் பாட்டிற்குச் சிறிதும் தகாதே" யெனப் பலவாறு எடுத்துரைத்தும், தலைமகன் சிறிதும் செவி கொடானாய், "நண்பனே, நான் காணப்பெற்ற உருவின் மிக்க திருவினளை நீ கண்டாயல்லை; காண்பாயாயின் இவ்வாறு சொல்லாய்" என்று மறுத்துரைப்பான். தலைமகனது காதல் வரம்பிகந்து சென்றது என்

தலைமகனிடம் தோழன் வேறுபாட்டிற்குக் காரணம் கேட்டல்.

தலைமகன் காதல் உரைத்தல்.

றுணர்ந்த பாங்கன் அவ்வாறாயின் "அத்தகைய திருவினாள் எங்கு உள்ளாள்: எத் தன்மையாள்: அவளை உனக்காக நான் கண்டு வருவேன்" என மொழிவான். இது கேட்ட தலைமகன் ஒருவாறு மனந்தேறி, தன்னை இடர் செய்த பெண்மணி யுலாவிய இடத்தையும், அவள் நலத்தையும் விரித்துக் கூறுவான்.

அவளது அழகும் இடமும் உரைத்தல்.

"திரை விரிதரு துறையே, திருமணல் விரியிடமே,
விரை விரி நறுமலரே, மிடைதரு பொழிலிடமே,
மருவிரி புரிசுழலே, மதிபுரை திருமுகமே,
இருகயல் இணைவிழியே எனை இடர் செய்தவையே"

என்று தன்னை இடர்செய்த குழலையும், பொழிலையும், முகத்தையும், மொழியையும், வியந்துரைப்பான். இதனையே நாயனார்

"முறி மேனி முத்தமுறுவல், வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோளவட்கு"

என்று கூறினார். அஃதாவது, என்னால் விரும்பப்பட்ட மாது மாந்தளிர்போன்ற நிறத்தை யுடையாள், முத்துப்போன்ற பற்களையும், முகிழ்த்த இளநகையுமுடையாள், இயல்பாகவே மணங் கமழும் எழில் மேனி யுடையாள், வேல்போன்ற கூரிய கண்களை யுடையாள், வேய்போன்ற தோள்களையுடையாள், என்று தலைமகளது வனப்பைத் தலைமகன் கூறக் கேட்ட பாங்கன், அவன் குறித்த இடம் சென்று மறைந்து நின்று காண்பான். அங்கு தலைமகனைத்

தேடித் தனித்துலாவும் மயிலன்ன பெண் மணியைக் காண்பான். கண்டு கழிபெரு மகிழ்ச்சி கொண்டு, இத்தகைய பேரழகு வாய்ந்த பெண்மணியைக் கண்டு பிரிந்துவந்து, யான் கூறிய கடுமொழிகளையும் கேட்டுப் பொறுத்த எம் பெருமானது பெருமையே பெருமை என்று தன் தலைவனை வியந்து கூறி, அவனிடம் விரைந்து சென்று, தான் கண்ட காட்சியினை எடுத்துரைப்பான். தலைமகனும் பாங்கனால் குறிக்கப்பட்ட இடஞ் சென்று, தனியளாய் நின்ற தலைமகளை எதிர்ப்பட்டுக் கலந்து மகிழ்வான். பின் தன் காதலியை ஆயத்திற் போக்கித்தான் முன் போலவே பிரிவான்.

தோழன் தலைமகளைக் கண்டு வியத்தல்.

தோழனால் தலைவன் தலைமகளை எதிர்ப்படுதல்.

இவ்வாறு தானே தலைவியைக் கண்டும், பாங்கனது துணையால் கண்டும் கலந்து களித்த தலைமகன் பின்னும் அவ்வண்ணமே இன்பம் நுகர எண்ணமல், தன் காதலியின் உயிர்த் தோழியை இரந்து, அவள் வாயிலாக எப்பொழுதும் தலைவியுடன் இன்பம் துய்க்கக் கருதுவான். இவ்வெண்ணத்தை மனதில் கொண்டு, தோழியிடம் தெளிவாகத் தன் கருத்தை வெளியிடாது, கரந்த மொழிகளால் தன் விருப்பத்தைத் தலைமகன் உணர்த்துவான். தன் காதலியும்

தோழியும் கலந்திருந்து விளையாடும் பொழிலிடத்தே காலம் பார்த்துச் சென்று, முன்னறியாதவன் போல, அவன் தின் ஊரும், பெயரும் வினவி நிற்பான். அல்லது அவர்களை நோக்கி, அத்தினைப் புனத்தின் வழியே கடுமால்வரை போன்ற ஒரு தறுகண் யானை சென்றதோ என்று வினவுவான். அல்லது, அவர் புனத்தின் வழியாகத் தன் இனத்திற் பிரிந்த ஒரு கலைமான் புகுந்ததோ என்று கேட்பான் முன்னரே, தலைமகளது மெய் வேறுபாடுகளால், அவள் காதல் கொண்டுள்ளாள் என்று குறிப்பாலுணர்ந்திருந்த தோழியின் மனம் பின்னும் சிறிது தெளிவு பெறும். இமட்டோடு அமையாமல், தலைமகன் தழையும் அணியும் கையிலேந்தி அவர் முன் னின்று, இத்தழை உமக்கு ஏற்ற உடையாகும், இவ்வணி உமக்கு ஏற்ற அணியாகும் என்று சொல்ல, அப்பொழுது காதலர் இருவர் பாலும் நிகழும் மெய் வேறுபாடுகளால், தோழி இருவருக்கும் முன்னமே காதலுண்டென்று நிச்சயிப்பாள்.

தலைமகன் ஊரும், பெயரும் வினவுதல்.

யானை சென்றதோ என்று கேட்டல்.

மான் சென்றதோ என்று கேட்டல்.

அணியும் தழையும் கொண்டு முன் னிற்றல்.

> “ஏதிலார் போலப் பொது நோக்கு நோக்குதல்
> காதலார் கண்ணே யுள”

என்றாற் போல, புறத்து அயலார் போலப் பொது

நோக்கு நோக்கியும், இருவர் மனதிலும் அன்பு நிலைத்துள்ளதென்று தோழி தன் அறிவால் உணர்வாள். இன்னும்

> " ஏனல் காவல் இவளுமல்லள்
> மான்வழி வருபவன் இவனுமல்லன்
> நரந்தங்கண்ணி இவளொடிவனிடைக்
> கலந்த உள்ளமொடு கருதியது பிறிதே,
> நம்முன் நாணுநர் போன்று
> தம்முள் மதுமறைந்துண்டோர் மகிழ்ச்சிபோல,
> உள்ளத்துள்ளே மகிழ்ப,
> சொல்லும் ஆடுப கண்ணினானே "

என்று தோழி ஐயம் நீங்கித் துணிவடைவாள். அஃதாவது உண்மையில் இங்கே இவள் தினைப்புனங்காப்பவளும் அல்லள். இவன் மானைத்தொடர்ந்து, அம் மானை நோக்கி வருபவனும அல்லன். இவர் இருவரும் இங்கு கருதியது வேறொன்றே யாகும். புறத்தே நாணுடையார் போன்று நடித்து, மதுவை மறைந்துண்ணும மக்கள் மகிழுமாறுபோல, இருவரும் தமக்குள்ளே மகிழ்கின்றார்கள். இன்னும இவ்விருவர் கண்களும் தம்முள் பேசிக்கொள்கின்றன; ஆதலால் இவ்விருவரும் முன்னரே களவொழுக்கமுடையாரெனத் தோழி நிச்சயிப்பாள்.

தோழி குறிப் புணர்தல்.

இவ்வாறு தமது காதலைத் தோழியும் உணர்ந்தாளென்று தெரிந்த பின்னர், தலைமகன் தன் குறையை

முடிக்குமாறு அத்தோழியை அடுத்தடுத்து நெருக்கத் தொடங்குவான். தழையும் கண்ணியும் கையிலேந்தி, பல நால் குறையிரந்தும், தன் விருப்பம் முற்றுப் பெறாத தலைமகன் தோழியைப் பார்த்து "இதுகாறும் எனது விருப்பம், உன்னால் முடியுமென்று கருதி வந்து முயன்றேன். இப்பொழுது அது உன்னால் முடியாதென்று உணர்ந்தேன். பெருங்காதலால் உழந்து வருந்தும் எனக்கு இனி மடலேறி உயிர் துறத்தலே யன்றி வேறு வழியில்லை" யென்று தலைவன் கூறுவான்.

தலைவன் தோழியிடம் தன்குறையிரத்தல்.

"காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல் அல்லதில்லை வலி"

என்று நாயனார் கூறியவாறு மடல் ஏறத்துணிவான். இவ்வாறு சொல்லக் கேட்ட தோழி பின்னும் சில காலம் தான் தலைவனுடன் பேச எண்ணி, நாணும், நல்லாண்மையும் உடைய உம்மால் மடல் ஏறுதல் இயலாது என்று கூறுவாள். அதைக் கேட்ட தலைவன்

மடலேறத் துணிதல்.

"நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுற்றேன்
காமுற்றார் ஏறும் மடல்"

என்று இயம்புவான்.

முற்காலத்தில் நான் நாணும் நல்லாண்மையும் உடையனா யிருந்தேன். ஆனால் அவ்விரண்டும் இப்போது என்னைவிட்டு நீங்கினமையால், மடல் ஏறு

வதில் சிறிதும் பின்வாங்க மாட்டேன் என்று தலைவன் உறுதியாக எடுத்துரைப்பான். பின்னும் தோழி அவனைப்பார்த்து 'மடலூர்வதற்கு ஏற்ற காலமும் பொழுதும் போய்விட்டதே, நீர் இனி எவ்வாறு மடலேறுவது' என்று வினவ,

> "மடலூர்தல் யாமத்து முள்ளுவேன், மன்ற
> படல் ஒல்லா பேதைக் கென்கண்"

என்று, "பேயும் கண்ணுறங்கும நள்ளிருள் யாமத்தும் யான் உறக்கம் கொள்ளாது மடலேறுதலை கருதா நிற்பேன்" என்று தலைவன் மிக உறுதியாகக் கூறுவான். இத்தகையு மன உறுதியைககண்டு ஆற்றுளாய தோழி, தலைவனைப்பார்த்து "நீர் அவ்வாறு மடலேறி இறந்து படலாகாது, நும் குறையை நானே முடித்துத் தருகின்றேன். நும்மால் கருதப்பட்டுள்ள தலைமகள் என் மாட்டுப் பெரிதும அருளுடையாள்" என்று உறுதிகூறக் கேட்டுத் தலைவன் மனமகிழ்ந்து, தன் குறை நிறை வெய்தினனேபோல் அவ்விடம் விட்டுப் பெயர்வான். தலைவன் போனபின்பு, தோழி தலைமகள் பால்சென்று, என் உயிரனையாய்! நமது தினைப் புனத்துக்கு அடுத்தடுத்து, தழையும் கண்ணியும் கொண்டு பெருந்தகையான் ஒருவன் வருகின்றான். பலகால் வந்தும், தன்குறை நிறைவுறாமையால் பெரிதும் வருந்துகின்றான்.

தோழி தலைவன் கருத்தை முடிப்பதாகச் சொல்லித் தேற்றுதல்.

> " கைதை வேலிக் கழிவாய் வந்துஎம்
> பொய்தல் அழித்துப் போனார், ஒருவர்
> பொய்தல் அழித்துப் போனார், அவர், நம்
> ஐயன் மனம் விட்டகல்வாரல்லர் "

என்று மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பிக்கத் தலைவியும் தன் இணக்கத்தைக் குறிப்பால் உணர்த்துவாள். உடனே தோழி, தலைவனிடம் விரைந்து சென்று, நிகழ்ந்ததைக்கூறி, இருவரையும் ஒரு பொழிலிடத்தே கொண்டு சேர்த்துத தான் பூக்கொய்வாள் போல, அவ்விடம் விட்டு நீங்குவாள். இவ்வாறு தனியளாய தலைமகளொடு, தலைவன் கலந்து மகிழ்ந்து பின்பிரிந்து செல்வான். இதுபோலவே பின்னும் தோழியால் குறிக்கப்பெற்ற இடத்தைப் பகலிலும் இரவிலும் தலைமகன் அடைந்து, தலைவியுடன் கலந்து இன்பம் எய்துவான்.

தோழி தலைமகளிடம் மெலிதாகச் சொல்லுதல்.

தலைமகள் உடம்படுதல்.

இவ்வண்ணம் பலகாலும் வந்து இன்பம் நுகருமிடத்து, அக்கள வொழுக்கம் தலைமகளது நற்றாயாலும், சுற்றத்தாராலும் அறியப்படுமாயின் இழுக்காம என்று அச்சம்கொண்டு, தோழி தலைமகனிடம 'இத்தகைய மறைவொழுக்கம உமது பிறப்பிற்கும் சிறப்பிற்கும் பொருந்தாததாகும. இனி நீர் ஊரார் அறியத் தலைமகளை மணஞ்செய்து கொள்ளுதலே தகுதி' யென்று குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கூறுவாள்.

"வாரித்தரள நகைசெய்து, வண்செம் பவளவாய் மலர்ந்து
சேரிற் பரத வலைமுன்றில் திரையுலாவு கடல்சேர்ப்ப
மாரிப் பீரத்து அலர் வண்ண மடவாள் கொள்ளக் கடவுள்
வரைந்தாரிக் கொடுமை செய்தாரென்று அன்னையறியின்
என்செய்கே"

என்றும், உங்களிருவர் களவொழுக்கம் ஊரரால் அறியப்பட்டு எங்கும் பேரலராக எழும்பிப் பரவி, நிறைந்துள்ளது என்றும் சொல்லக்கேட்ட தலைமகன் விரைந்து அவள் விரும்பியவாறு மணம் செய்யாது பின்னும் களவொழுக்கத்தையே கருதி நிற்பான். இவ்வாறு நாட்டில் அலர் எழும்ப, தலைவிக்குத் துன்பங்கள் பல வரும்.

தோழி தலைவியை மணம்புரியுமாறு தலைவனை வேண்டல்.

ஊரில் அலர் எழும்புதல்.

அவள் வீட்டை விட்டு வெளியே போகலாகாதவாறு கடுங் காவல் அமைக்கப்படும். காவலின் கடுமையால் காதலரைக் காணாது தலைமகள் பெரிதும் மனம் வருந்திப் பசந்து மெலிவாள். இவ்வாறு தலைமகள் மெலிந்தது கண்ட அவளது நற்றாய் முதலியோர் தோழியினிடம் இம்மெய் வேற்றுமைக்கு காரணம் ஏதேனு முண்டோ என வினவுவார்கள். அப்பொழுது அறிவினால் மிக்க அத்தோழி தாயது அறிவினோடும், தலைமகள் பெருமையோடும், கற்பினோடும், தனது காவலோடும், உலகியலோடும் மாறுபடாத வாறு மாற்றம் உரைப்பாள். "அன்னாய்! என்னாலும் அறியப் பெறுவது சிறிது உண்டு" என்று தோழி கூறத்

தலைமகள் வருந்துதல்.

தொடங்கி, "எங்கள் இருவரையும், குதலை தோர்க் குழலிப் பருவத்தே மாழைகலந்த ஏழையாளரோடு நாட்கோலஞ் செய்து விளையாடி வரும்படி நீ அனுப்பினை.

காரணம் கேட்ட தாய்க்குத் தோழி யுரைத்தல்.

நாங்களிருவரும் அவ்வாறே சென்று வெண்மலர் பரந்த ஒரு தண்மலர்ப் பொழிலிடை விளையாடி நின்றேம். நின்றபொழுது பெருந்தகையாளன் ஒருவன் ஒரு சுனைக் குவளைப்பூக் கொண்டு அவ்வழியே வந்தான். நின்மகள் அவனை நோக்கி 'அப்பூவினை என்பாவைக்கு நீ அணியத்தர வேண்டும்' என்றாள்.

மலர்கொடுத்தான் என்றல்.

அவனும் ஒன்றும் பேசாது பூவைக்கொடுத்து நீங்கினான். இது எங்கள் அறியாப் பருவத்தே நிகழ்ந்ததாகும். பின்னும் ஒரு நாள் நாங்கள் இருவரும் காவலிருந்த தினைப்புனத்திலுள்ள தினையையும் கவர்ந்து கொண்டு எம்மையும் சினந்து சீறிய ஒரு பெரிய யானையை அவ்வண்ணல் தன் அம்பால் எய்து எம்மைக் காத்தான்.

இடர்தீர்த்தான் என்றல்.

இன்னும் ஒரு பொழுது நாங்களிருவரும் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த காலத்தில் அந்நீரானது எங்களை இழுத்துச் செல்வதைக் கண்ட வேலன் போன்ற அவ்வருளாளன் அப்பொழுது வந்து உதவி எங்கள் ஆருயிர் காத்தான். இப்பெருந்தகையாளனிடம் தலைமகள் காதலாற் கலந்துள்ளாள் ஆதலால், நீங்கள் வெறியாட்டமர்ந்தும, வேறு மணம் பேசியும்

போந்த செயல் கேட்டும் பெரிதும் வருந்தினமையால் அவள் நலிந்து மெலிந்து வாடினாள் போலும்" என்று சொல்லி முடிப்பாள். இவ்வாறு தோழி கூறக் கேட்ட தலைமகளது பெற்றோரும் உற்றோரும், " தம் குலமகள் இங்ஙனம் தனக்குரிய காதலனைக் கூடிக் கற்புக் கடம் பூண்டாள் " என்று களிமகிழ் வெய்தி, அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட காதலனுக்கு மணஞ்செய்து மகிழ்வாராயின் அது சிறப்பிற்கு உரியதாகும். அவ்வாறன்றி அவள் கருத்திற்கு மாறாக மணம் முடிக்கக் கருதுவாராயின், காதலர் இருவரும், கருத்து ஒன்றுபட்டு ஒருவரும் அறியா வண்ணம், வெளியேறுவதற்கு வேண்டும் சூழ்ச்சிகள் தோழி செய்தமைக்க, காதலன் தன் காதலியை உடன் கொண்டு தன் ஊர் நோக்கிச் செல்வான். இவ்வாறு தலைமகளை உடன் கொண்டு செல்லும் போது அவளுடைய சுற்றத்தார் திரண்டு வந்து இடைவழியில் தடுக்க, அப்பொழுது தனது பெற்றோரும் உற்றோரும் செய்யும் செயலுக்குச் சிறிதும் மனம் ஒவ்வாது, தன்காதலனைச் சார்ந்து கற்பின் வழி நிற்கும் தலைமகளது தன்மையைக் கண்டு, அவ்வறநெறிக்கு இடையூறு விளையாமல் தலைமகள் கருத்தில் தாமும் உடம் பட்டு, உறவினர் யாவரும் தாம் வந்த வழியே ஊர் நோக்கிச் செல்வார்கள். அதன் பின்னர், தலைவியும் தலைவன் ஊர் சேர்ந்து, இருவரும்

காதலர் இருவரும் வெளியேறல்.

தலைமகளைச்சார்ந்தோர் தடுத்தல்.

பயனற்று மீண்டு போதல்.

மணம்புரிந்து, இல்லறமாகிய நல்லறத்தை இனிது நடத்தி வாழ்வார்கள்.

காதலர் இல்லறம் நடத்தல்.

இவ்வாறு காதலனும் காதலியும், மலரும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும் ஒன்றி வாழ்ந்து, " சுரும் புணக் கிடந்த நறும் பூஞ் சேக்கையில், கரும்பும் வல்லியும், பெருந் தோள் எழுதி முதிர் கடல் ஞாலம் முழுவதும் விளக்கும், கதிர் ஒருங்கிருந்த காட்சிபோலக்" கலந்து மகிழ்ந்து, " மறப்பருங் கேண்மையொடு, அறப்பரி சாரமும், விருந்து புறந்தரும் பெருந்தண் வாழ்க்கையும்" உடையாராய் இன்புற்று வாழ்வார்கள். இவ்வாறு வாழும் காலத்தில், தலைவன் பல காரணங்களால் தலைவியை விட்டுப் பிரிய நேரும். இக்காரணங்களை இறையனார் அகப்பொருள் அறுவகையாக வகுத்துக் கூறுகின்றது. கல்வியின் பொருட்டும், காவல் காரணமாகவும், சமாதானத்தின் பொருட்டும், அரசாங்க நன்மையின் பொருட்டும், பொருள் ஈட்டும் பொருட்டும், விலை மாதர் பொருட்டும், தலைமகன் தலைமகளை விட்டுப் பிரிவான.

தலைமகன் தலைமகளைப் பிரிதல்.

தலைவன் முன்னரே அறிவு நூல்களையெல்லாம் அறிந்தவனேயாயினும், பிறநாடுகளிலும் சென்று தனது உலக அறிவைப் பெருக்கிக் கொள்ளக் கருதிப் பிரியினும் பிரிவான். அல்லது நாடாளுமிடத்து, கூனும், குருடும், வறியோரும், முதியோரும் ஆகிய இவரது குறை

கேட்டு நிறை செய்யும் பொருட்டும், நாட்டில் பசியும், பிணியும் நீங்கி, வசியும் வளனும் வளர்ந் தோங்குவதற்கு இன்றியமையாத காவளர்த்தும், குளந் தொட்டும், வளம் பெருக்குதற் பொருட்டும் தலைவன் பிரியினும் பிரிவான். அன்றியும் இரு பெரு வேந்தர், தம்முள் மாறு பட்டுக் கலாம் விளைக்க முனைந்து நிற்கு மிடத்து அவ்வரசரது நாட்டில் வாழும் மக்கள் பாலும், மற்றைய உயிர்கள் பாலும், வைத்த பேரன்பினால் தானே சென்று இருவரையும் இணக்கி வெம்போர் விலக்கும் பொருட்டுத் தலைவன் பிரிய நேரினும் நேரும. இன்னும் அரசாங் கத்திற்குரிய போர்த்தொழில் முதலிய பிறகாரணங்க ளாலும், தலைவன் தலைமகளைப் பிரிய நேரும். இதுவு மன்றி, தலைமகன் தனது முன்னோரால் சேர்த்து வைக்கப் பெற்ற பலவகைப்பட்ட பொருளெல்லா மிருப்பினும், அவற்றைத் துய்ப்பது, ஆண்தன் மைக்கு அழகன்றென நினைந்து, தனது உழைப்பால் ஈட்டும் பொருளை வறியார்க்கு வழங்கி, வள்ளலாக வாழ நினைத்து, அப்பொருள் சேர்க்குமாறு தலைமக ளைப் பிரியினும் பிரிவான். இன்னும் குழலும், யாழும் எழிலுற எத்தி, செழுசெவிய கஞ்சநிமிர் சீறடியராகி, அஞ்சொல் இளமஞ்ஞை யென, அன்னமென மின்ன, வஞ்சியென நஞ்சமென ஒளிரும்,வஞ்சமாதர்பால், ஈடு பட்டுத் தலைவன் பிரிய நேரினும் நேரும. இவ்வாறு தலைமகன் பிரிந்து செல்ல, தனியளாயமைந்த தலை

பிரிவு நேர்தற்கு காரணம்.

மகள் பிரிவாற்ருது பெரிதும் வருந்துவாள். தீயானது தொட்டாரைச் சுடுமேயல்லால, விட்டாரை ஒரு போதும் சுடமாட்டாது. ஆனல காதலோ, காதலன் விட்டு நீங்கிய காலத்தும் சுடும தன்மையுடையதா

தலைமகள் வருந்திப் புலம்பல்.

யிருக்கின்றது, என்று வருந்திப் பிரிவாற்ருமை யாகிய துன்பத்தால் நலிந்து மெலிவாள். காதல் நோயைப் பிறரறியாதவாறு மறைப்பினும் அது மேன் மேலும் ஊற்றில் நீர் சுரப்பதுபோலச் சுரக்கின்றது என்று சொல்லி வருந்துவாள். காதல் நோயை மறைத்தலும் இயலாமல், பிறர்க்கு உரைத்தலும இய லாமல், மனம் தடுமாறுவாள். காதலாகிய கடலை நீந்திக் கடப்பதற்கு ஏதமற்ற புணை ஒன்றுமில்லையே என்று ஏங்கி வாடுவாள். காதல்

இரவை நோக்கி வருந்தல்.

நோயால் வருந்தும் தானே, இருள் செறிந்த இரவுக்கு அருந்துணையானதாக ஆற்ருது வருந்துவாள். தன் காதலரைக் காணவிரும்பி வருந்தும கண்களைப் பார்த்து "அன்று அவரை மிக விரைந்து நோக்கிய இக்கண்கள், இன்று தாமே இருந்து அழுகின்றன" என்று பரிதபிப்பாள்.

கண்களை நோக்கி வருந்தல்.

காதலர் வாராத பொழுதும் தூங்காது, வந்தபொழுதும் தூங்காது, தன் கண்கள் இடைவிடாது துன்பத்தையே அடைந்தன என்று அரற்றுவாள். தனக்கு நோயும்

பசலையைக்கண்டு வருந்தல்.

பசலையும தந்து, தன் சாயலையும், நாணையும் காதலர் கொண்டாரென்

றும, ஒளி நீங்கியவிடத்து ஓடிநிறையும் இருள்போல, தன் காதலன் நீங்கிய உடனே, பசபபுவந்து நிறைந்து விட்டதென்றும, தன் மனதிலும், வாககிலும், காத லன் தன்னை விட்டுப் பிரிய-திருகக, வஞ்சனையாகிய பசப்பு தன்னை எவ்வாறு வந்து சேர்ந்தது என் றும் நினைந்து நினைந்து நெஞ்சம் சோர்வாள். தான் முன் தலைமகனுடன் கூடி நுகர்ந்த இன்பத்தை நினைத் தாலும பெருமகிழசசி தருதலால், தேனினும் காதல் இனிதென்று தெளிவாள். தனது நெஞசததில், பிறரை, வாராமல் பாதுகாத்துக் கொண்ட தன் காதலன், தன்னு டைய நெஞசின்கண் எப்பொழு தும் நாளுது வருகின்றான், என்று

காதலனது அருளின்மையை நினைந்து வருந்தல்.

சொலலி நலிவாள். முன்னாள் தாம் இருவரும் வேறல் லர் என்று சொலலிப் பின்னால் பிரிந்து வேறாய காதலர், பெரிதும் அருளற்றவர் என்று எண்ணி எண்ணி இரங்குவாள். தனது உயிர்க்கு உயிராகிய காதலனை நனவில் காணுதிருந்தும் கனவில் கண்ட அவனது எழில் லுருவத்தையே தன்மனதில் அழ கொழுக எழுதிப்பார்தது ஆனந்திப்பாள். நனவில தன் காதலனைக கண்ட இன்பமபோலவே, கனவில கண்ட இன்பமும் இனிதாயிருந்தது என்றும், நனவு என்ற ஒன்று இலலையாயின், தான் கனவில கண்டு களிதத காதலர் தன்னைப் பிரியாரென்றும, தம் காதலரை கனவில கண்டு அறி யாத மகளிரே, நனவில் வாராத காதலரை அன்பிலர் என்று நோவா

தலைவனைக் கனவில் கண்டு மகிழதல்.

றென்றும, பலவாறாக ஆற்றியிருப்பாள். பின்னும் மாலைப்பொழுது வந்தபொழுது மாரனது கணைகளால் நலிவுற்று மயங்கியிருப்பாள்.

" காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய் "

என்று நாயனார் கூறியவாறு, காதலானது காலையில் அரும்பாயிருந்து பகல்பொழுது முழுதும முகையாயிருந்து பின் மாலையில் மலரும் இயல்புடையதாகும. இன்னும் பிரிவாற்றாமையால், 'காதலியின் கண்கள், தலைமகனை நினைந்து நினைந்து

தலைமகள் மேனி நலம் அழிதல்.

அழுதலால், ஒளி மழுங்கியும, மணந்த நாளில் அழகொடு திகழ்ந்த தோள் மெலிந்தும், நுதல் பசந்தும், வளை கழன்றும, மேனி அழகும் நலமும அழிந்தும் தோன்றும. இன்னும் தலைமகள் தனது இயல்பாகிய நாணத்தால, அடக்கற்பாலனவாய குறிப்புகளை காதல் மிகுதியால் நிறையழிநது வெளியிடுவாள. இவ்வுண்மையை

" மறைப்பேன் மற்காமத்தை யானோ ; குறிப்பின்றித்
தும்மல் போல் தோன்றி விடும் "

என்று நாயனார் அருளினார்.

தனது காதலன் மீண்டு வருவதாகக் குறித்துச் சொல்லியிருந்த நாளை நினைந்து நினைந்து நெஞ்சம் குழைந்து வருந்தும தலைமகளுக்கு, ஒரு நாழிகை ஒரு நாளே போலவும, ஒருநாள் பலநாள் போலவும தோன்றும. கண்போன்ற தன் காதலர் வநது சேர்ந்

தால், அவரோடு புலப்பதோ,! அன்றிக் கலப்பதோ,! என்று தனக்குள்ளே ஐயுற்று நிற்பாள். தன் காதலனைக் கண்டபோதே, தன் தோள்மேலுள்ள பசப்புத் தானே நீங்கும் என்று நினைந்து தன்னுள்ளே மகிழ்வாள்.

தலைமகன் மீண்டு வருதல்.

இவ்வாறு தலைமகள் எண்ணி ஏங்கி யிருப்பத் தலைமகனும் தான் மேற்கொண்ட தொழிலை முடித்து, மீண்டு வந்து தன் கண்மணி போன்ற காதலியைக் கண்ணாரக்கண்டு களிப்பான். "என் கருத்திற்கிசைந்த கற்பகமே, மயிலாடுபாவாய், நீ எவ்வளவு தான் மறைப்பினும் உன் கண்கள் காதலை உரைக்கின்றனவே", என்று குறிப்புணர்ந்து கூறுவான். என் கண்ணிறைந்த காதலிகுப் நிறைந்த பெண் நீர்மை பெரிது என்று நலம் புனைந்துரைப்பான்.

காதலுணர்த்தல்.

அரும்பிலே அடங்கி நிற்கும் மணம் போல, எனது காதலியின் நகையுள் அடங்கியுள்ள கருதொன்றுண்டு, என்று கூறுவான். இவ்வாறு தலைமகன் கூறிய குறிப்புணர்ந்த தலைமகள், ஒன்றும் பேசாது, தன் தொடியையும், அடியையும் நோக்கி நாணுற்று நிற்பாள். பின் காதலர் இருவரும் கலந்து மகிழ்ந்து தாம் பெற்ற இன்பத்தைப் பலவாறு வியந்துரைப்பார்கள். தலைமகள் தன் நெஞ்சைப் பார்த்து " ஏ! நெஞ்சே, என் காதலனோடு ஊடுதற்காகச் சென்ற நீ அதனை மறந்து அவருடன் கூடுவதற்கு விரைந்து சென்று விட்டாயே, என் காத

லனைக் காணாத விடத்து அவன் செய்யும் தவறு களையே நினைந்து வருந்தும் நீ அவரைக்கண்ட போதே அவற்றை யெல்லாம் மறந்து விட்டாயே! அவர் நெஞ்சு என்னை நினையாமல் அவர் அளவிலே அடங்கி யிருப்ப, என் நெஞ்சே! நீ யேன் எனக்கென நில்லாமல், அவரிடம் சென்றாய்! இவ்வாறு அவர் பின் செல்வது உனது இயல்போ! அன்றிக் கெட்டார்க்கு நட்டார் ஒருவரும் இல்லை என்னும் உலக இயல்போ! துன்பம வந்த காலத்தில் நீயே எனக்குத் துணையாகாதவழி வேறு யார் தான் துணையாவார்! மாண்பு அற்ற உன்னோடு கூடி என்னுயிரினும் இனிய நாணத்தை யறந்து விட்டேனே!" என்று கூறித் தன் நெஞ்சொடு புலம்புவாள்.

தலைமகள் தன் நெஞ்சோடு பேசல்.

இவ்வாறு வாழ்ந்து வருகின்ற தலைவனுக்கும் தலைமகளுக்கும் ஊடல் உண்டாதலும் இயற்கையே யாகும். ஊடுதல் காமத்திற்கு இன்பம், என்று நாயனாரும ஊடலின் உண்மைத் தன்மையை எடுத்துரைத்தார். பெரும்பாலும், தன் காதலன் பொது மகளுடன் கூடிக் களித்திருந்தான் என்னும ஆற்றாமையால தலைமகள் மாட்டு ஊடல் நிகழும். அன்புபற்றி விரும்பாது, பொருள் பறறியே விருமபும, பொது மாதரின் இணக்கம் கேடு தரும் என்று நாயனார் நன்றாய் எடுத்துரைத்துள்ளார்.

ஊடல் இன்பம்.

"வரைவிலா மாண் இழையார் மென்றோள்
புரையிலாப் பூரியாகள் ஆழும் அளறு"

என்ற திருக்குறளில பொது மாதரது அணிசச மலரி னும மெலலிய தோள்களைப் புரையிலலாப் பூரியர்கள் ஆழும அளறு என்று மிக இழிவாக நாயனா எடுத் துரைத்தார். இன்னும 'மதி நலத்திற் சிறநத அறி வுடையார் பொது மாதருடைய புன்னலம் தோயார்,' என்று நாயனர் அருளுகின்றார். இததகைய பொது மகளிடம தன் காதலன் சென்று வந்தான் என்று உணர்ந்த தலைமகள், அவனோடு ஊடலாகி நிற்பாள். இவ்வாறு ஊடல் நிகழ்ந்த காரணம யாதென்று கேட்ட தோழிக்கு, தலைமகன் மிக நயமாக மறு மொழி கூறுவான். நான் என் கண்மணி மேற் கொண்ட காதலால, இம்மையில நாம பிரியோம என்று சொல்ல, அதற்கு மறுமைப் பிறபபில பிரி வோம என்று நான் பொருள் கொண்டதாக எண்ணி

ஊடலின் காரணம் உரைத்தல்.

அவள் கண்களில் கண்ணீா ததும பிறறு. இன்னும, அவனைப் பிரிந் திருந்த காலத்தில அவனையே இடைவிடாது நினைத்தேன் என்னும கருத்துக் கொண்டு, 'நான் உன்னை நினைத்தேன் என்றேன்.' அவவாறு சொல்ல, நான் இடையே சிலகாலம் அவளை மறந்திருந்து பின் நினைத்ததாகப் பொருள் கொண்டு என்னிடம் புலந்தாள். இன்னும், நாங்கள் இருவரும ஒருங்கே இருந்த போது, நான் தும்மினேன் உடனே அவள் என்னைப் பார்த்து 'உமது காதலுககுரிய பெண்களில் எவர் நினைக்க நீர் இபபோது தும்மினீர்' என்று சொலலிப் புலந்து அழுதாள். 'தும்மினலை

இவள் தவறாக எண்ணுவாள் என்று எண்ணி, எழுந்து ஒரு தும்மலை அடக்கினேன்.' அதை அறிந்து நீர் காதலித்த பெண் 'உம்மை இப்போது நினைத்தலை நான் அறிய வொட்டாது மறைக்கப் பார்க்கின்றீரோ' என்று சொல்லிப் புலந்தாள். இவ்வாறு தலைமகன் கூறக்கேட்ட தோழி தனது இனிய மொழிகளால் தலைவியின் ஊடல் தீர்ப்பாள். ஊடலே காதலர்க்குக் கழி பேருவகை தருவதாகும் என்பது

> "உணலினும், உண்டது அறல் இனிது, காமம்
> புணர்தலின் ஊடல் இனிது"

என்னும் குறளால் இனிது விளங்கும். இன்னும்

> "துனியும் புலவியும் இல்லாயிற்காமம்
> கனியும் கருக்காயும் அற்று"

என்று ஊடலின் தன்மையை நாயனார் நன்றாக எடுத்துரைத்தார். இவ்வாறு, ஊடலாலும் கூடலாலும் இன்புற்று உடலே இரண்டாய் உயிர் ஒன்றாய் ஒன்றி வாழும் காதலர் இருவரும் பலவகைப் பேறுகளும் பெற்று வாழ்ந்தும், இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமையைத் தேறித் தெளிந்து,

உலகின் நிலையாமை கண்டு பேரின்பவழி நிற்றல்.

> "பரங்கரும் சிறப்பிற் பல்லாற்றானும்
> நில்லாவுலகம் புல்லிய நெறித்தே"

என்னும் உண்மை யுணர்ந்து, சிறுநெறி விலக்கிப் பெருநெறி பிடித்தொழுகும் பெருமைபெற்று முழு

முதற் பொருளாய இறைவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் எய்துவர்.

> "காமம் சான்ற கடைக்கோள் காலை
> ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
> அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பண்பே"
>
> —தொல்காப்பியம்.

திருக்குறள் உவமைத்திறம்

உலகில் வழங்கி வருகின்ற ஒவ்வொரு மொழியிலும் நூல் இயற்றுகின்ற புலவர்கள் பலவகை அணிகளை ஆங்காங்கு அமைத்து தமது நூலை அழகு செய்வது வழக்கம். அவ்வாறே தமிழ் மொழியிலும் நூல் எழுதப் போந்த புலவர்கள் சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் தருவனவாகிய பலவகை அணிகளை அமைத்து அழகு செய்துள்ளார்கள். இத்தகைய அணிகளில் உவமை அணி யென்று சொல்லப்படுவதும் ஒன்றாகும்.

உவமை அணியின் தன்மை.

ஒரு நூலாசிரியர் தாம் எடுத்துக்கொண்ட பொருளை இனிது விளக்கி மேம்படுத்தும் பொருட்டு அதனோடு மற்றொரு தெரி பொருளை ஒப்பிடும் பான்மையே உவமை யென்று சொல்லப்படும். இத்தன்மை வாய்ந்த அணி பலவகையாக இலக்கியங்களில் பயின்றுள்ளது.

உவமை அணியை ஆளும் தன்மையில் சங்கமருவிய நூல்களுக்கும், பிற்காலத்திய நூல்களுக்கும்

பெரிதும் வேற்றுமை காணப்படுகின்றது. சங்க நூல்களில் காணப்படுகின்ற உவமைகள் பெரும்பாலும் மிகை படாமல், எடுத்துக் கொண்ட பொருளை இனிது மனதில் விளக்குகின்றன. ஆனால் பிற்காலத்திய சில நூல்களில் ஆளப் பட்டுள்ள உவமைகள் வரம்பு இகந்து மிகை பட்டு வனப்பின்றி அமைந்திருக்கின்றன.

சங்க நூல்களும், பின் நூல்களும்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அமைத்திருக்கின்ற உவமைகள் பெரும்பாலும் செல்வமும், ஆழமும், அழகும உடையனவாய், ஈவில்தொறும் நமக்கு இன்பம் தந்து மகிழ்விக்கின்றன. உவமைக்காக எடுத்துக்கொள்ளும் பொருளும், எப்பொழுதும் நம்மைச்சுற்றிலும் காணப்படும் சாதாரணப் பொருள்களாகவே இருக்கக் காண்கின்றோம். இத்தகைய சாதாரணப் பொருள்களைக் கொண்டு உயரிய உண்மைகளை ஆசிரியர் விளக்கும் திறம் கண்டு மகிழ்வதற் குரியதாகும். உலகப் பொருள்களை ஒரு புலவர் பார்ப்பதற்கும், மற்றையவர்கள் பார்ப்பதற்கும் பெரிதும் வேற்றுமை யுண்டென்று அறிவுடையோர் கருதுகின்றார்கள். மற்றைய மக்களுக்குச் சாதாரணப் பொருள்களாகவே தோன்றும் உலகப் பொருள்கள் புலவர்கள் மனதில் மாண்புடைய கருத்துக்களையும், எண்ணங்களையும் எப்பொழுதும் எழுப்புவனவாகும. நறுமணம் கமழும்

சாதாரணப் பொருளை உவமையாகக் கூறல்.

நந்தன வனத்தில் செல்லும் ஒருவன், அதன்கண் அழகிய பல நிறங்களோடு அமைந்து விளங்கும் மலர்களைக்கண்டு மகிழ்வான். அம்மலர்களின் இனிய மணத்தை நுகர்ந்து இன்பமடைவான். ஆனால் ஒரு புலவன் அந்நந்தன வனத்தில் செல்வானானால், அங்கு அவன் கண் எதிரே தோன்றும் ஒவ்வொரு மலரும், இறைவனது பெருங்கருணைத் திறத்தையும், பேராற்றலையும் விளக்கிக்காட்டும் விழுமிய பொருளாக அமையும். மலரில் அமைந்து விளங்கும் மணமானது இறைவனுடன் இரண்டறக் கலந்த ஆன்றோர் தன்மையை அறிவுறுத்தி நிற்கும். இதுவே கற்றோர் ஒரு பொருளைக் காண்பதற்கும், மற்றோர் அதனைக் காண்பதற்கும் உள்ள வேற்றுமையாகும்.

இத்தன்மையை நாயனார் குறளில் நன்கு காணலாம். தலையினின்றும் மயிரானது பிரிந்து கீழே விழுவதை நாம் ஒவ்வொரு நாளும் கண்டிருக்கின்றோம். ஆனால் அக்காட்சி நம்முடைய மனதில் ஓரெண்ணத்தையும் எழுப்பியதில்லை. ஆனால் இப்பொருளை உவமையாகக் கொண்டு நமது ஆசிரியர் ஓர் உயர்ந்த உண்மையை வெளியிடுகின்றார்.

தலைமயிரும் இழிந்த மக்களும்.

> "தலையின் இழிந்த மயிர் அனையர், மாந்தர்
> நிலையின் இழிந்தக் கடை"

என்னும் குறளில் கண்ட உவமையைச் சிறிது கருதுவோம். மக்களாய்ப் பிறந்தவர்கள், தமக்குரிய நிலையினின்றும் தவறுவார்களானால், அவர்கள் தலையினின்

றும் இழிந்த மயிரினை ஒப்பார்கள் என்பது இக்குற ளின் கருத்தாகும். மக்களாய்ப் பிறந்தவர்கள் தமது உயர்பிறப்பிற்கு உரிய ஒழுக்கத்தில் தவறாதவர்களாய், தமக்குரிய நிலையில் வழுவாது இருப்பார்களே யானால், எல்லாராலும் போற்றப் படுவார்கள். ஆனால் மக்கள் தம் நிலையினின்றும் தவறுவார்களாயின், எல்லாரா லும் அவமதிக்கப்பட்டு இழிவடைவார்கள். தலையி லுள்ள மயிரானது தனக்குரிய உயர்ந்த இடத்தில் இருக்குமளவும், நறு நெய்பூசி, நன்மலர் சூடி, பூவும் புகையும், மேவிய விரையும் பொருந்தித் திகழும். ஆனால் அம்மயிரானது, தன்னிலையினின்றும் தவறிக் கீழே விழுமானால் தனது வளமும் வனப்பும் இழந்து காலால் மிதியுண்டு, புழுதியில் விழுந்து, துடைப்பத் தால் புழைக்கடையில் தள்ளுதற்குரிய தன்மை எய் தும். இவ்வுவமையின் பொருத்தமும், உண்மையும் மிகத் தெளிவாக விளங்குகின்றது.

இன்னும் ஒரு உவமையை எடுத்துக்கொள்வோம். உறங்குவதும், விழிப்பதும் நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் செய்கின்ற தொழில்களாம். சிலர் தம்மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றில், ஒரு நாளிலேயே பலமுறை உறங்குவதும் விழித்த லும் உண்டு. ஆயினும் இந்நிகழ்ச்சி நம்மனதில் யாதொரு அரிய கருத்தையும் தூண்டியதில்லை. ஆனால் நம் தெய்வப்புலவர், இச்சாதாரணப் பொருளைக் கொண்டு, விளக்குதற்கரிய மறுபிறப் புண்மையை நன்கு விளக்குகின்றார்.

“உறங்குவதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு”

மக்கள் இவ்வுலகில் இறத்தலும், பிறத்தலும், இயல்பாகவே மாறி மாறி வருகின்றது. பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் மீண்டும் பிறத்தலும், உறங்குவதும் பின் உறக்கத்தினின்றும் விழித்தலும் போலவே இருக்கின்றது. ஒருவன் உறங்கும் காலத்தில், அவனுடைய ஐம்பொறிகளும் அயர்ந்து, உணர்வு அற்றிருந்தாலும், மனம் அயராத நிகழ்ச்சியுடையதாய் இருத்தல் போல, “இறக்கும்பொழுது உடல் ஒன்றே பொன்றி ஒழியுமன்றி, அவ்வுடம்பில் தங்கியிருந்த உயிர், அழியாது மறுபிறப்பில் சென்று சேரும்.” இவ்வுவமையின் நயத்தை உணர்ந்தே, மணிமேகலை நூல்செய்த சீத்தலைச் சாத்தனார்,

உறங்கலும் விழித்தலும் இறத்தலும் பிறத்தலும்.

“பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்

என்று திருக்குறள் உவமையே அமைத்து தம் நூலை அழகுசெய்தனர்.

இன்னும் மற்றொரு சாதாரண உவமையால் நாயனார் நட்பின் திறத்தினை நன்றாக எடுத்துரைத்தார்.

“உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு”